


# සැම සුරැකි සාමකාමී දේශයක්
# பாதுகாப்பானதும், அமைதியானதுமான நாடொன்றுக்காக
# For a Secured and Peaceful Country

## ආරක්ෂක අමාත්‍යාංශය
## பாதுகாப்பு அமைச்சு
## Ministry of Defence

කාර්යසාධන වාර්තාව
செயல்திறன் அறிக்கை
Performance Report

2015

## பொழிப்பு


| | பக்க இல. |
|---|---|
| கௌரவ பாதுகாப்பு அமைச்சரின் செய்தி | i |
| கௌரவ பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் செய்தி | ii |
| பாதுகாப்புச் செயலாளரின் செய்தி | iii |
| பாதுகாப்பு இராஜாங்க அமைசின் செயலாளரின் செய்தி | iv |
| அமைச்சின் கடமைகளும் தொழிற்பாடுகளும் | v |
| நோக்கு மற்றும் பணி | vi |
| நிறுவனக் கட்டமைப்பு | vii |
| **அமைச்சுப் பிரிவுகளின் செயலாற்றுகை** | |
| 01. கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு | 1 -2 |
| 02. பாதுகாப்புப் பிரிவு | 3 - 4 |
| 03. தொழில்நுட்பப் பிரிவு | 5 - 8 |
| 04. பாரளுமன்ற மற்றும் சிவில் அலுவல்கள் பிரிவு | 9 - 10 |
| 05. நிர்வாகப் பிரிவு | 11 - 15 |
| 06. சிவில் பாதுகாப்புப் பிரிவு | 16 - 17 |
| 07. அபிவிருத்திப் பிரிவு | 18 |
| 08. நிதிப் பிரிவு | 19 - 20 |
| 09. உள்ளகக் கணக்காய்வு பிரிவு | 21 |
| 10. வருடாந்த செயலாற்றுகை பிரிவு | 22 - 28 |
| 11. பாதுகாப்பு ஊடக மையம் | 29 - 33 |
| 12. இராணுவ தொடர்பு அலுவலகம் | 34 - 38 |
| 13. பாதுகாப்பு தலைமை பிரதானி காரியாலயம் | 39 - 44 |
| **அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களின் செயலாற்றுகை** | |
| 14. கரையோர பாதுகாப்பு திணைக்களம் | 45 - 52 |
| 15. சிவில் பாதுகாப்பு திணைக்களம | 53 - 55 |
| 16. ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி | 56 - 63 |
| 17. அரச வேவு சேவை | 64 - 65 |
| 18. முன்னேற்ற அறிக்கை | 66 - 72 |
| 19. ஒன்றினைந்த மொழிப்பயிற்சி சேவை நிலையம் | 73 -74 |
| 20. ரக்னா ஆரக்சக லங்கா | 75 - 78 |
| 21. வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக் நிறுவனம் | 79 - 85 |
| 22. மாணவருக்கான படையணி | 86 - 91 |
| 23. ரணவிரு சேவை அதிகார சபை | 92 - 98 |
| 24. பாதுகாப்பு சேவை மற்றும் பணியாட்கள் கல்லூரி | 99 - 101 |
| 25. பாதுகாப்பு சேவை கல்லூரி | 102 - 105 |

# கௌரவ பாதுகாப்பு அமைச்சரின் வாழ்த்து செய்தி



தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், முப்படையினர் உள்ளிட்ட அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் பணியாளர்கள் குறிப்பிடத்தக்க வகையில் நாட்டிற்காகப் பணியாற்ற பங்களிப்புச் செய்திருக்கின்றனர்.

மூன்று தசாப்தகால சிவில் யுத்தத்தின் பின்னர், துன்பப்பட்ட சிவிலியன்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் அபிவிருத்திச் செயன்முறைகளை விரைந்து அதிகரிப்பதற்குச் சமாந்தரமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்புக்கான வசதிகளை வழங்குவதற்காகவும் அமைச்சானது முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் புதுமையான பார்வை ஒன்றுடன் குறிப்பிடத்தக்க ஒரு வருடமாக கடந்த வருடத்தைக் கருத முடியும். இது வெறுமனே பொருள் அபிவிருத்திக்கான நற்சகுனங்களை மட்டும் பிரதிபலிக்காது சமூக ஆன்மீக அபிவிருத்தியையும்கூடப் பிரதிபலிக்கும் ஒரு வருடமாக இருந்தது. ஏனெனில் அமைச்சானது முப்படையினருடனும் மற்றைய இணைந்த நிறுவனங்களுடனும் சேர்ந்து கடுமையான முறையில் அரசாங்க சேவைக்காக அர்ப்பணித்த வருடமாக இருந்தது.

யுத்தத்தை வெற்றி கொண்ட படையினரின் கௌரவத்தை உறுதிப்படுத்துவதற்கான சாத்தியமான ஒவ்வொரு படிமுறையினையும் எங்களால் எடுக்க முடிந்திருந்ததுடன் அவர்களது நலன்களையும் மிகப்பெரிய நன்றியறிதலுடன் கருத்திலெடுக்க முடிந்திருந்தது.

நாட்டிற்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்பட்ட தப்பபிப்பிராயங்களையும் குற்றச்சாட்டுக்களையும் விடுவித்ததன் மூலம் நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதற்கு முடிந்திருந்தமையானது ஒரு பெரிய சாதனையாக இருக்கிறது.

மேலும், நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியை அடைவதற்கான பாரிய முயற்சியுடன் நீங்கள் ஆற்றிய சேவைக்கும் சமூக மதிப்பினை மதிப்பீடு செய்து உங்களது கடமையைப் பொறுப்புடன் நிறைவேற்றிய அதேவேளை, எதிர்காலச் சந்ததியினருக்காக ஒரு பாதுகாப்பான / சமாதானமான நாட்டினை ஒப்படைத்தமைக்காகவும் எதிர்வரும் வருடங்களுக்காக நீங்கள் வலிமையும் தைரியமும் அடைய வேண்டுமென நான் விரும்புகிறேன்.

அத்துடன், பாதுகாப்பான நாடு மற்றும் ஒரு சுதந்திரமான தேசம் ஆகியவற்றை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்ட முப்படையினர், அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோருக்கு எனது நன்றியுணர்வுடன்கூடிய நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மைத்திரிபால சிறிசேன
பாதுகாப்பு அமைச்சர்

# கௌரவ இராஜாங்க பாதுகாப்பு அமைச்சரின் வாழ்த்து செய்தி



தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற முழுமையான நோக்கத்தைக் கொண்ட பாதுகாப்பு அமைச்சின் கடமையினை மதிப்பீடு செய்வதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றேன்.

நல்லாட்சியின் ஊடாக ஊழலற்ற ஒரு நாட்டினை உருவாக்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருக்கிறது. அதனுடன் சேர்த்து, தேசத்தினுள் மக்கள் சமாதானமாகவும் சுதந்திரமாகவும் வாழும் பொருட்டு நீடித்திருக்கத்தக்க சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தமை மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

சர்வதேச ரீதியிலான குற்றச்சாட்டுக்களிலிருந்து நாட்டின் நற்பெயரினை பாதுகாப்பதற்காக அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டமை பாராட்டுதற்குரியதாகும். மேலும், அமைச்சானது நாட்டினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோத கடத்தல்களை முறியடிப்பதற்கும் குழப்பகரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் உபாயரீதியிலான நடவடிக்கைகளை அமைச்சு எடுத்திருக்கிறது.

இவற்றிற்கு மேலதிகமாக, பயங்கரவாதத்திலிருந்து நாட்டினை மீட்டெடுத்த படையினருக்கு கௌரவத்தையும் நன்றியுணர்வையும் காட்டுமுகமாக அவர்களின் நலன்புரித் தேவைகளை மேம்படுத்துவதிலும் அமைச்சு ஈடுபட்டது. எனவே முப்படையினர் மற்றும் அமைச்சுடன் இணைந்துள்ள மற்றைய நிறுவனங்கள் ஆகியவற்றை முறையாக ஒழுங்குபடுத்தி நிர்வகிப்பதன் மூலம் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான பாதுகாப்பு அமைச்சின் முயற்சியையும் ஆதரவினையும் நான் பாராட்டுகின்றேன்.

ருவான் விஜேவர்தன
இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர்

# கௌரவ பாதுகாப்பு செயலாளரின் வாழ்த்து செய்தி



சமாதானத்தையும் தேசிய பாதுகாப்பையும் கட்டியெழுப்புகின்ற தேசிய பொறுப்பினைக் கருத்திற் கொண்ட முன்னிலையாளராக 2015 இல் அமைச்சினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளவும் கருத்திலெடுப்பதற்கு இது சரியானதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாகவும் இருக்கிறது.

அமைச்சானது மூன்று தசாப்தகால யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட துரித அபிவிருத்தி நடைமுறைகள் வரிசையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் அவர்கள் வழங்கிய மேன்மையான சேவையின் மூலம் தமது பங்களிப்பினை நல்கியிருந்தனர்.

அபிவிருத்தியினையும் அதேபோன்று நாட்டின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக ஒரு புதிய ஊக்கத்துடன் முக்கியத்துவம் வாய்ந்ததொரு ஆண்டாக கடந்த வருடம் திகழ்ந்தது. அது பௌதிக அபிவிருத்திக்கான சிறந்த சகுனமாக மட்டுமல்லாது சமூக, ஆத்மார்த்த அபிவிருத்தியாகவும் இருந்த அதேவேளை முப்படையினர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுடன் இணைந்து அமைச்சும் பொதுமக்களுக்கான பொறுப்புடமை வாய்ந்த சேவைக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சிறந்ததொரு வருடமாகத் திகழ்ந்தது.

யுத்தத்தை வெற்றிகொண்ட யுத்த நாயகர்களின் மேன்மையினை உறுதிப்படுத்துவதற்குச் சாத்தியமான ஒவ்வொரு படிமுறையினையும் நாங்கள் எடுத்திருப்பதுடன் அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துமுகமாக அவர்களது நலன்புரி விடயங்களுக்கு முன்னுரிமையை வழங்கு கிறோம். நாங்கள் உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் நாட்டிற்கு எதிராக இருந்த தப்பபிப்பிராயங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களை விடுவித்து நம்பிக்கையை அளிக்க முடிந்திருந்தமை மிகப்பெரிய சாதனையாக இருந்தது.

இவற்றுக்கு மேலாக, எதிர்காலச் சந்ததியினருக்கு சமாதானமானதும் பாதுகாப்பானதுமான நாட்டினை வழங்கும் அதேவேளை சமூகப் பெறுமானங்களை மதிப்பிட்டு கடமைகளை அர்ப்பணிப்புடன் ஆற்றுவதன் மூலம் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்திக்கான பின்புலத்தினைத் தயாரிப்பதற்கான பெருமுயற்சி ஒன்றை எடுத்திருந்ததைப்போல எதிர்வரும் வருடங்களுக்கும் அவற்றைத் தொடர்வதற்கான ஆற்றல், வலிமை மற்றும் மன உரத்தினைக் கொண்டிருப்பதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், முப்படையினர் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் அலுவலர்கள் அத்துடன் பாதுகாப்பான நாடு மற்றும் சுதந்திரமான தேசத்தின் பாதுகாப்பை முன்னிறுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அமைச்சு ஆகியவற்றுக்கு நன்றியுணர்வுடனனான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறி.கருணாசேன ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

# பாதுகாப்பு இராஜாங்க செயலாளரின் வாழ்த்து செய்தி



மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் அமைதி, சமரசம் ஊடாக தாய்நாடு மீண்டும் புதியதொரு திருப்பத்தை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கின்றது. இன்றை நாளாகும்போது இலங்கை தீவிர யுத்தத்திற்குப் பின் பொருளாதார, சமூக - அரசியல் மற்றும் கலாச்சாரம் போன்ற அனைத்து துறைகளிலும் வாகைசூடிய வண்ணம் விடியல் நோக்கி பிரவேசித்துள்ளது. உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை எய்தி, சவால்களை எதிர்கொண்டுள்ள தாயகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பாரதூரமான பொறுப்புக்கு தோள்கொடுத்து உதவுகின்ற பாதுகாப்பு அமைச்சுக்கு ஆதரவாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவன் விஜேவர்தன அவர்களின் வழிகாட்டலின் கீழ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சும் ஆற்றல் மற்றும் வலிமை போன்ற முயற்சிகளில் பங்குகொடுத்து உதவுகின்றது.

2015 தைப்பூசத்தில் புதிதாக நிறுவப்பட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, முன்நிகழ்வுகளைப் பற்றி நினைவு கூறும்போது நாம் பெற்றுள்ள சாதனைகள் எண்ணிலடங்காத வைகளாக உள்ளன. நாட்டின் ஒருமைப்பாட்டினை பாதுகாப்பதற்காக உயிர்தியாகம் செய்த மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களில் தங்கிவாழ்வோர் சமூகத்தில் உயர் அந்தஸ்துக்கு கொண்டுவந்து அவர்களை கௌரவமளித்தல் அவர்களின் நலன்கருதி “விருசர அட்டை” அறிமுகப்படுத்துதல் உள்நாட்டு வெளிநாட்டு மாணவர் படையினரின் பங்களிப்பில் “ரண்டபே” மாணவர் படை பயிற்சி மையத்தில் நடைப்பெற்ற “ஹர்மன்லோஸ் முகாம் 2015”இ ரூபா 65.6 மில்லியன் செலவில் பாதுகாப்புச் சேவைக் கட்டளை பணியாளர்கள் கல்லூரியில் நான்கு மாடிக்கட்டிடங்கள் 03 இன் நிர்மாணப் பணிகள் தொடங்குதல் மற்றும் அதில் ஒரு கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்தல்இ கொழும்புஇ மலே வீதியில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைக் கல்லூரியில் ரூபா 448.1 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள மாணவர் வதிவிடத்தில் நிர்மாணப் பணிகளைத் தொடங்குதல்இ குருணாகளை பாதுகாப்பு கல்லூரியிற்காக ரூபா. 215 மில்லியன் செலவில் மூன்று மாடிக்கட்டிடத்தை நிர்மாணித்தல்இ அதேபோன்று இந்த அமைச்சின் உத்தியோகத்தர்களின் சகோதரத்துவம்இ ஒற்றுமை மற்றும் வினைத்திறன் அதிகரிப்பதற்காக ரண்டபே பயிற்சி முகாம் ஒழுங்கமைத்த வதிவிட பயிற்சி செயலமர்வும் நாம் பெற்ற சாதனைகளின் சிலவாகும்.

இன்று தாயின் மடியில் தாலாட்டப்படுகின்ற மழலை நாளை எதிர்கால பிரஜையாவான். அக்குறித்த எதிர்கால குடிமகனுக்கு பாதுகாப்புமிக்க நாடொன்றை உருவாகுவது இன்றைய நாளில் எமது பொறுப்பாக மற்றுமல்லாது தலையாய கடமையாகவுள்ளது. இதற்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்பிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர்கள் கல்லூரி, பாதுகாப்புச்சேவைகள் கல்லூரி, ரணவிரு சேவா அதிகாரசபைஷ, தேசிய மாணவர் படை(NCC) போன்ற நிறுவனங்களில், சாதகமான செயலாற்றுகை பேணுவதற்காக குறுகிய காலத்துக்குள் முழு ஈடுபாட்டுடன் கடமையாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ.பி.ஜீ கித்சிறி**
செயலாளர்
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

## அமைச்சின் கடமைகளும், தொழிற்பாடுகளும்

2015 ஜனவரி மாதம் 18 ம் திகதிய 1897/15 ஆம் இலக்க வர்த்தமாணி அறிக்கையில் வெளியிடப்பட்டது போல பாதுகாப்பு அமைச்சின் கடமைகளும், தொழிற்பாடுகளும் பின்வருமாறு:

**கடமைகளும், தொழிற்பாடுகளும்**

- நிரல் 11 இல் பட்டியலிடப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சபைகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியனவற்றின் மேற்பார்வையின் கீழ் வரும் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும், கருத்திட்டங்களைத் தயாரித்தல்,
- பாதுகாப்புச் சேவைகளின் தொழிற்பாட்டுக்கு வசதியளிப்பதன் ஊடாக நாட்டிற்குப் பாதுகாப்பினை அளித்தல்.
- உள்நாட்டுப் பாதுகாப்பினைப் பேணுதல்
- அரச மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகியனவற்றுடன் தொடர்புடைய புலனாய்வுச் சேவைகள்
- வருகை தரும் புதிய படை வீரர்களுடனான உறவுகள்
- வெடி பொருட்கள் மற்றும் துப்பாக்கிகள்
- வெளிச்ச வீடுகளின் பராமரிப்பு (துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஏனையவைகள்)
- பாதுகாப்புச் சேவை ஆளணிக்கான உயர் கல்வி
- தனியார் பாதுகாப்புச் சேவைகளுடன் தொடர்புடைய விடயங்கள்
- கடலோரப் பாதுகாப்பு சேவை மீட்புச் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம்
- நிரல் 11 இல் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வையின் கீழ் வரும் ஏனைய சகல விடயங்களும்
- நிரல் 11 இல் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை

**நிரல் 11- அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்களும், நியச் சபைகளும், அரச கூட்டுத்தாபனங்களும்**

1. இலங்கைத் தரைப் படை
2. இலங்கைக் கடற்படை
3. இலங்கை விமானப்படை
4. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
5. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்
6. தேசிய பாதுகாப்பு நிதி
7. அரச புலனாய்வுச் சேவை
8. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
9. லங்கா லொஜிஸ்டிக்ஸ் லிமிட்டட்
10. ரக்ண ஆரக்ன லங்கா லிமிட்டட்

## தொலைநோக்கு

*பாதுகாப்பானதும், அமைதியானதுமான நாடொன்றுக்காக*

## பணிக்கூற்று

*இறைமையும், பாதுகாப்புடைய சுதந்திர*

*நாடொன்றை உறுதிப் படுத்துவதற்காக*


*உபாயமார்க்க*

*திட்டங்களையும்,*

*கொள்கைகளையும் அமைத்தல்,*

*செயற்படுத்துதல்*

# நிறுவனக் கட்டமைப்பு




| | | | | | |
|---|---|---|---|---|---|
| பயிற்சி முகாமையாளர் (1) | நிர்வாக உதவியாளர் (சட்டம்) (1) | ஆராய்ச்சி உதவியாளர் (2) | நிதி உதவியாளர் (8) | அபிவிருத்தி உதவியாளர் (3) | அபிவிருத்தி உத்தியோகத்தர் (21) |
| மனித வள உதவியாளர் (8) | அமுலாக்கல் உத்தியோகத்தர் (36) | திட்டமிடல் உதவியாளர் (1) | சட்ட உதவியாளர் (1) | தொ. தொ. உதவியாளர் (1) | |

சாரதி (59) KKS (71) பாதுகாப்பு முறை போதனாசிரியர் (6)

# பிரிவுகளின் செயலாற்றுகை

# 01.
# திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு

## 1.1 மேலோட்டமான பார்வை

பாதுகாப்பு அமைச்சின் திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவானது அமைச்சின் திட்டமிடல், ஆய்வுத் தொழிற்பாடுகளுக்கான துல்லியமான தகவல்களை வழங்குவதன் ஊடாக நடப்புக் காலப்பகுதிக்காகவும் வருகின்ற தசாப்தத்திற்காகவும் பிரேரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான “தேசிய பாதுகாப்புக் கொள்கை” ஒன்றினைத் தயாரிக்கும் பிரதான நோக்கினை எய்துவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது.

### 1.1.1 தொழிற்பாடுகள்

- கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவி வழங்குதல்
- வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் (நட வடிக்கைத் திட்டம், முன்னேற்ற அறிக்கை)
- பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனோடு இணைந்துள்ள நிறுவனங்களினால் முன்னெடுக்கப் படும் செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்தலும் அத்தகைய செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும்.
- வேறு அரசாங்க நிறுவனங்களுக்கான செயற்றிட்டங்கள் தொடர்பிலான தகவல்களை வழங்குதல்
- நேரடியற்ற அமைச்சுக்களினால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற பல்வேறு செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உதவி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை களை எடுத்தல்

## 1.2 2015 இன் சாதனைகள்

- **பாதுகாப்புக் கொள்கைத் தயாரிப்பு**
  தேசிய பாதுகாப்புக் கொள்கையைத் தயாரிப்பதற் கான அடிப்படைப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

- **முன்னேற்ற அறிக்கையின் தயாரிப்பு - 2014**
  2014ம் ஆண்டிற்கான அமைச்சின் முன்னேற்ற அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு பாராளுமன் றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **வருடாந்த முன்னேற்ற அறிக்கைத் தயாரிப்பு**
  2014.08.31 தொடக்கம் 2015.08.31 வரையிலான காலப்பகுதிக்காக பாதுகாப்பு அமைச்சின் ஆளுகையின் கீழ் வருகின்ற பிரிவுகள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

- **நடவடிக்கைத் திட்டத்தின் தயாரிப்பு - 2016**
  2016 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களம், செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், தேசிய பாதீட்டுத் திணைக்களம் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு**
  அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களின் காலமுறை முன்னேற்றங்கள் பற்றிய அறிக்கை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **100 நாள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்னேற்றம்**

  100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டு, கண்காணிப்புத் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமையாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

- **பொருளாதார விடயங்களுக்கான உப குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம்**

  பொருளாதார விடயங்களுக்கான உப குழுவினால் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட தொழிற் பாடுகளின் முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்பட்டது.

- **அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மீட்புப் பணிகளுக்கான இணைந்த நிகழ்ச்சித் திட்டம்**

  அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் சேர்ந்து UN-OCHA இன் உதவியுடன், தொழினுட்பத் திறன்கள் மற்றும் வினைத் திறனான மனிதநேயத் தேடுதல் மற்றும் மீட்பு அணி ஒன்றினைத் தாபிப்பதற்கான ஒரு செயற்றிட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டிருந்த அதேவேளை, சம்பந்தப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவு நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுத் திறைசேரிக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 1.3 எதிர்வரும் வருடத்திற்கென எதிர்பார்க்கப் பட்ட இலக்கு

- நாட்டின் பாதுகாப்புச் சூழ்நிலை பற்றிய சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, விவாதித்துக் கலந்தாய்வு செய்யக்கூடிய சான்றுகளின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் உபாயங்களைத் தயாரிக்கும் பொருட்டு “இலங்கை தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம்” என்ற பெயரில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் “தேசிய

பாதுகாப்பு சிந்தனையாளர் குழாம்'' என்ற ஒன்றினைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- எந்தவித தாமதமுமின்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செயற்றிட்டங்கள் தொடர்பிலான காலமுறை முன்னேற்றங்களை அனுப்புதல்.

- 2015 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு அனுப்புதல்

தேசிய பாதுகாப்புக் கொள்கைகளைத் தயாரிப்பதுடன் தொடர்புபட்ட விடயங்களைத் தொடருதல்

.

- இலங்கை முப்படையினரதும் மனிதாபிமானப் பணி மற்றும் ஆட்சேர்ப்பின் திறன் கட்டியெழுப்பப் படுவதின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல்

## 02.
## பாதுகாப்பு பிரிவு

### 2.1 மதிப்புரை

பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு பிரிவானது முப்படையினதும் சகல வித காரியாலய மட்ட (சேவைகளையும்) கடமைகளையும் செயற்படுத்துகிறது. மேலதிகமாக ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் இலங்கை படைப்பிரிவு சம்பந்தமான கடமைகளை செய்கிறது.

### 2.2 பிரதான காரியங்களும் அவற்றின் அடைவுகளும்

பாதுகாப்புப் பிரிவின் பிரதான காரியங்களும் அவற்றின் முடிவுகள் பற்றிய சுருக்கமும் பின்வருமாறு.

| சேவை | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை | தரம் உயர்த்தப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| இலங்கை இரானுவம் | 10387 | 1363 |
| இலங்கை கடற்படை | 2026 | 7739 |
| இலங்கை வான்படை | 1320 | 4959 |

### 2.2. வெளிநாட்டு அரசுகள் மூலம் வழங்கப்பட்ட பயிற்சி பாடநெறிகள்.

| | |
|---|---|
| இந்தியா | 1000 |
| பாகிஸ்தான் | 230 |
| பங்ளாதேஷ் | 75 |
| சீனா | 200 |
| மலேசியா | 40 |
| அமெரிக்கா | 14 |
| அவுஸ்திரேலியா | 10 |
| ஜப்பான் | 08 |
| ஏனைய நாடுகள் நேரடியாக வழங்கிய பாடநெறிகள் | 100 |
| வெளிநாட்டு வள தினைக்களத்தினூடாக ஏனைய நாடுகள் மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்ட பாடநெறிகள் | 86 |

2.3 முப்படையின் எல்லாநிலையினரும் நாட்டுக்காக ஆற்றிய சேவையை கௌரவிக்கம் முகமாக பதக்கங்களும் மற்றும் விருதுகளும் வழங்கள்

| | இராணுவப் படை | கடற்ப படை | வான் படை |
|---|---|---|---|
| விசேட சேவா பதக்கம் | 14938 | 91 | 865 |
| தீர்க சேவா பதக்கம் | 1538 | 2104 | 2457 |
| கார்யக்சம சேவா பதக்கம் | 08 | - | - |
| உத்தம சேவா பதக்கம் | 1961 | - | 166 |
| விசேட சேவா பதக்கம் | 20 | | - |
| தேச புத்ர பதக்கம் | 3084 | 01 | 15 |
| ஐ.நா.ச சமாதான படை பதக்கம் | - | 657 | 862 |
| பிரசங்சனிய சேவா பதக்கம் | 97 | | - |

### 2.4 மரணித்த மற்றும் அங்கவீனமுற்ற முப்படை வீரர்களுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினருக்கும் நட்ட ஈடு பெற்றுக் கொடுத்தல்.

| பிரிவினர் | இலங்கை இரானுவம் | இலங்கை கடற்படை | இலங்கை வான்படை |
|---|---|---|---|
| யுத்தத்தில் இறந்தவர்களது தங்கி வாழ்பவர்களுக்கான நட்ட ஈடு வழங்குதல் | 12,756, 069,768. 87 | 255,548, 726,34 | 255,548, 726,34 |
| தீவிரவாத செயற்பாடுகளினால் அங்கவீனமுற்றவர்களுக்கு 55 வயது வரை நட்டயீடு வழங்குதல் | 7,502,9 14,283. 22 | 22,104, 917.30 | 22,104, 917.30 |
| தீவிரவாத செயற்பாடுகளினால் அங்கவீனமுற்றவர்களுக்கு இரானுவ ஒழுக்கக் கட்டளைகள் 12/86 பிரிவின் கீழ் நட்டஈடு வழங்குதல். | 224,655, 000.00 | - | - |
| விதவைகள் மீள் திருமணம் செய்யும் போது விசேட நட்டஈடு வழங்குதல் | 208,760, 918.57 | - | - |
| அசாதாரன காரனங்களினால் மரணமடைந்தவர்களது தங்கி வாழ்பவர்களுக்கான நட்ட ஈடு வழங்குதல் | 205,586, 638.70 | - | - |
| 26 வயது வரை குழந்தைகளுக்கு சம்பளமும் மேலதிக கொடுப்பணவுகளையும் வழங்குதல் | 6,746, 972.30 | 1,764, 206.46 | 1,764, 206.46 |
| கடமையில் ஈடுபட்டிருக்கும் போது திடீர் விபத்துக்குள் ளானவர்களுக்கு அரச நிர்வாக சுற்று நிருபம் 22/93 அமைய நட்டஈடு வழங்குதல் | 8,147, 434.50 | 19,588, 170.00 | 19,588, 170.00 |



10-CM 22794

| | | | |
|---|---|---|---|
| அரச நிர்வாக சுற்றுநிருபம் 22.˙.93(ளை)சீர்திருத்தப்பட அரச நிர்வாக சுற்று நிருபம் 22.˙.93 அமைய நட்ட ஈடு வழங்குதல் | 8,091, 173.34 | - | - |

## 2.5 சமாதான பாதுகாப்புச் செயற்பாடு களுக்காக உபயோகிக்கப்பட்ட இராணுவ கண்கானிப்பாளர்கள்.

| | இராணுவப் படை | கடற்ப படை | வான் படை |
|---|---|---|---|
| ஹய்டி | 779 | 99 | 44 |
| லேபனான் | 151 | - | - |
| கொங்கோ | 04 | - | - |
| யுனிஸ்பா | 07 | - | - |
| தேன் சூடான் | 145 | | 104 |
| மேற்கு சகாறா | 06 | - | - |
| ஆபிரிக்கா | 08 | | 238 |

### 2.2.2 முன்வரும் வருடத்திற்காக பிற்போடப்பட்ட காரியங்கள் 2016

யுத்தத்தினால் தீவிரவாதச் செயற்பாட்டினால் அங்கவீன நிலைக்கு ஆளான முப்படையின ருக்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் நோக்கின் கீழ் வாழ்நாள் முழுதும் சம்பளம் பெற்றுக்கொடுத்தல்

## 2.3 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட காரியங்கள் பற்றிய மதிப்பீடு

பாதுகாப்பு பிரிவானது முப்படையினருக்கும், முப்படையுடன் தொடர்புடைய குடும்ப உருப்பினர்களுக்கும் அவர்களுடைய சேவையை வழங்குகிறது. பண ரீதியிலான பெறுமதி வழங்க முடியாத போதிலும், இச்சேவையானது முப்படையினதும் மிகப்பெறும் வரவேற்புக்குள்ளாகி உள்ளது.

2015 ஆம் ஆண்டின் சேவை மதிப்பீட்டின் மூலம் அரசின் ஆவனங்கள் பற்றிய நடவடிக்கையின் போது, இப்பிரிவில் நடைபெறவேண்டிய புதிய மாற்றங்களும், கால ஓட்டத்திற்கான விமர்சனங் களிலும் அவதானம் செலுத்தப்பட்டள்ளது.

### 2.4 பிணக்குகளும் சவால்களும்

இப்பிரிவிற்குரிய பிரதான பிரச்சினையானது உதவிச்சேவை குழுவான அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் தேவைப்பாடாகும். இதனால் முப்படை எதிர்பார்க்கின்ற குறித்த காலத்தில் வழங்குவது ஒரு சவாலாக அமைந்துள்ளது. அமைச்சின் நிர்வாகப்பிரிவும்,குறித்த இராஜாங்க அமைச்சும் ஒரே நேரத்தில் காலம் தாழ்த்தாது தேவையான மனித வளங்கள், குறித்த பிரிவுகளுக்கும் பெற்றுக்கொடுப்பதை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.5 எதிர்பார்ப்புக்கள்

தேவையான துறைகளின் பிரிவுகளுக்குப் பொருத்தமான நபரை பயிற்சில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக குழு அதிகாரி அரச முகாமைத்தவ சேவை அதிகாரிகள் ஆகிய இரு பிரிவினரும் அடங்குவர். இத் தேவையை புர்த்தி செய்வதற்காக சகல துறைகளும் உள்வாங்கும் விதத்தில் பயிற்றுவிக்கும் கருத்தரங்கும் பயிற்சி பெறும் சந்தர்ப்பமும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. சகல ஊழியர்களும் தமது திறமைகளை வளர்த்துக்கொள்வதற்காக சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடன் வெளிநாடு களில் இருந்து பெற்றுக் கொண்ட வரையறுக்கப்பட்ட பயிற்சி மற்றும் பழக்கப்படுத்துவதற்கான கருத்தரங் குகள், அரை ஆண்டு திட்டங்கள் திட்டமிடப்பட்ட வாறு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# 03.
# தொழில்நுட்பப் பிரிவு

## 3.1 மீள் பார்வை


தேசிய பாதுகாப்பு தொடர்பாக வரும் தொலை தொடர்பாடல், பொறியியல் விடங்கள், மக்களுக்கு பயன்படும் விதத்திலும், கைக்கொள்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான உபாயங்களை தயாரிப் பதும் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. வானொலி, ரூபவாஹினி, ஒளிபரப்பு நடவடிக்கைகள், எழுத்தியல் தொடர்பாடல், கண்காணிப்பு வழங்கள் மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுருத் தலாக அமையும் தொலைத் தொடர்பு, கடற்படையின் கப்பல் தேடும் உபகரண இறக்குமதியும், அதனை நிறுவுவதும் செயற்படுத்துவதற்கும் இலங்கை இலத்திரனியல் தொத்தொடர்பு ஆணைச்சபையின் தேவையான அனுமதியை பெற்றுத் கொடுத்தலானது தொலைத் தொடர்பின் கீழ் வருவதாகும். தேசிய பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்தும் வேலை அரச ஆலோசனைப்படி நாடுபூராகவும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேவை ஏற்படும்போது சிவில் பொறியியலாளரின் உதவியை பெற்றுக் கொடுத்தலாகும்.

தொழில்நுட்ப பிரிவின் கீழ் அமைச்சு மற்றும் நிறுவனங்களுடன் தேசிய பாதுகாப்பு பற்றிய தொடர்பாடல், பொறியியல் நடவடிக்கைகள் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது.


தொழில்நுட்ப பிரிவின் கீழ் கொழும்பு தலைநகரையும் அண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், பொலிஸ் விபரங்கள் மற்றும் தொலைதொடர்பு வலையமைப்பு (PICS) திட்டங்கள் உட்பட காணிகளை நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம், கடற்கரை பாதுகாப்பு, கடற்கரை வள முகாமைத் திணைக்களம் போன்றவற்றிடம் இருந்த திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்திய பின் அத்திட்டங்களை அவ்வவ்வமைச்சிடம் ஒப்படைத்தமை. இதுவரை தொழில்நுட்ப பிரிவு மூலம் செயற்படுத்தப்பட்ட பிரரதான செயற்திட்டமான பாதகாப்பு மூலஸ்தளத்தின் கட்டிடம் (DHQC) மற்றும் தந்திரோபாய தொலைத் தொடர்பு வலையமைப்பு செயற்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக ஆய்வுத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டது. ஆய்வு மத்திய நிலையத் தினாலும் இதன் அபிவிருத்தியும் தொழில் நுட்பபிரிவினால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

## 3.2 தொழில்நுட்பபிரிவினால் நடைமுறைப்படுத்தப் பட்ட செயற்பாடுகளின் அடைவுகளும் பகுப்பாய்வும்.

2015 ஆம் ஆண்டில் இப்பிரிவு தொலைத் தொடர்பு வழங்குனர்களுக்கு, 87 தடைநீக்கற் சான்றிதழ் வழங்கியது கோபுரங்களை அமைப்பதற்கு. மேலும் 111 மின்னியல், தொலைத் தொடர்பு வேட்புமனுக்களுக்கு விற்பனை உத்தரவுப்பத்திரம் வழங்கியது.




2016ம் ஆண்டில் இவ்வனுமதியை வழங்கியமையால் முப்படையினரின் நிலபுலங்களிலும், மேலும் அனுமதி தவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் சென்று செயற்பட அனுமதி வழங்குவதை விரைவுபடுத்த முப்படை யினருக்கு வழங்கியமை.




தொலைத் தொடர்பு மற்றும் கடற் தொலை தொடர்பு சாதனங்கள், மீன்பிடி வள்ளங்களுக்கான இயந்திரங் கள், வாகனங்கள் கண்டரியும் வலையமைப்பு, பயிற்சி அனுமதியுடைய ஒலிபரப்பு நிறுவனங்களுக்கு ஒலிபரப்பு பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியமை.

மீன்பிடிதிணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 1541 இழுவைப் படகுகளுக்கு ஒலிவானலைகளை பாவிப்பதற்கு நீரியல் திணைக்களத்தினால் இலங்கை தொலைத் தொடர்பு அதிகாரசபையின் அனுமதியை பெற்றுக் கொடுத்தது.

## 3.3 தொழில் நுட்பபிரிவின் கீழ் உள்ள செயற் திட்டங்கள் மற்றும் ஆய்வு நிலையங்களின் செயற்பாடுகள்

### 3.3.1 பாதுகாப்புதலைமையகம் வேறு இடத்தில் அமைக்கும் வேலைத்திட்டம்

56 ஏக்கர் நிலைப்பிரதேசத்தில் பரந்து விரிந்த பாதுகாப்பு தலைமையக நிர்மானப் பணிகள் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. இதனுள் பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புச் சேவைகளின் பிரதானியின் காரியாலயம் மற்றும் முப்படைகளின் தலைமையகம் இங்கு மாற்றியமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடானது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள செயற்றிட்ட முகாமைப் பிரிவினால் மற்றும் கட்டிட முகாமை பிரிவினால் மேற்பார்வை செய்யப்படுகிறது. இச்செயற்பாட்டிற்கான பொறியியல் ஆலேசனை சேவை முதித ஜயகொடி நிறுவனம் மற்றும் மத்திய பொறியியல் காரியாலயத்தால் பெறப்பட்டது.

இக்கட்டிடத் தொகுதியானது 282,386 வர்க அடியை கொண்டதுடன் 10,250 முப்படை வீரர்களுக்கு சேவைபுரிய இடவசதி கொண்டது. முப்படையின் அதிகாரிகள் 750 பேருக்கும் ஏனைய நிலையினர் 6100 பேருக்குமான தங்குமிட வசதியினை கொண்டது. கடமைபுரியும் இடங்களிலுள்ள அதிகாரிகளின் விடுதியானது மீற்றர் 50,000 சதுர அடிகளைக் கொண்டது. இக்கட்டிடமானது பலமாடிகளைக் கொண்டுள் ளதோடு 1597 பேருக்கு இடவசதிகளை கொடுக்கக் கூடியது. இதில் 545 பேருக்கு நிரந்திரத் தங்குமிடவசதியும் 1052 பேருக்கு தங்குமிடவசதி அற்றதும். ஏனைய தராதரங் களுக்காக நிர்மானிக்கப்படுகின்ற வீடுகளானது மீ. 105,000 இடத்தினைக் கொண்டது. இதும் மாடிகளைக் கொண்ட துடன் 10132 பேருக்கு இடவசதிகள் வழங்கப்படும். அதில் 6100 தங்குமிட வசதியோடும் ஏனைய 4032 பேர் வெளிவாரியினர் ஆவர். திட்டமிடப்பட்ட செலவானது. ஏரத்தாள ரூபா 53.2 பில்லியனாக இருப்பதோடு, இது 2019 ஆம் ஆண்டில் நிரைவுசெய்யப்படுகிறது. இலங்கை இராணுவம் மற்றும் பாதுகாப்பு செயளகத்தில் கடமை புரியும் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பு பிரிவிலுள்ளவர்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ள கட்டிடத்தொகுதி நிர்மானப்பணிகள் 2016 - 2017 வருடங்களில் நிறைவு செய்வதற்கு முதலிடம் வழங்கப்படும்.

நிர்மானப்பணிகளின் தற்போதய நிலை

இராணுவத்தினருக்காக ஒதுக்கப்பட்டடுள்ள இரு தொகுதிகளில் இயந்திர, பொறியியல், குழாய் நீர் மற்றும் தகவல் தொழில் நுட்ப ஒப்பந்தம் உட்பட நிர்மானப்பணிகள் 65% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தலைமையக பிரதானி காரியாலயத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் 58% மான நிர்மானப்பணிகள் நிரைவேற்றப்பட்டுள்ளதோடு, இயந்திர, பொறியியல், குழாய் நீர் மற்றும் தகவல் தொழில்நுட்ப வேலை களுக்காக பகிரங்க அழைப்பு விடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின ருக்கும், கடற்படையினருக்கும் ஒதுக்கியுள்ள கட்டிடங் களின் நிர்மானப்பணிகளின் 40% பூர்த்தி செய்யப்பட் டுள்ளதோடு பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப் பட்டுள்ள இரு பகுதிகளினதும் நிர்வாகப் பணிகள் 33% நிரைவு செய்யப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டின் இருதி காலமாகும்போது மத்திய பொரியியலாளர் பிரிவின் உள்ளக திட்டமிடலின் 70.85% நிரைவேற்றப்பட்டுள்ளது. மேலும் இயந்திர, பொறியியல், குழாய் நீர் மற்றும் தகவல் தொழில்நுட்ப வேலைகளின் 66.5% நிரைவு செய்தும், முதித ஜயகொடி கூட்டுத்தாபனத்தின் மூலம் வீடு வடிவமைப்பு வேலைகளின் 63.9% மளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அந்த வருட வேலைத் திட்டத்தின் முழு அடைவு 35% மாகவும் அதற்காக செலவிடப்பட்ட முழுத்தொகை ரூபா 14,027,272,117.08 ஆகும். இல 1, 2, 3, 4, 5 ஆகிய கட்டிடங்களின் நிர்மானப் பணிகள் 2015 மே மாதத்தடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.



Block 06 - SLA



Block 06 - SLA



Block 07 - SLA



Block 06 - SLA

### 3.3.2 பாதுகாப்பு தொலைத்தொடர்பு வலைப் பின்னல் திட்டம்

முப்படையினதும், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ள முறைகளுக்கு ஏற்ப ஏற்கனவே தேர்ந்தெடுத்த இடங்கள் மற்றும் 37 தொலைத் தொடர்புகளைக் கொண்ட பொது வலைப்பின்னலூடாக மிகவும் பாதுகாப்பான, இரகசியமான தொலைத் தொடர்பை கொண்டு செல்வதற்கு இதன் மூலம் வழியமைக் கிறது. தொலைத் தொடர்பு வலைப்பின்னல் கோபுரம் (11) உருவாக்குவதற்கு வேலைத்தளங்களில் குழிகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் மண்வள ஆய்வு 2015ல் மேற்கொள்ளப்பட்டதோடு மின்சார உற்பத்தி இயந்திரம் 22 க்கான விலைமனுக்கோரல் வழங்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு வலைப்பின்னல் கோபுரம் (11), மைக்ரோ வானலை 37 தொடர்புகளும் நிறைவு செய்யப்பட் டுள்ளது.

இவ்வருடத்திற்கான பௌதீக அடைவு 31% உள்ளதோடு மூலதனம் அடைவு 3% சதவீதமாகும். இது வருடாந்த ஒதுக்கீட்டின் சிறு பகுதியாகும்.

### 3.4 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் பனாகொடை இராணுவ முகாமில் உள்ள சமிக்ஞைப் படைப்பிரிவு தலைமையகத்தில் உருவாக்கப்பட்டிருந்த தோடு பின்னர் அது கொதலாவல பாதுகாப்புபல்கலைக்கழக வளாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர் பண்டாரநாயக மாநாட்டுமண்டப வழாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் இந்நிலையம் 2015ல் மொரகஹஹேன வீதி, பிட்டிபன என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இவ்வருடத்திற்கான பௌதீக அடைவு 31% உள்ளதோடு மூலதனம் அடைவு 3% சதவீதமாகும். இது வருடாந்த ஒதுக்கீட்டின் சிறு பகுதியாகும்.

### 3.4 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் பனாகொடை இராணுவ முகாமில் உள்ள சமிக்ஞைப் படைப்பிரிவு தலைமையகத்தில் உருவாக்கப்பட்டிருந்த தோடு பின்னர் அது கொதலாவல பாதுகாப்புபல்கலைக்கழக வளாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர் பண்டாரநாயக மாநாட்டுமண்டப வழாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் இந்நிலையம் 2015ல் மொரகஹஹேன வீதி, பிட்டிபன என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ளது.



### 3.4.1 2015 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட வெற்றிகளும் அடைந்து கொண்ட இலக்குகளும்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட 8 வது சர்வதேச ஆராய்சி மாநாட்டின்போது ஆராய்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் வானொலி மற்றும் இலத்திரனியல் படையணி மூலம் வானிலிருந்து பாயும்போது வாயுவின் விஞ்ஞான ரீதியான தாக்கம், இலங்கையில் பரசூட் பயிற்சி பற்றிய விளம்பர படிவங்களை வெளியிட்டமை.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மாநாட்டின் போது ஆராய்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தகவல் தொழில் நுட்பப் பிலிவ மூலம் அனர்த்த முகாமைத்துவத்திற்கான மென்பொருள் ஒன்று முன்வைக்கப்பட்டது. இம்மென்பொருளானது 2016 ஜுன் மாதம் ஐக்கிய அமெரிக்காவில் “User Conference 2016- ESRI” மாநாட்டுக்காக தெறிவு செய்யப்பட்டுள்ளது.

(அ) ஆராய்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் 2013ஆம் ஆண்டில் கீழ்வரும் விருதுகள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(1) National Best Quality ICT Award- 2015 Silver- Global Disaster Risk Analysis Prevention and Mitigation Application.

(2) National Best Quality ICT Award -2015 Bronze –K – 8 Flight Simulator System .

(3) INFOTEL EXHIBITION 2015 "RUNNER UP"- Most Innovative Stall.

(4) User Conference 2015- ESRI in Sri Lanka "Best Presentation"- Multi Hazard Web Application.

(ஆ) கீழ்வரும் வேலைத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

(1) காலத்துவக்கு சிலை ( கட்டம் 11)

(2) புகையிரதம் நிறுத்தல் வலைப்பின்னல்

(3) சம்பவத்திரட்டு.

(4) விஷேட அதிரடிப்படைக்கான சம்பவ தெரிவிப்பும் மேற்பார்வைத் திட்டமும்.

(5) பயிற்சிமுடிவுகள்.

(6) K 8 சாதாரண ஆயுதம் மாதிரி

(7) டெங்கு கண்டறியும் திட்டம்

(8) பூகோள அனர்த்தத்தை தடுத்தலும் குறைத்தலும்.

(9) உள்ளக சேவை விமான அபிவிருத்தித்திட்டம்.

(10) வாகன முகாமைத்திட்டம்.

(இ) 2015 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள்

(1) ஆகாய போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் களுக்கு பயிற்சி

(2) நீருக்கடியிலான தேடுதல், வலையமைப்பு

(3) அசைக்கவும் ஆடக்கூடியதுமான மேடை யில் அமைந்துள்ள ஸ்திரமான அசையாத அமைப்பு.

(4) சிறுநீரக நோய் சம்பந்தமான பூகோள தகவல் திட்டம்.

(5) பிரேல் முறைக்கு அமைய வெளியிடப்பட்ட எழுத்துக்களை கண்டரியும் வலையமைப்பு.

(6) விஞ்ஞாபன முகாமைத்திட்டம்

(7) The Geo Integrated Fire Support System (GIFS) – First Round Hit.

## 3.5 அடைவுகளும் சவால்களும்

- தொலைத் தொடர்பு வலைப்பின்னல் கோபுரம் 11 அமைப்பதற்கான பொருத்தமான இடத்தை பெற்றுக் கொடுத்தலுக்கான காலதாமதம் ஏற்பட்டமையால் விலைமனு கோரலிலும் தாமதம் ஏற்பட்டது.
- வரையறுக்கப்பட்ட ஆராச்சி அதிகாரிகள் சிலர் வரையறுக்கப்பட்ட வரவு செலவின் கீழ் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்ற அபிவிருத்தி நிலையத்திற்கு 2015 இல் இடங் கிடைத்தது.
- முப்படைகளின் முலம் தகுந்த ஆராய்சி அதிகாரிகள் சேர்த்துக் கொள்வதற்கோ அல்லது அவர்களுக்கு சம்பளம் வழங்கு வதற்கோ, தகுந்த வேலைத்திட்டம் ஒன்று இல்லை.

## 3.6 எதிர்கால எதிர்பார்புக்கள்

- 2016 - 2018 காலப் பகுதியினுள் கீழ்வரும் வேலைத்திட்டங்கள் எதிர்பார்கப்படுகிறது.
- சகல படைப்பிரிவுகளுக்குமாக உருவாக்கக் கூடிய நவீன விஞ்ஞானகூட வசதிகளை கொண்ட 6 மாடித் திட்டத்தை அமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல்.
- ஆராய்ச்சிமற்றும் அபிவிருத்தி மையத்திற்கு தகுந்த நபர்களை உடனடியாக சேர்த்துக் கொள்ளக்கூடிய திட்டமொன்றை தயாரித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தில் சேவையிலுள்ள ஆராச்சி அதிகாரிகளுக்கு விஷேட ஆராய்ச்சிக் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தின் திட்டங்களுக்காக பல்கலைக்கழக மாணவர் களை சோர்த்துக் கொள்ளலும் அவர்களுக்கு சம்பளம் வழங்குவதும்.
- லங்கா லொஜிஸ்டிக் அன்ட் டெக்னோலஜீஸ் கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளுக்கு அறிமுகம் செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளல்.

# 04
# பாராளுமன்ற சிவில் பணிகள் பிரிவு

## 4.1 கீழ்வரும் பணிகள்

மேற்கொள்ளப்படுகின்றன

- முப்படை முகாம்கள் மற்றும் உப முகாம்களை அமைப்பதற்கான காணி விவகாரங்கள்
- அமைச்சுடன் ஏற்புடைய பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டிய விவகாரங்கள்
- முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினருக்கான சீருடைகள் மற்றும் துணி வகைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- காணி சம்பந்தமான பொதுமக்கள்முறையீடுகள் நிருவாக விடயங்கள்

## 4.2 முப்படை முகாம்கள் மற்றும் உப முகாம்களை அமைப்பதற்கான காணி விவகாரங்கள் -

முப்படை புதிய பிரிவுகளை அமைத்தல் - தற்போது காணப்படும் பிரிவுகளை வியாபித்தல் ஆகிய விடயங்களின் பொருட்டு தேவைப்படும் அரச மற்றும் தனியார் காணிகளை காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மாவட்டச் செயலாளர்கள், காணி அமைச்சு, பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களுடன் பராதீனப்படுத்தல் மற்றும் கூட்டிணைந்து சுவீகரித்தல் தொடர்பான அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளல்.

அதன் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- முப்படைகள் மூலம் பராதீனப்படுத்தல் மற்றும் சுவீகரித்தல் தொடர்பான பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளல்.
- உரிமைகோரப்பட்டுள்ள இடங்களில் பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏற்புடைய நிறுவனங்களின் மூலம் சிபாரிசுகள் மற்றும் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளல்.
- ஏற்புடைய தஸ்தாவேஜுகளை காணி அமைச்சின் செயலாளருக்கும் காணி ஆணையாளர் நாயகத்துக்கும் அனுப்புதல்.
- காணி உரித்துரிமை விடயத்தில் சிக்கல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் கல மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.
- காணி அளத்தல் பெற்றுக் கொள்ளல், போன்றவற்றின்போது கூட்டிணைப்பு செய்தல்.
- காணிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறல்.
- பாரிய சிக்கலான காணி சுவீகரிப்பின் போது தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறல்.
- மேலும் நாட்டில் பாதுகாப்பு ஸ்தீரத் தன்மை ஏற்படும் வேளையில் முப்படைகளால் விடுவிக்கப்படும் காணிகளை உரிமையாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இல் முப்படைகளால் விடுவிக்கப்பட்ட 2015 நிலங்கள் பின்வருமாறு :-

| | 2015 இல் விடுவிக்கப்பட்ட நிலங்கள் (ஏக்கர்) | | மொத்தம் (ஏக்கர்) |
|---|---|---|---|
| | அரச நிலங்கள் | தனியார் நிலங்கள் | |
| தரைப்படை | 26,485.34 | 2,190.58 | 28,675.94 |
| கடற்படை | 6.21 | 265.5 | 271.71 |
| விமானப்படை | - | - | - |
| | 26,491.57 | 2,456.08 | 28,947.65 |

### 4.2.2 பாராளுமன்ற விவகாரங்கள்

#### 4.2.2.1 பாராளுமன்ற கேள்விகளுக்கு விடையளித்தல்

அமைச்சின் ஏற்புடைய பிரிவுகளையும் நிறுவனங்களையும் இணைப்புச்செய்தல ஏற்புடைய காலத்தில் கேள்விகளுக்கான விடைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

#### 4.2.2.2 பாராளுமன்ற ஆலோசனைக் குழு

எற்புடைய காலத்தில் இவ்வமைச்சுடன் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் இடம்பெறவில்லை. முப்படைகள் இந்த ஏனைய மற்றும் அமைச்சுடன் நிறுவனங்களுடன் தொடர்பான போது மக்களால் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முன்வைக்கும் கடிதங்களுக்கு விடைகள் அளிக்கப் படுகின்றது.

#### 4.2.2.3 நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பங்களில் வினவப் படும் வினாக்கள்

ஏற்புடைய காலத்தில் நிலையியற் 05 பாராளுமன்றம் 03 கட்டளைகள் மற்றும் ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பங்களில் வினவப்படும் வினாக்களுக்கு விடைகள் அனுப்பப்பட்டுள்ளன.

#### 4.2.2.4 அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் அவற்றுக் கான அவதானங்களும்

இக்காலப்பகுதியில் அமைச்சரவை 05 விஞ்ஞாபனங்கள், அமைச்சரவை அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவ்வாறே அமைச்சர்களால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் 11 விஞ்ஞாபனங்களுக்கு அமைச் சரின் அவதானத்துக்கு அனுப்பட்டுள்ளன.

#### 4.2.2.5 பாராளுமன்றகுழு நிலை விவாதம்

பாராளுமன்றத்தில் குழு நிலை விவாதத்திற்கான பாதுகாப்பு அமைச்சின் செலவு வாசிப்பு தொடர்பான நிகழ்வு அதற்கு தேவையான அதிகாரிகள் கலந்து கொள்வதற்கு இந்த மேற்கொள்ளப்பட்டது. நடவடிக்கைகள் 2015.12.04 அமைச்சின் செலவு வாசிப்பானது மேற்கொள்ளப்பட்டது.

### 4.2.3 முப்படைகளுக்கு சீருடைகள் மற்றும் துணி வகைகளைப் பெற்றுக்கொடுத்தல்

முப்படைகள் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தேசிய மாணவ வீரர் படையணி ஆகியவற்றுக்கு சீருடைகள் மற்றும் துணி வகைகளை பெற்றுக் கொடுப்பதற்காக உள்நாட்டு துணி வகை உற்பத்தியாளர்களிடம் கேள்விகள் கோரி கேள்வி கோரல் நடைமுறைகளுக்கேற்ப துணி வகைகள் மற்றும் கொள்வனவு செய்தல் தொடர்பில் வர்த்தக வாணிப அமைச்சுடன் ஒன்றிணைந்து செயலாற்றுகின்றோம்.

2016 ஆம் ஆண்டுக்கான முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தேவைக்கான ரூபா2,02091இ360.00 பெறுமதியான துணி வகைகளை உள்நாட்டு துணி உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 4.2.4 பொதுமக்கள் சம்பந்தமான விடயங்கள்

பொதுமக்கள் இவ்வமைச்சுக்கு நேரடியாகவும் ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் ற்றும் ஏனைய அரச நிறுவனங்கள்மூலம் அனுப்பப்படும் விடயங்கள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏற்புடையள நிறுவனங்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு கடிதம் அனுப்பியவர்களுக்கு பதில் கடிதம் அனுப்பப்படும்.

### 4.2.5 உள்ளக நிருவாக விடயங்கள்

இப்பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களின் அனைத்து நிருவாகப் பயிற்சி மற்றும் நலன்புரி, வினைத்திறனான வினைத்திறனான முறையில் விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பிரிவில் உள்ள ஊழியர்கள் நிருவாகப் பிரிவில் உள்ள ஊழியர்கள் நிருவாகப் பிரிவில் உள்ள வாய்ப்புகள் மூலமாக பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

உத்தியோகத்தர்களின் திறன் அறிவு மற்றும் ஈர்ப்பு என்பவற்றை விருத்தி செய்வதற்காக சதர திகன்தய ஹோரவம் எனும் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# 05
# நிர்வாகப் பிரிவு

## 5.1 அறிமுகம்

நிர்வாகப் பிரிவானது பின்வருனவற்றுக்கான பொறுப்பினை கொண்டுள்ளது.

- அமைச்சினதும் அமைச்சின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களினதும் தாபிப்பு நிர்வாகம் மற்றும் பராமரிப்பு தொடர்பான விடயங்கள்
    - இணைந்த சேவைகள் மொழிப் பயிற்சி நிறுவனம்
    - ஊடக மத்திய நிலையம்
    - அரச உளவுத்துறை சேவை
    - பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அலுவலகம்
    - ஆயுதப்படைச் சேவைகள் மற்றும் நலன்புரிப் பிரிவு

- பின்வரும் நிறுவனங்களின் சிவில் அதிகாரிகள் தொடர்பான தாபிப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பான விடயங்கள்
    - இலங்கை இராணுவப்படை
    - இலங்கை கடற்படை
    - இலங்கை விமானப்படை
    - சிவில் பாதுகாப்பு திணைக்களம்
    - கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
    - ஊடக மத்திய நிலையம்
    - அரச உளவுத்துறைச் சேவை
    - பாதுகாப்பு செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்
    - சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
    - லங்கா லொஜிஸ்டிக் டெக்னொலோஜி அன்ட் லிமிட்டெட்
    - ரக்னா ஆராக்ஷக லங்கா லிமிட்டெட்

- பின்வரும் நிறுவனங்களின் நிர்வாக தீர்மானம் எடுத்தல் கொள்கைகள் மற்றும் நிதிசார் விடயங்களும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
    - “அபி வெனுவென் அபி” வீடமைப்பு செயற்றிட்டம்
    - “மிஹிந்து செத் மெதுர” செயற்றிட்டம்

- போக்குவரத்து மற்றும் அஞ்சல் பிரிவுகள் உள்ளிட்ட அமைச்சின் உள்ளக பிரிவுகளின் அனைத்து நிர்வாக விடயங்களும் நிர்வாகப் பிரிவின் நோக்கெல்லையின் கீழ் நேரடியாக வருகின்றன.

### 5.1.1 பொது நிர்வாகம்

அமைச்சின் உத்தியோகத்தர்களின் உயர் வினைத்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தல் மற்றும் அவர்களின் தனிப்பட்ட வினைத்திறனான மேம்படுத்தல் மற்றும் அவர்கள் ஊக்குவிக்கும் நோக்குடன் அரசாங்க பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற பல்வேறு பயிற்சிநெறிகளுக்காக பணியாட்டொகுதியினரையும் பணியாட்தொகுதி சாராத அலுவலர்களையும் திசைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 5.1.2 சட்டம் தொடர்பான விடயங்கள்

நிர்வாகப் பிரிவின் கீழ் இயங்குகின்ற சட்டப் பிரிவானது பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகள்மேற்கொள்ளல் இலங்கை அரசாங்கத்துக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்படவிருக்கின்ற பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய வரைபு உடன்படிக்கைகளுக்கு தேவையான சட்டம் சார்ந்த தகவல்களை வழங்குதல்.

இப்பொலகம ரணவிரு ரியல் ஸ்டார் வீடமைப்புத் திட்டம் போன்ற விசேட செயற்றிட்டம், உடன்படிக்கைகளை தயாரித்து அமைச்சிற்கும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்கும் தேவையான சட்ட ஆலோசனை வழங்குதல் சட்டவரைஞர் ஆலோசனை வழங்குதல் திணைக்களத்தின் ஒத்துழைப்பின் மூலம் பாதுகாப்பு கட்டளைச் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களைத் திருத்துவதற்கான உதவியினை வழங்குதல் போன்றவற்றுக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

### 5.1.3 பொறியியல் சார்ந்த விடயங்கள்

அமைச்சு அமைந்துள்ள பிரதேசத்தினுள் சுற்றுப்புற சூழலை பேணும் வகையிலான சுற்றாடல் நேயமிக்கசிறிய மற்றும் பெரிய அளவிலான புத்தாக்க செயற்பாடுகள் பொறியியல் கிளையின் ஒருங்கிணைப்போடு முன்னெடுக்கப்பட்டன.

### 5.1.4 யுத்த வீரர்களின் நலன்புரி சார்ந்த விடயங்கள்

#### 5.1.4.1 அபி வெனுவென் அபி கருத்திட்டம்

யத்தத்தின் போது கொல்லப்பட்ட அங்கவீனமுற்ற மற்றும் காணாமற்போன, இறுதிக்கட்ட நடவடிக்கையில் தேவையாக உள்ள பிரதேசங்களில் இன்னமும் சேவையிலுள்ள யுத்த வீரர்களுக்காக வீடுகளை அமைத்து வழங்குவதே செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இக்கருத்திட்டத்திற்கு அபி வெனுவென் அபி நிதியத்தின் மூலம் வசதியளிக்கப்படுவதோடு இவ்வீடுகள் நிர்மாணிக்கும் பணியானது முப்படையினராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்

- ஆயுதப்படைச் சேவையில் உள்ள படையினருக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான நிதியுதவி வழங்குவதற்கான திட்டத்தை சமர்ப்பித்தல்.
- வீடமைத்தல் தொடர்பான வசதிகளை பெறும் நோக்கில் ஆயுதச் சேவையிலுள்ள ஊழியருக்கான உதவிகளை வழங்குதல்.
- படைவீரர்கள் நிதி நிறுவனங்களிலிருந்து கடன்களை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் உதவும் பொருட்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு அத்தகைய கடன்களை தீர்த்து வைத்தல்.
- படைவீரர் ஒருவர் எதிர்பாராத விதமாக இறப்பு அல்லது உபாயத்திற்குள்ளாகின்ற வேளையில் அத்தகையோர் கடன்களை தீர்ப்பதற்கான திட்டத்தினை தயாரித்தல்.

### 5.1.4.2 யுத்தவீரர்களின் வாழ்க்கை நிலைகளை மேம் படுத்துவதற்கான கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது முப்படையிலும் மற்றும் சிவில் பாதுகாப்பு படையிலும் சொல்லப்பட்ட மற்றும் அங்கவீனமுற்ற வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வீடமைப்பு கடன்களை வழங்கு வதற்கு உதவியுள்ளதோடு புலமைப் பரிசில்களையும், நலன்புரி அம்சங்களையும் முன்னெடுக்க உதவி உள்ளது.

### 5.1.4.3 யுத்த வீரர்களுக்கான பகுதியளவு பூர்த்தியடை யச் செய்யும் வீடமைப்புத் திட்டம்

இது தெரிவுசெய்யப்பட்டுள்ள யுத்தவீரர்களின் பகுதியளவு கட்டப்பட்ட வீடுகளை பூர்த்தியாக்கும் நோக்கில் அதிக பட்சம் 0.75 மில்லியனுக்குள்ளாகின்ற அவசியமான பொறியியல் கருவிகளை வழங்குதல் அபிவிருத்தி நாட்டின் இலக்குகளை அடையும் வகையில் யுத்த வீரர்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்தல் போன்ற இலக்கினை கொண்டதாகும். இக்கருத்திட்டமானது முப்படையினரினதும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்போடு சேவா வனிதா பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டது.

**2016 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

| பொறுப்பு | நடவடிக்கை | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| பயனுறுதித் தன்மையை மேம்படுத்தல் | 1. கணனிகள் மூலமாக கடிதங்களை விநியோகித்தல் | பதிவுத் தபால் | கையினால் | அஞ்சல் |
| | | 16872 | 30000 | 31000 |
| | 2. தனி நபர் கோவையினை இற்றைப்படுத்தல் | கோவைகள் 333 பூர்த்தியடைந்தன | | |
| | 3. தாமதங்கள் எதுவும் இன்றி கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தினை வழங்குகின்றது. | நிர்வாகப் பிரிவு | போக்குவரத்துப் பிரிவு | |
| | | 3073 | 260 | |
| துல்லியமான தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் முகாமைத்துவ முறைமையினை தயாரித்து அதனை இற்றைப்படுத்தல் | 1. மனித வள முகாமைத்துவம் | 19 | | |
| | ■ புதிய நியமனங்கள் | 04 | | |
| | ■ ஓய்வு பெறுகை | 23 | | |
| | ■ பதவியுயர்வு | 333 | | |
| | ■ சம்பள அதிகரிப்பு | | | |
| | 2. ஆதன முகாமைத்துவ முறைமையானது அதன் புத்தாக்கம் மற்றும் அதன் பராமரிப்பு தொடர்பான பதிவினை பேணுகின்றது. | - | | |
| | 3. வாகன முகாமைத்துவ முறைமை வாகனம்) கொள்வனவு விற்பனை,மீள் புதுப்பித்தல், மற்றும் வாடகைக்கு எடுத்தல் | திருத்தப்படட வாகனங்களின் எண்ணிக்கை -110<br>வாகன கொள்வனவு - 05<br>வாடகைக்கு எடுத்தவை - 06 | | |
| அறிவு மற்றும் திறன்களைக் கொண்டு மனித வளத்தை மேம்படுத்தல் | | நிகழ்ச்சித்திட்டங்கள் | பங்குபற்றியோர் | |
| | 1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்குதல் | 60 | 150 | |
| | 2. செயலமர்வு | 03 | 78 | |
| | 3. நலன்புரி செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல் | 05 | 250 | |
| | 4. பயிலுனர்களுக்கு மாத பயிற்சி 06 வழங்கல்கள் | பயிலுநர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். | | |

5.2 யுத்த வீரர்களுக்கான பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீடமைப்புத் திட்டம்

| | கட்டம் II | கட்டம் III | கட்டம் IV | கட்டம் V | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| இராணுவம் | 198 | 164 | 193 | 221 | 776 |
| கடற்படை | 72 | 54 | 74 | 125 | 325 |
| விமானப்படை | 50 | 52 | 70 | 130 | 302 |
| மொத்தம் | 320 | 270 | 337 | 476 | 1403 |

| இல. | மாவட்டம் | வழங்கிய திகதி | சம்பந்தப்பட்ட ஆயுதப் படையினர் | | | | | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இலங்கை இராணுவப் படை | | | | இலங்கை கடற்படை | | | | இலங்கை விமானப் படை | | | | |
| | | | நோயுள்ளோர் | அங்கவீனமுற்றோர் | சேவையிலுள்ளோர் | மொத்தம் | நோயுள்ளோர் | அங்கவீனமுற்றோர் | சேவையிலுள்ளோர் | மொத்தம் | நோயுள்ளோர் | அங்கவீனமுற்றோர் | சேவையிலுள்ளோர் | மொத்தம் | |
| 1 | கண்டி | 10/09/2015 | 08 | 06 | 51 | 65 | - | 1 | 20 | 21 | - | - | 14 | 14 | 100 |
| | மொத்தம் | | 08 | 06 | 51 | 65 | - | 1 | 20 | 21 | - | - | 14 | 14 | 100 |

## 5.3 அபி வெனுவென் அபி செயற்றிட்டம்

அபி வெனுவென் அபி கருத்திட்டத்தின் கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதோடு அவை பின்வருமாறு அதிமேதகு 100 ஜனாதிபதி அவர்களால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவை தவிர இலங்கை இராணுவப் படை, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை ஆகியோரின் உதவியுடன் ஏனைய மாவட்டங்களிலும் பின்வரும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலன்னறுவை - 57
மொனராகலை - 31
ஹம்பாந்தோட்டை - 96
மாத்தறை - 99





## 5.4 அபிவெனுவேன் அபி செயற்திட்ட முன்னேற்றம்

| இல | மாவட்டம் | வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட வருடங்கள் | வீடுகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| **1** | கண்டி | 2010 | 25 | |
| **2** | குருணாகலை | 2010 | 27 | |
| **3** | மாத்தறை | 2010 | 26 | |
| **4** | அப்பாந்தோட்டை | 2010 | 10 | |
| **5** | மொனராகலை | 2010 | 16 | |
| **6** | பதுளை | 2010 | 15 | |
| | 2010 வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட வீடுகள் | | | **119** |
| **7** | காலி | 2011 | 34 | |
| **8** | அம்பாறை | 2011 | 11 | |
| **9** | மட்டகளப்பு | 2011 | 1 | |
| **10** | திருகோணமலை | 2011 | 2 | |
| **11** | களுத்தறை | 2011 | 28 | |
| **12** | கேகாலை | 2011 | 30 | |
| **13** | பொலனறுவை | 2011 | 43 | |
| | 2011 வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட வீடுகள் | | | **149** |
| **14** | கம்பாஹ | 2012 | 60 | |
| **15** | இரத்தினபுரி | 2012 | 95 | |
| **16** | மத்தளை | 2012 | 100 | |
| **17** | நுவரெலியா | 2012 | 101 | |
| | 2012 வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட வீடுகள் | | | **356** |
| **18** | கொழும்பு | 2013 | 112 | |
| **19** | குருணாகலை-2 | 2013 | 125 | |
| **20** | அநுராதபுரம் | 2013 | 100 | |
| | 2013 வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட வீடுகள் | | | **337** |
| **21** | புத்தளம் | 2014 | 101 | |
| **22** | கண்டி-2 | 2014 | 100 | |
| **23** | அம்பாந்தோட்டை 2 | 2014 | 100 | |
| | 2014 வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட வீடுகள் | | | **301** |
| **24** | மத்தறை | 2015 | 100 | |
| **25** | முல்லைத்தீவு | 2015 | 48 | |
| **26** | வவுனியா | 2015 | 43 | **2015.12.31 திகதி** |
| **27** | பொலனறுவை | 2015 | 100 | **நடைப்பெற்றக்கொண்டுள்ளது** |
| **28** | மொனராகலை | 2015 | 100 | |
| | 2015 வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட வீடுகள் | | | **391** |
| | | | **மொத்தம்** | **1653** |

## 5.5 அபி வெனுவேன் அபி நிதியம்

2015.12.31 திகதி வருடத்திற்கான வரவு செலவு கணக்கு

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வருவாய் | | | |
| நன்கொடைகள் | 3 | 8,555,825 | 33,228,004 |
| ஒளிபரப்பு கோபுர கட்டணம் | 4 | 173,866,720 | 165,214,988 |
| ரணஜயபுர வீட்டு திட்டத்தின் தவணை கட்டணம் | 5 | 71,532,000 | 71,360,000 |
| முதலீட்டு வட்டி | 6 | 44,470,445 | 72,406,800 |
| ரணஜயபுர வணிக கட்டிட வருவாய் | 7 | 817,983 | 1,015,682 |
| மறுமதிப்பீட்டு இலாபம் | 8 | 38,715 | - |
| | | | |
| | | 299,281,688 | 343,225,474 |
| செலவு | | | |
| செயற்திட்ட செலவினம் | 9 | 190,722,194 | 406,868,546 |
| தேய்மானம் | 10,11 | 3,784,349 | 4,619,874 |
| வங்கி கட்டணம் | 12 | 12,650 | 1,290 |
| | | | |
| | | 194,519,193 | 411,489,710 |
| செலவுக்கு மிஞ்சிய வருவாய் (மீதி) | | 104,762,495 | (68,264,236) |
| | | | |
| 2015.01.01 திகதி திருத்தப்பட்ட இருப்பு | 18 | 848,039,405 | 916,303,641 |
| | | | |
| திரட்டபட்ட நிதியத்துக்கான மாற்றம் | | **952,801,900** | **848,039,405** |
| | | | |

## 5.2 சவால்கள்

அமைச்சின் குறிக்கோள்களினையும் இலக்கினையும் அடைந்து கொள்ள முனைகின்ற வேளையில் தற்போது நிலவுகின்ற பணிச் சூழலானது எதிர்பார்க்கும் நிலைக்கு ஒரு வினைத்திறான சேவையினை வழங்க போதுமானதாக இல்லை இதனால் தொடர்புடைய நிறுவனங்களுக்கு தேவையான பணியாட்கள் கூட வழங்க முடியாதுள்ளது.

உற்பத்தித் திறன் கருத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக ஊக்குவிப்பு குறை ஊழியர்கள் குறைபாடு மற்றும் பொருத்தமில்லாத நிறுவன கட்டமைப்பு போன்றவை காணப்படுகின்றது.

## 5.3 எதிர்கால தூரநோக்கு

- அமைச்சின் ஊழியர்களுக்கு தேவையான பாடநெறிகளை ஒழுங்குபடுத்தல்.
- அமைச்சின் ஊழியர்களுக்கு வினைத்திறனை அடைந்து கொள்ளும் வகையில் SLIDA வினால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நெறிகளில் பங்குபெறச் செய்தல்.
- முப்படை அங்கத்தவர்களுக்கான நலன்புரி வசதிகளை வழங்குவதற்கான மதிப்பீடுகளை செய்தல்
- வரவுசெலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற 200 மில்லியனை பயன்படுத்தி 250 யுத்தவீரர்களுக்கான வீடுகளை படிப்படியாக வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.
- பணியாட்களுக்கு உற்பத்தித்திறன் கருத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக 2017 ஆம் ஆண்டுக்கான உற்பத்தித் திறன் விருத்திக்கு போட்டியிட செய்தல்.

# 06.
# சிவில் பாதுகாப்பு பிரிவு

## 6.1 அறிமுகம்

ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான 2015 நிறைவேற்ற உத்தேசித்த காலங்களில் விடயங்கள்.

- பாதுகாப்பான சிவில் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்
- வணிகத்துறையில் வெடிப்பொருள் பாவனையின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- சிறந்த விதிமுறைகளுடன் கூடிய தனியார் பாதுகாப்பு சேவை வசதிகளை வழங்கும் நிறுவனம் மற்றும் கடல் பாதுகாப்பு சேவை வசதிகளை வழங்கும் நிறுவனத்தினை ஏற்படுத்துதல்.

### 6.1.1. பாதுகாப்பான சிவில் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்

#### தீ ஆயுதங்களை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் தீஆயுத சட்டமானது

நிகழ்காலத்திற்கு பொருத்தமானதாகும் வகையில் திருத்தம் மேற்கொள்வதற்காக முன்வரைவுகளை மேற்கொண்டு மேலும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் கண்டறிவதற்காக செயலாளரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிவில் நபர்களிடையே தீ ஆயுதங்கள் பின்வருமாறு கையாளப்படுகிறது.

- சுய பாதுகாப்பிற்காக
  - பிஸ்டல்
  - சுய பாதுகாப்பிற்கான துப்பாக்கி
- பயிர்ப் பாதுகாப்பிற்காக விநியோகிக்கப்படும் துப்பாக்கிகள்

இதுவரையில் கீழ் குறிப்பிட்ட அளவில் தீ ஆயுதங்கள் மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

6.1

| மாவட்டம் | பயிர்பாதுகாப் பிற்காக | பயிர்ப்பாதுகாப்பு அல்லாத |
|---|---|---|
| அம்பாந்தோட்டை | 681 | 88 |
| மொனராகலை | 775 | 147 |
| கொழும்பு | 441 | 399 |
| வவுனியா | 04 | 11 |
| இரத்தினபுரி | 1105 | 156 |
| மாத்தளை | 909 | 47 |
| நுவரெலியா | 290 | 92 |
| திருகோணமலை | 13 | - |
| குருநாகல் | 2167 | 388 |
| கேகாலை | 1006 | 14 |
| அம்பாறை | 194 | 07 |
| பதுளை | 598 | 80 |
| பொலன்னறுவை | 291 | 72 |
| அனுராதபுரம் | 1739 | 22 |
| களுத்துறை | 117 | 13 |
| மட்டக்களப்பு | 26 | - |
| மாத்தறை | 276 | 140 |
| கம்பஹா | 1725 | 803 |
| கண்டி | 815 | 216 |
| காலி | 452 | 224 |
| புத்தளம் | 2008 | 206 |
| மன்னார் | தீ ஆயுத அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | |
| முல்லைத்தீவு | தீ ஆயுத அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | |
| கிளிநொச்சி | தீ ஆயுத அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | |
| யாழ்ப்பாணம் | தீ ஆயுத அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | |
| மொத்தம் | 15632 | 3125 |

அத்துடன் இதுவரை தீ ஆயுத அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கிடைத்துள்ள புதிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை கீழ் காட்டப்பட்டுள்ளது.

6.2 உயிர்ச்சொத்துப் பாதுகாப்பிற்காக ரிவோல்வர்.:. பிஸ்டல் வழங்கப்பட்டுள்ள (2014 ஆம் ஆண்டு முதல்)

| வருடம் | வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|
| 2014 | 44 |
| 2015 | 80+15 (Import pending) |

- பயிர்ப் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள புதிய தீ ஆயுத அனுமதிப்பத்திரங்கள் - 166
- சுய) சொத்துப் பாதுகாப்பிற்காக/ (ரிவோல்வர்/ பிஸ்டல்) - 396
- பழுதடைந்த தீ ஆயுதத்திற்காக புதிய தீஆயுத விண்ணப்பங்கள் - 23

இதற்காக தீ ஆயுதங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக புதிய கட்டளை விதிகள் ஆக்கப்பட்ட வண்ணம் உள்ளது. அது வரை தீ ஆயுத அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுப்பது கடுமையாக மட்டுப்படுப்பட்டுள்ளது அத்துடன் நாட்டினுள் சஞ்சரிக்கும் அனுமதியற்ற தீ ஆயுதங்களை அரசு கையேற்பதற்காக சட்டமுறையிலான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தீ ஆயுத பயன்பாடு தொடர்பில் நிறுவனம் மற்றும் தகவல்கள் தொடர்பான வலையமைப்பை ஏற்படுத்துவதற்காக வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

### 1.1.1 வணிகத்துறையில் வெடிப்பொருள் பாவனையில் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

வணிக வெடிப்பொருள் சட்ட வரைபுசெய்து மென்மேலும் அதில் திருத்தம் மேற்கொள்ள தேவையா என்பதைப் பரிசீலிக்க 7 செயலாளரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது வரை இமல்சன் வெடி பொருட்கள் மாதிரி தரத்தில் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் வெடி பொருட்கள் வணிக தரத்தில் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் பெற்றுக் கொடுக்கப்படுவதோடு உள்ளூர் கைத்தொழில் ஆக விருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் அத்துடன் வெடி பொருட்கள் கைத்தொழிலின் போது வியாபாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட அறிக்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தொல்பொருளியல் திணைக்களம் வலவிலங்கு வனப்பாதுகாப்பு திணைக்களம் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எழக் கூடிய பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருடனும் கலந்தாலோசிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.1.3 சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டதனியார் பாதுகாப்புசேவை வழங்கும் நிறுவனம் மற்றும் சமுத்திர பாதுகாப்பு சேவை வசதிகளை வழங்கும் நிறுவனங்களை ஏற்படுத்துதல்.

தனியார் பாதுகாப்பு சேவை வழங்குதல் சட்டத்தின் திருத்தத்தினைத் திருத்தம் செய்வதற்கும் சீருடை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமுத்திர பாதுகாப்பு சேவைகளை வழங்கும் போது கடற்படை ரக்னா/ லங்கா நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்புகளுடன் மிகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தனியார் பாதுகாப்பு சேவைக்கு தேவையான நவீனமயமாக்குவதற்காக இலங்கையில் பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் சங்கமும் (SASPA) கைத்தொழில் பாதுகாப்பு ஒன்றியம் (ISS) போன்ற நிறுவனங்களுடன் இதுவரை பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது.

# 07
# அபிவிருத்திப் பிரிவு

## 7.1 அறிமுகம்

2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலங்களில் நிறைவேபற்ற உத்தேசித்த விடயங்கள்

- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பௌதீக வளங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக மற்றும் கல்வி ஆளனியினர் பதவிகளை ஏற்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.
    - தெற்குப் பல்கலைக்கழகம்
    - வேரஹெர போதனா வைத்தியசாலை
    - மூன்று மாடி நிருவாகக்கட்டிடம்
    - விளையாட்டுப் பிரிவு கட்டிடம்
    - வேரஹெர KDU CARE கட்டிடம்
    - தலைமையக காரியாலய கட்டிடத் தொகுதி
    - விளையாட்டரங்கிற்கான மண்டபம்
    - கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் அச்சகம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.
- ஆ. 199 செயற்குழு உறுப்பினர்கள் 2015க்குக் கிட்டிய எண்ணிக்கையிலானவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் ஒன்றினைந்த சேவை மொழிப்பயிற்சி நிலையத்தின் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் பாடப்பரப்பினை விருத்தி.

## 7.2 2015 ஆம் ஆண்டு

- வதிவிட தமிழ் மொழி பயிற்சிக்காக முப்படை மற்றும் பொலிஸ் திணைக்கள மாணவர்கள் ஏனைய/ அதிகாரிகள் 226 பேருக்கான பதவி நிலையினர் பாடநெறியினை நடாத்துதல்.
- யுத்த நடவடிக்கை அடிப்படையில் முப்படை மற்றும் பொலிஸ் அங்கத்தவர்களின் பிள்ளைகளை அரசாங்க பாடசாலைகளில் அனுமதித்தல்.

| | | |
|---|---|---|
| தரைப்படை | - | 5597 |
| கடற்படை | - | 2185 |
| விமானப்படை | - | 1570 |
| பொலிஸ் திணைக்களம் | - | 2685 |
| மொத்தம் | | 12035 |

- யுத்த நடவடிக்கை அடிப்படையில் கொழும்பு பாதுகாப்பு வித்தியாலயத்திற்கு அனுமதித்தல்

| | தரம் 1 | தரம் 6 |
|---|---|---|
| தரைப்படை | 06 | 40 |
| கடற்படை | 33 | 13 |
| விமானப்படை | 30 | 11 |
| பொலரிஸ் திணைக்களம் | 53 | 24 |
| மொத்தம் | 224 | 88 |

- 7 ஆம் ஆண்டில் பூரணமாக மேற்கொள்ளத் 2015 திட்டமிட்டிருந்த நடவடிக்கைகள் தொடர்பாக 3 முன்மொழியப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் - 2016
- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்லைக்கழகத்தை அபி விருத்தி செய்து தற்போதுகாணப்படும் முன் மொழிவுகளை விருத்தி செய்தல்.
- நிர்வாக மற்றும கல்வி ஆளணியினர் பதவிகளை ஏற்படுத்துதல் மற்றும் வெற்றிடங் களை நிரப்புதல்

## 7.3 எதிர்கால கருத்திட்டம்

- தற்பொழுத மேற்கொள்ளப்படும் கொண்டு நடத்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்வி ஆளணியினர் தொகுப்பினை நிறைவு செய்வதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.
- ஒன்றிணைந்த சேவை மொழிப் பயிற்சி நிலையத்தின் கட்டமைப்பு வசதிகள விருத்தி செய்தல் மற்றும் பாடப்பரப்பினை விருத்தி சர்வதேச அமைதிப்படைக்கு உட்படுத் தப்படும் ஆயுதப்படை மற்றும் பொலிஸ் அங்கத்தவர்களுக்கு பிரெஞ்சு மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறிகளை ஆரம்பித்தல் இதற்காக கட்டிடங்களை நிர்மாணித்தல்.
- ஆயுதப்படை மற்றும் பொலிஸ் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு யுத்த நடவடிக்கை அடிப்படையில் அரசாங்க பாடசாலைகளில் அனுமதித்தல் மற்றும் கல்விப் புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- 2016 ஆண்டிற்காக தற்காலிகவிண்ணப்பப் படிவ கோவையினைத் தயாரித்தல்

| | |
|---|---|
| தரைப்படை | 5489 |
| கடற்படை | 2107 |
| விமானப்படை | 1619 |
| பொலிஸ் திணைக்களம் | 2685 |
| மொத்தம் | 11800 |

# 08
# நிதிப் பிரிவு

## 8.1 மேலோட்டமான பார்வை

பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு களையும் மேலதிக மதிப்பீடுகளைத் தயாரித்தல்
- வருடாந்த கட்டுநிதி தேவையினை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதல், மாதாந்த கட்டு நிதிக் கணக்கு மற்றும் பொதுத் திறைசேரிக் கணக்கு ஆகியவற்றை ஒப்பீடு செய்தல்
- மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகளைத் தயாரித்தலும் அதனை பொதுத் திறைசேரிக்கு அனுப்புதலும், அமைச்சுசார் கணக்குகளை பொதுத் திறைசேரிக் கணக்குடன் ஒப்பிடுதல்.
- ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்தல்
- வெடிபொருட்கள் மற்றும் சுடுகல உரிமங் களின் வருமானக் கணக்குகளைத் தயாரித்தல் (தலைப்பு – 1003/07/05).
- அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங் களுக்காக உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு களைத் திறப்பதுடன் திருத்தங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் பொதுத் திறைசேரி மற்றும் வங்கியுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளல்
- மூலதனக் கொள்வனவுக்கான கொடுப்பனவு
- ஏற்பாடுகளை விடுவித்தல், மேலதிக ஏற்பாடு களைக் கோருதல், நிதிசார் ஏற்பாடுகளை அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கு மாற்றுதல்.
- தேசிய பாதுகாப்பு நிதியத்துடன் தொடர் புடைய தொழிற்பாடுகள்
- 2015 ஆம் ஆண்டினுள் பின்வரும் தொழிற்பாடுகளின் நிதிசார் முகாமைத்துவத் திற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- பாதுகாப்புத் தலைமையக கட்டடத் தொகுதியின் நிர்மாண விடயங்கள்
- தந்திரோபாய பாதுகாப்புத் தொடர்பாடல் வலையமைப்புச் செயற்றிட்டம்
- அமைச்சு மற்றும் அதன்கழ் உள்ள நிறுவனங்கள் அத்துடன் சட்டநியதிச் சபைகள் ஆகியவற்றின் செயற்றிட்டங்களுக்கான பெறுகை விடயங்களைத் திட்டமிடுதலும் மேற்பார்வை செய்தலும்
- வீடுகளை நிர்மாணிப்பதற்கான “அபிவெனுவென் அபி” நிதியத்திற்காகக் கிடைக்கப் பெற்ற நன்கொடைகள் மற்றும் வருமானங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தலும் கணக்கு களை நிகழ்நிலைப்படுத்தலும்
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்கான சம்பளங் களைத் தயாரித்தல்
- முற்பணக் கணக்கு – B இன் கீழ் அமைச்சுக்கு உரியதான செயற்றிட்டங்களுக்கு கடன்களுக் கான வழிவகைகளைச் செய்தல்
- சேதங்களை பதிவழிப்புச் செய்வதற்காகவும் கணக்கீட்டு விடயங்களைக் கையாள்வதற் காகவும் அமைச்சு, அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் சட்டநியதிச் சபைகள் அத்துடன் செயற்றிட்டங்களில் காணப்படுகின்ற சேதங்கள் தொடர்பிலான பரிசீலனைகளை நடத்துதல்.

## 8.2 2015 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

அட்டவணை : 8.1 திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதி

| | 2014 (ரூ.) | | 2015 (ரூ.) | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கட்டு நிதி எல்லை | கிடைக்கப் பெற்ற கட்டுநிதி | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கட்டுநிதி எல்லை | கிடைக்கப்பெற்ற கட்டுநிதி |
| மீண்டுவருபவை | **3,783,370,000** | **1,794,300,000** | **2,073,320,000.00** | **1,567,534,000.00** |
| மூலதனம் | **6,336,900,000** | **2,733,510,000** | **10,352,250,000.00** | **2,737,430,000.00** |
| அரசாங்க சேவையாளருக்கான முற்பண B கணக்கு | **40,000,000** | **17,000,000** | **47,480,000.00** | **45,162,653.00** |

அட்டவணை : 8.2 வெடிக்கத்தக்க மற்றும் சுடுகல உரிமங்களினால் வசூலிக்கப்பட்ட வருமானம்

| வருடம் | மதிப்பீடு ரூ. (மில்.) | உண்மை வருமானம் ரூ. (மில்.) |
|---|---|---|
| 2011 | **12.00** | **10.088** |
| 2012 | **12.25** | **10.08** |
| 2013 | **12.25** | **11.871** |
| 2014 | **12.5** | **12.88** |
| 2015 | **12.5** | **12.96** |

அட்டவணை: 8.3 2015 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தித் தீர்க்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும்

| கடன் வகை | தீர்க்கப்பட்ட கடன் தொகை (மில்.) | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விழா முற்பணம் | **15.3** | **1535** |
| விசேட முற்பணம் | **3.0** | **749** |
| அழுத்த வருமானம் | **23.9** | **234** |
| துவிச்சக்கரவண்டிக் கடன் | **0.02** | **3** |
| கடன்சுமை நிவாரணத்திற்கான கடன் | **0.07** | **1** |

அட்டவணை: 8.4 2015 இல் சம்பளக் கொடுப்பனவு

| பிரிவு | தீர்க்கப்பட்டதொகை (மில்.) | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சின் அலுவலகம் | 4.6 | **5** |
| பொதுநிருவாகம் | 187.5 | **363** |
| அரசபுலனாய்வுச் சேவை | 801.2 | **1458** |
| தேசிய பயிற்சிப் படைஞர் படையணி | 80.8 | **106** |
| ராஜாங்க அமைச்சின் அலுவலகம் | 6.3 | **7** |

அட்டவணை: 8.5 அபி வெனுவன் அபி வீட்டுத் திட்டத்திற்காக விடுவிக்கப்பட்ட நிதி – **2015**

| | விடுவிக்கப்பட்ட நிதி (ரூ.மில்.) | அரைவாசி கட்டப்பட்ட வீடுகள் | முழுமையாகக் கட்டப்பட்ட வீடுகள் |
|---|---|---|---|
| கண்டி | **17.0** | **25** | **100** |
| அம்பாந்தோட்டை | **35.0** | **25** | **100** |
| மாத்தறை | **80.0** | - | **100** |
| முல்லைத்தீவு | **29.9** | **51** | - |
| வவுனியா | **32.2** | **51** | - |
| பொலனறுவை | **30.0** | - | **100** |
| மொணராகலை | **8.5** | **25** | **100** |

அட்டவணை: 8.6 ரணவிரு வீட்டுத் திட்டம்

| 2015.12.31 இல் உள்ளபடி மொத்தச் செலவு | | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| இராணுவம் | (ரூ.மில்.) **809.7** | **776** |
| கடற்படை | | **325** |
| விமானப் படை | | **302** |

அட்டவணை: 8.7 சேதமடைந்த மற்றும் பதிவழிப்புச் செய்தவை தொடர்பான விபரங்கள்

| | (ரூ.மில்.) |
|---|---|
| பதிவழிப்பின்றிய ஆரம்பமீதி | **3.7** |
| சேத மீதி | **1.4** |
| செய்யப்பட்டிருக்கின்ற கட்டணங்கள் | **1.2** |
| ஏடுகளிலிருந்தான பதிவழிப்புப் பெறுமதி | **0.8** |
| பதிவழிப்பின்றி முன்கொணரப்பட்ட மீதி | **3,8** |

## 09
## கணக்காய்வுப் பிரிவு

### 9.1 மேலோட்டமான பார்வை

**2015** ஆம் ஆண்டின் சனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் எய்தப் பெற்ற சாதனைகள்

2015 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் பின்வரும் உள்ளக கணக்காய்வு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன

### 9.2 2015 இன் சாதனைகள்

| நிறுவனம் | கணக்காய்வுப் பகுதி |
|---|---|
| பாதுகாப்பு அமைச்சு | வழங்கல் பிரிவு<br>நிர்வாகப் பிரிவு<br>போக்குவரத்துப் பிரிவு<br>கொடுப்பனவுப் பிரிவு<br>பெறுகைப் பிரிவு |
| தேசிய பயிற்சிப் படைஞர் படையணி | பெறுகைப் பிரிவு<br>பயிற்சிப் பாடசாலை, ரண்தம்பே |
| **MOD** தலைமையகம், முப்படையினர் நிர்மாணிப்புகள், அக்குரேகொட. | பெறுகைப் பிரிவு |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | மொணராகலை பிராந்திய அலுவலகம் |
| ரக்னா ஆரக்சக லங்கா (பிரை)லிமிட். | பகிர்வுப் பகுதி<br>கணக்கீட்டுப் பகுதி |
| இலங்கை இராணுவம் | அநுராதபுர, வவுனியா கட்டளையிடும் நிலையம் |
| இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை | பாவிக்கப்படாம லிருக்கும் வாகனங்களைக் கைவிடுதல் |
| சந்தஹிருசெய செயற்றிட்ட நிர்மாணம் | நிர்மாணம் |
| இலங்கை இராணுவம் | சுடுகலன்களின் அகற்றலும் வெடிக்கவைப்பும் |
| இலங்கை விமானப் படை | பெறுகையும் களஞ்சியப்படுத்தலும் |

### 9.3 கற்ற பாடம்

- நிதி, திறைசேரி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றுநிருபங்களின் நிகழ் நிலைப்படுத்தல் கணக்காய்வுப் பரிசீலனை களுக்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டி யுள்ளது.
- ஏனைய பிரிவுகளுக்குள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

### 9.4 பிரச்சினைகளும் சவால்களும்

- சம்பந்தப்பட்ட முகவராண்மைகளிடமிருந்து அதே நேரத்தில் தேவையான தகவல்களைப் பெறுவதற்கான ஆற்றல் இன்மை
- உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள் மீதான பயிற்சி வாய்ப்புகளின் பற்றாக்குறை
- பிரிவுகளிலிருந்தான ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடலில் காணப்படும் குறைபாடு
- குறிப்பிட்ட சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் காலாவதியாகியிருத்தல்

# 10
# சர்வதேச உறவுகள் பிரிவு

## 10.1 மேலோட்டமான பார்வை

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது மேற்பார்வை யின்கீழ் நேரடியாகத் தொழிற்படுவதுடன் பாதுகாப்புச் செயலாளரின் சர்வதேச உறவுகளின் சகல அடிப்படையான விடயங்களையும் கையாள்கின்ற பணியினைச் செய்கின்றது. இந்தப் பகுதி, சிரேஷ்ட உதவிச் செயலாளர் நிலையிலுள்ள இலங்கை வெளிநாட்டுச் சேவையின் ஒரு சிரேஷ்ட வேலை வாய்ப்பு உத்தியோகத்தரினால் தலைமை தாங்கப்படுகின்றது.

அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி, பாதுகாப்புச் செயலாளருடனான ஆலோசனையின் சர்வதேசப் பரிமாணம் ஒன்றைக் கொண்டுள்ள தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் மீதான பாதுகாப்புக் கொள்கை நிலைமைகளை வழங்குகிறது.

சர்வதேச உறவுகள் பகுதி வழக்கமான அடிப்படை யில் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

பாதுகாப்புத் தொடர்பாக வெளிநாடுகளிடமிருந்து உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் சந்திப்புகளின் அடிப்படையான அம்சங்களை ஒருங்கிணைத்தல் ; வெளிநாட்டு உயர் பிரதானிகளுடன் பாதுகாப்புச் செயலாளரின் சகல தொடர்பாடல்களையும் கையா ளுதல் ; தேவையேற்படின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் ஒருங்கிணைப்பதும் பாதுகாப்பு உள்ளீடுகளை வழங்குதலும் ; பாதுகாப்புச் செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளி நாட்டுச் சந்திப்புகளுக்கான பொருட்கள் / கதைக் கின்ற விடயங்கள் / பேச்சுகள் / நிகழ்ச்சித் திட்டங் களைச் சுருக்கமாகத் தயாரித்தலும் அத்தகைய சந்திப்புகளின் போது ஏற்பட்ட முடிவுகளை பின்பற்று தலும்; அதிமேதகு சனாதிபதி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வெளிநாட்டுச் சந்திப்பு களுக்கான பாதுகாப்பு உள்ளீடுகளைத் தயாரித்தல் ; வெளிநாடுகளுடனான பாதுகாப்பு உடன்படிக்கைகள் /MoUs உடன் சம்பந்தப்பட்ட வேலைகளை ஒருங்கிணைத்தல் ; ஐக்கிய நாடுகள் பொதுக்கூட்ட (UNGA) காலங்களில் பாதுகாப்பினை வழங்குதல் ; ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எழுகின்ற பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கான பிரதிபலிப்புகளை ஒருங்கி ணைத்தல் ; போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக் கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNODC) மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் (UNHCR) ஆகியவற் றுடன் பாதுகாப்பு அமைச்சின் இடைமுகம்களை ஒருங்கிணைத்தல்; பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மீதான தேசிய புலனாய்வுத் தலைமை அலுவலகத்திற்கு உதவுவதுடன் (ஐக்கிய நாடுகள் பேரவை ஒழுங்குவிதிகள் 1267, 1373, 1540 போன்றவை) ஐக்கிய நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு நிறைவேற்றுப் பணிப்பகத்துடன் இடைமுகம்களை ஒருங்கிணைத்தல் ; பாதுகாப்பு அமைச்சின் ஒழுங்குபடுத்தல் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு; சார்க், பிம்ஸ்ரெக், சங்றி-லா டயலக், ஆசியன் பிராந்திய அமையம் (ARF), பாலி செயன்முறை போன்றவற்றுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு விடயங்களை ஒருங்கிணைத்தல்; இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் வருடாந்த பாதுகாப்புக் கலந்துரையாடல் வேலைகளை ஒருங்கிணைத்தல் ; இந்தியா, இலங்கை மாலைதீவு ஆகிய நாடுகளுக் கிடையே முத்தரப்பு கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஏற்பாட்டு வேலைகளை ஒருங்கி ணைத்தல் ; ஆட்கடத்தல் மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் மீது அவுஸ்திரேலியா - இலங்கை கூட்டு நடவடிக்கைக் குழுவின் வேலையினை ஒருங்கி ணைத்தல் ; ஆயுத வர்த்தகம் மற்றும் ஆயுதக் களைவுடன் சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்பாடுகள் மீது கொள்கை நிலைகளைத் தயாரித்தல் ; சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடு களுக்கான பாதுகாப்பு உள்ளீடுகளைத் தயாரித்தல் (உதாரணமாக, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாடு [ICCPR]) ; ஐக்கிய நாடுகள் விசேட நடைமுறை ஆணை பெற்றவர்களினால் கவனம் செலுத்தப்பட்டவற்றின் மீது பாதுகாப்புத் தாபனங்களிலிருந்தான பிரதிபலிப்பு களை ஒருங்கிணைத்தல் ; பாதுகாப்பு மீதான தாக்கங்களைக் கொண்டுள்ள வெளிநாட்டுக் கொள்கை விடயங்கள் மீது அமைச்சரவை கண்காணிப்புகளைத் தயாரித்தல் ; சர்வதேச பரிமாணத்தைக் கொண்டுள்ள பாதுகாப்பு விடயங்கள் மீது அமைச்சரவைக்கான அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் குறிப்புகளைத் தயாரித்தல் ; வலிந்து அல்லது கட்டாயப்படுத்திச் செய்யப்பட்ட காணாமற் போதல்கள் மீதான ஐக்கிய நாடுகள் பணிக் குழுவினர் (UN WGEID) மற்றும் ஏனையவர்களிடையே நீதிக்குப் புறம்பாக தடுத்து வைத்தல் மீதான ஐக்கிய நாடுகள் பணிக்குழு (UN WGAD) ஆகியவற்றிற்குத் திரட்டப்பட்ட பிரதிபலிப்புகள் மீதான தேசிய புலனாய்வின் தலைமை அலுவலக வேலைக்கு உதவுதல் ; வெளிநாட்டு அரசாங்கங்களுடன் லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னோலொஜி லிமிட் (LLTL) இன் வேலையின் மீது அவர்களிடமிருந்து வரும் கோரிக்கைக்கிணங்க உதவுதல் ; வெளிவாரிப் பாதுகாப்புச் சூழல் மற்றும் அக்கறையின் மீதான இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய தந்திரோபாய அபிவிருத்திகள் ஆகியவற்றின் மீது பாதுகாப்பு அமைச்சின் கொள்கைத் திட்டமிடல் பிரிவுக்கு கொள்கை உள்ளீடுகளை வழங்குதல்.

## 10.2 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

### 1.1.1 புலனாய்வுப் பகிர்வின் மீதான BIMSTEC உப குழுவின் 4 ஆவது கூட்டம், 30-31 மார்ச் 2015, கொழும்பு

பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட புலனாய்வுப் பகிர்வின் மீதான BIMSTEC உப குழுவின் 4 ஆவது கூட்டம் 2015 மார்ச் 30 – 31 வரை கொழும்பில் இடம்பெற்றது. பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தன.

இக்கூட்டம் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச புலனாய்வுச் சேவை ஆகியவற்றின் சர்வதேச உறவுகள் பகுதியினால் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இலங்கை BIMSTEC இனுள் புலனாய்வினைப் பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் முன்னணி வழிகாட்டியாக இருப்பதுடன் ஒத்துழைப்பு காணப்படுகின்ற ஆபத்தான இந்தப் பகுதியில் BIMSTEC உறுப்பு நாடுகளுக்கிடையே நெருக்கமான தொடர்பினை முன்னேற்றுவதற்கு முயறசி செய்திருக்கிறது. இக்கூட்டத்தின் நோக்கம் புலனாய்வுகளையும் தகவல்களையும் பாதுகாப்பான ஒரு முறையில் பகிர்ந்து கொள்வதற்காக உறுப்பு நாடுகளுக்கு ஒரு மேடையை உருவாக்குவதற்கான வசதியை வழங்குவதாகும். குறிப்பான விபரக் கலந்தாய்வுகள் BIMSTEC தகவல் / புலனாய்வுப் பகிர்வு தரவுத் தளத்தினைத் தாபிப்பதன் மீது நடத்தப்பட்டதுடன் இது தற்போது செயன்முறைப்படுத்தப்படுகிறது.













### 10.2.2 IISS சங்ரி-லா உரையாடல் : 14 ஆவது ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாடு, 29-31 மே 2015, சிங்கப்பூர்

IISS சங்ரி-லா உரையாடல்: 14 ஆவது ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாடு 2015 மே 29 – 31 வரை சிங்கப்பூரில் நடைபெற்றது. சங்ரி-லா உரையாடல் என்பது ஆசியப் பிராந்தியத்தின் மிகப் பெரிய பாதுகாப்பு அமையம் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது ஆசிய பசுபிக் பிராந்தியம் முழுவதுதிலும் அதற்கு அப்பாலும் இருந்தான பாதுகாப்புத் துறையின் பாதுகாப்பு அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலாளர்கள் மற்றும் ஏனைய பிரதான நாட்டதாரர்களை ஈர்த்துள்ளது. வலுச் சமநிலை, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட உச்சிமாநாட்டின் தலைமையுரையை சிங்கப்பூர் பிரதமர் மேன்மைதங்கிய லீ ஹுசெய்ன் லூங் ஆற்றினார். அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் கலாநிதி. அஸ்ரொன் காட்டர் உம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் மக்கள் மற்றும் தேசங்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்தக்கூடிய பிராந்தியக் கட்டுமான பகிர்வுக்கான தேவை பற்றி உரையாற்றியிருந்தார்.

சாங்றி-லா உரையாடலுக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவான் விஜேவர்த்தன பங்குபற்றியிருந்தார். கூட்டத்தின் ஒரு புறத்தில் தாய்லாந்தின் பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் பிறவிட் வொங்சுவொன், ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்புக்கான இராஜாங்கச் செயலாளர் ஓய்வுபெற்ற கௌரவ மிச்சல் பலொன், சிங்கப்பூர் 2 ஆவது பாதுகாப்பு அமைச்சர் கௌரவ லூயி துக் யெவ் ஆகியோரை மரியாதை நிமித்தம் சந்தித்திருந்ததுடன் மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதித் தலைமை அரச அதிகாரி சீனாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவருமான அட்மிரல் சண் ஜியாங்குவா அவர்களையும் இந்தியப் பாதுகாப்பிற்கான இராஜாங்க அமைச்சர் ராயோ இந்திரஜித் சிங் அவர்களையும் சந்தித்து இந்த நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பினை வலுப்படுத்து

வதற்கான கலந்தாய்வுகள் செய்யப்பட்டிருந்தன. இராஜாங்க அமைச்சரும்கூட இணக்கப்பாட்டுப் பிரச்சினைகள் பற்றிய உரையின் மீது புதிய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப் பட்டிருப்பதை அவர்களுக்கு சுருக்கமாக எடுத்துக் கூறினார்.

மறுபுறத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. பி.எம்.யு.டி. பஸ்நாயக்க அவர்களும் சிங்கப்பூரின் நிரந்தரப் பாதுகாப்புச் செயலாளர் திரு. சாங்க்ஜெங் கிட் இனைச் சந்தித்து கொள்கை மற்றும் இயக்கப்பாட்டு மட்டங்களில் வழக்கமுறையான இடைமுகங்களின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒழுங்கமைப்பினை எவ்வாறு சிறப்பானதாக்குவது என்பது தொடர்பில் கலந்துரையாடி இருந்தார்.

இந்த வருட சங்ரி-லா உரையாடலுக்கான பிரதிநிதிகளாக பாதுகாப்புத் தலைமை அதிகாரி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, லெப்.ஜெனரல் ஏ.டபி.ஜே. சி. த சில்வா, இராணுவத் தளபதி, றியர் அட்மிரல் ரவி விஜேகுணரத்ன, கடற்படையின் தலைமை அதிகாரி, விமானப் படையின் தலைமை அதிகாரியான எயார் வைஸ் மார்ஷல் கஹுான் புளத்சிங்கல, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் சயலாளர் (வெளிநாட்டு அலுவல்கள்) திருமதி. சசிகலா பிரேமவர்த்தன மற்றும் சிங்கப்பூருக்கான இலங்கை பதில் உயர்ஸ்தானிகர் திரு. விஸ்வநாத அபொன்சு ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பயணத்திற்கான தனித்தனியான அம்சங்கள் அனைத்தையும் பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி ஒருங்கிணைத்திருந்தது.








### 10.2.3 3 ஆவது வருடாந்த இந்திய - இலங்கை பாதுகாப்புக் கலந்துரையாடல் - 21 செப்ரெம்பர் 2015





இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் திரு. ஸ்ரீ ஜி மோகன்குமாரின் அழைப்பின் பேரில், புதுடில்லியில் நடைபெற்ற 3 ஆவது இந்திய - இலங்கை வருடாந்தப் பாதுகாப்பு கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்கள் செப்ரெம்பர் 21 இல் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டி ருந்தார். இந்திய - இலங்கை பாதுகாப்புக் கலந்துரையாடல் 2012 இல் தொடங்கப்பட்ட திலிருந்து, ஒத்துழைப்புக்கான புதிய பகுதிகளை ஆய்வு செய்யும் அதேவேளை இரு நாடு களுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப் பின் முழுமையான செயல்திறத்தினை அது வருடாந்தம் மீளாய்வு செய்கிறது.

விஜயத்தின்போது நடைபெற்ற இடைமுகக் காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான பாதுகாப்பினைப் பலப்படுத்துவதன் பொருட்டு அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன

அவர்களால் இடப்படுத்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவைக்கு முன்னுரிமை அளித்திருந்தார்.

இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் கொண் டுள்ள அக்கறையின் பேரில் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் கலந்துரையாடி, பிராந்தியத் தில் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றின் பேணுகைக்கான பொதுவான ஈடுபாடு மற்றும் சவால்களைப் பற்றிப் பேசுவதற்கான நோக்கு டன் பாதுகாப்பு விடயங்கள் மீது ஒரு செயற்பாட்டு ஒத்துழைப்பினை தொடர்வது என்ற இன்றியமையாத விடயங்கள் மீது இணக்கம் கண்டிருந்தனர்.

சம்பந்தப்பட்ட ஆயுதப் படைகளுக்கு இடையில் நடைபெற்ற அதிகாரி மட்டப் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட தீர்மானமும் இரு நாடுகளினதும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களங்களினதும் அதிகாரி மட்டத் தொடக்கப் பேச்சுவார்த்தைகளில் பற்றிக் கொள்ளப்பட்ட விடயங்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருந்தமையை கொழும்பில் (2014 அக்டோபர்) நடைபெற்ற 2 ஆவது பாதுகாப்புக் கலந்துரையாடலில் இருதரப்பும் ஏற்றுக் கொண்டிருந்தன. பயிற்சிப் பரப்புக்களில் இருதரப்பு உறவினை விருத்தி செய்தல், இராணுவ மற்றும் பாதுகாப்பு பரிமாற்றங்கள், கூட்டு நடவடிக்கைகள் மற்றும் கடல்சார் விழிப்புணர்வும் கடலோர ரோந்துப் படகுகள் தொடர்பில் இலங்கைக் கடற்படைக்கு உதவியளித்தலும் என்பன கலந்துரையாட லுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனைய பரப்புகளில் சிலவாகும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது விஜயத்தின்போது மரியாதையின் நிமித்தம் இந்தியப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ராயோ இந்திரஜித் சிங் மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மொக்டர். அஜித் கே டோவல் ஐயும் சந்தித்திருந்தார்.

இலங்கைப் பிரதிநிதிகளின் விஜயத்தில் இந்தியாவுக்கான இலங்கை பதில் உயர்ஸ்தானிகர் திரு. எம்.ஆர்.கே. லெனகல, இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஏ.டபி.ஜே.சி. த சில்வா, பிரதித் தலைமை அதிகாரியும் இலங்கைக் கடற்படையின் கிழக்குக் கடற் பிராந்தியத் திற்கான தளபதியுமான ரியர் அட்மிறல் என்.பி.ஜே. ரொசைறோ, இலங்கைக் கடற்படையின் எயார் வைஸ் மார்ஷல் சி.ஆர். குருசிங்க, கரையோரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஜி.டி.ஏ.எஸ். விமலதுங்க, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (வெளிநாட்டு அலுவல்கள்) திருமதி. சசிகலா பிரேமவர்த்தன மற்றும் புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகருக்கான பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் டபி.எச்.யு.பி. ஹேவகே ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

இந்த விஜயத்திற்கான சகல தனித்தனி விடயங்களையும் பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி ஒருங்கிணைத்திருந்தது.

### 10.2.4 இந்தியக் கடற் பிராந்தியத்தில் சிரேஷ்ட போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளுக் கான கூட்டம் -13-15 அக்டோபர் 2015, கொழும்பு






போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் (UNODC) உலகளாவிய கடற் குற்றங்கள் நிகழ்ச்சித் திட்டம் (GMCP) மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியன இணைந்து கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் 2015 அக்டோபர் 13 – 15 வரை இந்தியக் கடற் பிராந்தியத்தின் சிரேஷ்ட போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளுக்காக கூட்டம் ஒன்றினை நடாத்தியது. இந்தக் கூட்டத்தில் இந்தியக் கடற் பிராந்தியத்தில் உள்ள 21 நாடுகளைச் சேர்ந்த தலைமை அல்லது பிரதித் தலைமை மட்டத்திலுள்ள 60 இற்கும் மேற்பட்ட பிரதிநிதி களும் 7 நிறுவனங்களும் ஒன்றிணைந்திருந்தன. இக்கூட் டமானது இந்தியக் கடலில் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு எதிராக போதைப் பொருள் தடுப்பு முகவராண்மைகள் மத்தியில் இருந்து பிராந்திய, உப பிராந்திய ஒத்துழைப்பு களை அதிகரிப்பதும் கடலில் அல்லது கடல் துறைமுகம்களில் சட்டப்படி போதைப்பொருள் கைப்பற்றல்களுக்கான நியமப்படுத்தப்பட்ட தகவல் சேகரிப்பினை அபிவிருத்தி செய்வதனை நோக்கிய வேலைகளைச் செய்வதையும் நோக்காகக் கொண்டிருந்தது.

இந்தியக் கடற் பரப்பில் கண்டுபிக்கப்படும் சகல போதை மருந்துகளையும் சேகரிப்பதற்கு UNODC இனாலும் ஒன்றிணைந்த கடல்சார் படைகளினதும்

ஒரு கூட்டு முயற்சியில் கடலில் (2015 அக்டோபரில்) போதைப் பொருள் கைப்பற்றல் பற்றிய ஒரு பொழிப்புரையானது பிரதம விருந்தினராக ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்ட இலங்கை சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர் களிடம் கையளிக்கப்பட்டது. பொழிப்புரையானது சம்பந்தப்பட்ட நாடுகளில் அபின் கலந்த மருந்துத் தயாரிப்பு ஆய்வுகூடங்களை அடையாளங் காணும் நோக்குடன் தூய்மைப்படுத்தல், ஹெரோயின் பொதியிடல் மற்றும் தயாரிப்புகளுக்கு இடையேயுள்ள இணைப்பினை ஆய்வு செய்வதற்கான முயற்சி களுக்கு உதவுவதற்கு எதிர்பார்க்கிறது. நுண்ணாய்வு கூட கடல்வழி சட்ட அமுலாக்கம், தூய்மைப்படுத்தல் சோதனைக்கான இயல் திறனைக் கட்டியெழுப்புதல், விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சி, நாடுகடந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற அலகுகள் மற்றும் பகுப்பாய்வு மென்பொருள் கருவிகளைத் தாபித்தல் போன்ற பரப்புகளில் இந்து சமுத்திர நிலைகள் உயர்தர விசேடத்துவப் பயிற்சிகளை UNODC யின் உதவியுடன் அடைவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

கூட்டத்தின் கடைசி நாளில் இலங்கை கடற்படைத் இடைத்தங்கல் அணியினால் நடுக்கடல் இடைத்தங்கல் பற்றிய நடவடிக்கைப் போலி ஒன்றும் மீளாயப்பட்ட துடன் இலங்கை கரையோரப் பாதுகாப்பு படையினரால் மீன்பிடிப் படகுகளில் போதை மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு முழுவதுமாக மறைக்கப்பட்டதான அறைகளை அடையாளங் காண்பதற்கான படகுத் தேடுதல் நுட்பங்களும் மீளாயப்பட்டன. இந்த நடவடிக்கை இலங்கை கடற்படை, இலங்கை கரையோரப் பாதுகாப்புப் படை மற்றும் கொழும்பு கடற்பிராந்தியத் தளத்தின் ஒன்றிணைந்த கடல்சார் படைகள் (CMF) ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கையான இருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி UNODC யுடன் இணைந்து கூட்டத்தினை கையாளுகின்ற மையப் புள்ளியாக இருந்தது.

### 10.2.5 ஆறாவது ஷியாங்சன் அமையம், ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பும் ஒத்துழைப்பும் : உண்மை நிகழ்வுகளும் நோக்குகளும், 16-18 அக்டோபர் 2015, பீஜிங், சீனா










2015 அக்டோபர் 16 தொடக்கம் 18 வரை சீனாவின் பீஜிங் இல் நடைபெற்ற 6 ஆவது ஷியாங்சன் அமைய மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கலந்து கொண்டார். இந்த அமையத்திற்கு சீன இராணுவ விஞ்ஞான சங்கமும் (CMSS) சர்வதேச தந்திரோபாய ஆய்வுகளுக்கான சீன நிறுவனமும் (CIISS) இணை அனுசரணை வழங்கியிருந்தன.

அமையத்தின் ஒரு புறத்தில் மக்கள் விடுதலை இராணுவத்தின் (PLA) பிரதி இராணுவத் தளபதி அட்மிரல் சண் ஜியாங்குவாவைச் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய ஆராயப்பட்டன. பயிற்சி, பாதுகாப்பு தொடர்பான கையளிப்புகளைப் பரிமாறிக்கொள்ளல், கூட்டு இராணுவ நடவடிக்கை, பாநெறிகள் / செயலமர்வுகள் / வேலைப் பட்டறைகள் போன்றவற்றில் பங்குபற்றுதல் மற்றும் இலங்கையில் 2016 இன் முற்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான 2 ஆவது பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடலை நடத்துதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. ஆரம்பகட்ட பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடல் 2014 செப்ரெம்பரில்

பீஜிங்கில் நடைபெற்றது. பிரதி இராணுவத் தளபதியினால் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஸியாங்சன் அமையத்தின் செயலாளர் ஹெட்டியாராச்சி ஆசிய பசுபிக் கடல்வழிப் பாதுகாப்பு மீதான 4 ஆவது முழுமையான அமர்வுக் காலப்பகுதியில் இடர் மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஒரு உரையினை ஆற்றியிருந்தார். அவர் தனது உரையில், தேசங்களின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புக்கு கடல்வழிப் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி கோடிட்டுக் காட்டியிருந்தார். அபிவிருத்திக்கான பல மட்டங்களிலும் கடல் மீது தங்கியிருக்கின்ற இலங்கை போன்ற ஒரு சிறிய தீவான நாட்டிற்கு இந்த விடயம் பெருத்த சவால்களை கொண்டுள்ளதாக மேலும் தெரிவித்த அவர் அதனை முறியடிப்பதற்கான அதிகளவு வாக்குறுதிகளையும் நிலைநிறுத்தியிருந்தார்.

தொடர்பாடல்கள் மற்றும் வர்த்தகத்திற்காக கடல் மற்றும் கடல் வழிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்து வதற்கு கூட்டு ஒழுங்குகளை விருத்தி செய்வதில் இலங்கையின் நம்பிக்கையினையும் மக்கள் பாதுகாப்பாக இருப்பதை உணரும் சூழல் ஒன்றை உருவாக்கவும் சமாதானமான கடல்வழி பாதுகாப்பு வெளியிலிருந்து பெறக்கூடிய நன்மைகளை சமமான பெற்றுக் கொள்ளவும் என ஆசிய பசுபிக் பிராந்தியம் மற்றும் அதற்கப்பாலுள்ள பங்காளிகளை இலங்கை எதிர்பார்த்துள்ளதையும் செயலாளர் வலியுறுத்தி யிருந்தார்.

2006 இல் CMSS இனால் தாபிக்கப்பட்ட பாதுகாப்பு பற்றிய கலந்துரையாடலுக்கான ஒரு மேடையே ஷியாங்சன் அமையம் ஆகும். இந்த அமையம் கருத்தொற்றுமைகளை விரிவாக் குதல், ஒத்துழைப்புகளை மேம்படுத்தல் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சமாதானத்தையும் நிலைபேறான தன்மையினையும் ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. இந்த அமையம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் சர்வதேச பாதுகாப்பை கருத்திற்கொண்ட வேறு முக்கிய பிரச்சினைகள் பற்றி கவனஞ் செலுத்தல் போன்றவற்றை பிரதான மையப்புள்ளியாகக் கொண்டுள்ளது. 2014 இல் நடைபெற்ற 5 ஆவது ஷியாங்சன் அமைய மாநாட்டின் பின்னர், ஈராண்டிற்கு ஒருமுறை என்றிருந்த அமைய மாநாடு தடம் 2 அமையத்திலிருந்து தடம் 1.5 அமையத்திற்கு மேம்படுத்தப்பட்டு வருடாந்த அடிப்படையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

இந்த விஜயத்திற்கான சகல தனித்தனி விடயங் களையும் பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி ஒருங்கிணைத்திருந்தது.

### 10.2.6 வலிந்து அல்லது கட்டாயப்படுத்தி காணாமற் செய்யப்பட்டவர்கள் மீதான ஐக்கிய நாடுகளின் பணிக் குழுவின் இலங்கை விஜயம் - 2015 நவெம்பர் 9 முதல் 18 வரை

பாதுகாப்புச் செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்களின் தலைமையிலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி. சித்திராங்கனி வாகீஸ்வரா அவர்களின் இணைத் தலைமையிலும் மேற்படி விஜயத்திற்கான ஆயத்தப்படுத்தல் பற்றி நடத்தப்பட்ட பல கூட்டங்கள் பாதுகாப்பு அமைச்சில் நடை பெற்றன. இந்தக் கூட்டங்களுக்கான தனித்தனி அம்சங்களும் சர்வதேச உறவுகள் பகுதியி னாலும் பாதுகாப்பு அமைச்சின் தேசிய புலனாய்வுத் தலைமை அலுவலகத்தினாலும் கையாளப்பட்டன.

2012 இல், இலங்கை அரசாங்கம் WGEID இனால் கவனஞ் செலுத்தப்பட்டு சாட்டியுரைக்கப்பட்ட காணாமற் போகச் செய்த விடயங்களை ஆராயும் பொருட்டு உள்ளக அமைச்சுசார் பணிக்குழு ஒன்றினை தாபித்துள்ளது. இது UN-WGEID இனால் சமர்ப்பிக்கப்பட்ட காணாமற்போகச் செய்தல்க ளின் வழக்குகளுடன் தொடர்புபட்ட கொள்கைப் பிரச்சினைகளுடன் தீர்ப்பதற்கான ஒரு குழுவாக இது இருந்தது. இக்குழுவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் உள்ளடக்கப்பட் டுள்ளனர். உள்ளக அமைச்சுசார் பணிக் குழுவின் தீர்மானத்தின்படி, பாதுகாப்பு அமைச்சி னால் கூட்டப்பட்ட ஒரு உள்ளக முகவராண்மை பணிக் குழுவானது இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கியவாறு அமைக்கப் பட்டது. இந்தப் பணிக் குழுவுக்கு காணாமற் போகச்செய்த வழக்குகளின் தற்போதைய நிலையைத் தெரிந்து கொள்வதற்காக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

## 10.3 வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு தகவல் வழங்கும் வேலை முறை பின்வருமாறு:

- பூர்வாங்க அறிக்கை

ஏதாவது சட்ட அமுலாக்க முகவராண் மைக்கும் முறையாக அறிக்கையிடப்பட் டிருக்கின்ற வழக்கு நிலைமை பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு பூர்வாங்க அறிக்கையினை அனுப்புதல்; நீதிமன்றம் ஒன்றில் வழக்காக இருக்குமெனின் முறைப்பாடு தெரிவித்த இடம், முறைப்பாட்டினை அடையாளங் காணல்; வழக்கு இலக்கம் மற்றும் நீதிமன்றம், நீதிமன்ற வழக்கில் உள்ள முன்னேற்றம், அதிகாரிகளால் எவ்வளவு தூரத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் வேறு தொடர்புபட்ட தகவல்களும். பூர்வாங்க அறிக்கையானது வெளிநாட்டு

அலுவல்கள் அமைச்சின் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்த இறுதி WGEID தரவுத்தாள் தொடரின்படி, அனுப்பப்பட்டது. மேலும், தேவைப்படும் போதெல்லாம் அவை வேறாக்கப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு ஒரு புதிய வழக்கு அறிக்கையிடப்படுகிறது.

■ விபரமான அறிக்கை

விடயம் தொடர்பான தற்போதைய நிலை பற்றிய மெய்நிலை அறிக்கையை அனுப்புதல்; அந்நபர் உயிருடன் உள்ளாரா, இறந்துவிட்டாரா, இறந்திருப்பின் அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டதா, இறப்புக்கான காரணம், இறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதா / விநியோகிக்கப்பட்டுள்ளதா, நட்ட ஈடு வழங்கப்பட்டதா, நபர் உயிருடன் இருப்பின் (இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வசித்தால்) அவர் பற்றிய மேலதிக தகவல்கள், விசாரணை முன்னேற்றங்கள், ஏதாவது கண்டுபிடிக்கப்பட்ட குற்றம், அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவை

2015 அக்டோபரில் உள்ளபடி, WGEID இனால் தொடர்பாடப்பட்ட 5,750 வழக்குகளின் UN-WGEID இற்கு அனுப்புவதற்காக தற்போது 2,017 வழக்குகள் பற்றிய ஆராய்வுகளை பாதுகாப்பு அமைச்சு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வழங்கியுள்ளது. இந்த வழக்குகளை ஆராயும் செயன்முறை ஆகவும் புதிய வழக்குகளுக்கு முன்னுரிமை அளித்து ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பின் பின்னோக்கிய காலவரன்முறைப்படி நடைபெறுகிறது. பொறுப்புகளை உறுதிப்படுத்தும் நோக்கத்திற் காக பாதுகாப்பு அமைச்சு இலங்கைப் பொலிஸ், அரசாங்க புலனாய்வு முகவராண்மை மற்றும் ஆயுதப் படைகளின் ஏனைய புலனாய்வு முகவராண்மைகளுக்கு ஆராய்வு செய்வதற் காக மாதாந்தம் 100 வழக்குகளை அனுப்பியது. எவ்வாறாயினும், அடிப்படையான நுண்ணாய்வுச் செயன்முறையில் ஈடுபட்டு வருகின்ற புலனாய்வு அதிகாரிகளைப் பொறுத்தவரை வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட முறைப்பாடுகளை சட்ட அமுலாக்க அதிகாரி களுக்கு பாரப்படுத்துவதற்கான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, இலங்கைப் பொலிஸ்

எனவே, 2014 இல் பாதுகாப்பு அமைச்சு நுண்ணாய்ந்து பார்ப்பதற்காக பொலிஸ்மா

அதிபருக்கு முழுமையான வழக்குகளையும் மீள சமர்ப்பித்திருந்தது. இலங்கைக்கு UN-WGEID அணி விஜயம் செய்வதற்கு முன் விஜயத்தின்போது தொழினுட்ப மட்டத்தில் நடத்தப்படவுள்ள கூட்டத்தில் UN-WGEID அணிக்கு முன்னலைப் படுத்துவதற்காக, சகல வழக்குகுள் மீதான நுண்ணாய்வின் அடிப்படை களை பூரணப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் பாதுகாப்பு அமைச்சினால் கோரிக்கை வைக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி “UN-WGEID கூறப்பட்ட வழக்கு களுக்கான நுண்ணாய்வு மீதான உள்ளக அமைச்சுசார் செயலணி” ஒன்றினை அமைப்பது பற்றிய கருத்தாடல் பத்திரத்தையும் தயாரித் திருந்ததுடன் இது முன்னோக்கிய நடவடிக் ஐககாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச் சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# 11
# பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையம்

## 11.1 மேலோட்டமான பார்வை

சுயாதீன நாடொன்றின் கட்டாயத் தேவையான தேசிய பாதுகாப்பை பாதுகாக்கும் நோக்கில் பாதுகாப்புடன் தொடர்புடைய செய்திகளை சேகரித்தல் மற்றும் அவற்றை ஆய்வு செய்து சரியானதும் நேர்த்தியானதுமான செய்திகளை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்குதல். பல்வேறு ஊடகங்கள் மூலமாக வெளியிடப்படும் தவறான செய்திகளை சரிசெய்து உரிய முறையில் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்குதலும் இந்த ஊடக மையத்தின் ஊடாக நடைபெறுகின்றது.

## 11.2 2015 இன் சாதனைகள்

2015 ஆம் ஆண்டில் பின்வரும் சாதனைகள் அடையப் பெற்றுள்ளன.

- தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட செய்திகள் மற்றும் தகவல்களை வேகமாகவும் உடனுக்குடனும் ஊடகங் களுக்கு வழங்குதல்.
- தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் செய்திகளை அடையாளங் கண்டு அவற்றை ஊடகங்கள் மூலமாக நிவர்த்தி செய்தல்.
- தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு சரியான முறையில் ஊடகங்களுக்கு பெற்றுக்கொடுக்க வழி செய்தல்.
- பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்கள் உடனான சமூக தொடர்புகளை மேம்படுத்தல்.
- எதிர்கால தேவைகளின் போது தகவல் களை பெற்றுக் கொள்வதற்காக செய்தித் தாளை சேகரித்து பாதுகாத்து களஞ்சியப் படுத்தல், ஆவண காப்பகம் ஒன்றை பேணுதல்.
- பாதுகாப்பு அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஊடகத்துறை யினருடன் தொடர்பு கொண்டு ஒத்துழைப் புக்களை பெற்றுக் கொள்ளுதல்
- தேவைகள் ஏற்படும் சந்தர்பத்தில் எழுத்து மூலமாக மற்றும் வாய் மொழி மூலமாக ஊடக அறிக்கைகளை வெளியிடுதல்.


## 11.3 2015 ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு / செயற்பாடுகளின் மதிப்பீடுகள்

### 11.3.1 நிதிசார் முன்னேற்றம்

ஊடக மையத்திற்கு தேவையான நிதி மற்றும் மூலப் பொருட்கள் 2008 முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 103-01-06 என்ற ஒதுக்கீட்டின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டது. எனினும் 2015 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து பெறப்பட்டது. ஊடக மையத்திற்கான தேவைகள் கீழ் குறிப்பிடப்பட் டுள்ளவாறு பணிப்பாளரின் எழுத்து மூல வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்டது.

ஊடக மையத்தின் மாதாந்த சிறு தேவைக ளுக்காக சில்லறைக் காசேடாக ரூபாய். 5000.00 பெற்றுக் கொடுக்கப்படுவதோடு அவற்றின் செலவுகள் பற்றிய விபரங்களை பற்றுச்சீட்டுக் களுடன் ஒவ்வொரு மாத இறுதியிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்படைத்தல்.

11.1



### 11.3.2 கட்டிட புனரமைப்பு

ஊடக மையம் நிருவப்பட்டுள்ள கட்டிட தொகுதி மிகவும் பழைமை வாய்ந்த நிலையில் காணப்பட்டதால் அதன் புனர்நிர்மாணத்திற்காக ரூபாய் 3இ 849இ766.80 சதம் பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெறப்பட்டதோடு இதன் நிர்மான பணிகளுக்கு இலங்கை இராணுவத்தின் பொறியியல் ரெஜிமண்டின் உதவியுடன் முப்படையினரின் சேவைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அட்டவணை : 11.1

| திகதி | நிகழ்வு | தொகை (Rs) | ஊடக மைய ஒதுக்கீட்டில் இருந்து **(Rs.Mn.)** | பாதுகாப்பு அமைச்சு ஒதுக்கீட்டில் இருந்து **(Rs.Mn.)** | இராணுவம் | கடற் படை | விமானப் படை |
|---|---|---|---|---|---|---|---|
| **2014.06.07** | Estimate of the DES | 3.8 | - | - | - | - | - |
| **2014.09.15** | Approved amount by MOD | 3.5 | 1.6 | 1.9 | - | - | - |
| **2014.11.24<br>2015.12.24** | Work Party | - | - | - | 12 ESR | 05 per | 05 per |


### 11.3.3 ஊடகத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள்

11.2 பாதுகாப்பு அமைச்சு ஊடக மையத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட செய்தியாளர் மாநாடு, ஊடக அறிக்கை மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள்.


| மாதம் | செய்தியாளர் மாநாடு | ஊடக அறிக்கை | ஊடகப் பிரச்சாரம் |
|---|---|---|---|
| ஜனவரி | 02 | 07 | 06 |
| பெப்ரவரி | - | 01 | 12 |
| மார்ச் | 01 | - | 11 |
| ஏப்ரல் | 01 | - | 11 |
| மே | 02 | 02 | 03 |
| ஜுன் | - | 02 | 05 |
| ஜுலை | - | 02 | 03 |
| ஆகஸ்ட் | 02 | - | 02 |
| செப்டெம்பர் | - | - | 04 |
| ஒக்டோபர் | - | 01 | 06 |
| நவம்பர் | - | 02 | 04 |
| டிசம்பர் | 01 | - | 03 |

கண்காணிப்பு செய்பாடுகள் - செய்தித்தாள்கள்


11.2 2015 ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு / செயற்பாடுகளின் மதிப்பீடுகள்



11.3





11.4





கண்காணிப்பு செய்பாடுகள் - இணையம்

11.5 2015 ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு / செயற்பாடுகளின் மதிப்பீடுகள்



11.6 2015 ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு / செயற்பாடுகளின் மதிப்பீடுகள்




## 11.4 முரண்பாடுகள் மற்றும் சவால்கள்

4.1 ஊடக பிரச்சாரம் மற்றும் பொது மக்கள் தொடர்புகள் என்பன காலத்தின் கட்டாய தேவையாகும். அத்துடன் இந்நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக பல்வேறு பட்ட முரண்பாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளது. இதற்கமைய தேசிய மட்டத்தில் சிவில் மற்றும் இராணுவ தொடர்புகளை மேம்படுத் துதல் இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப் படுகிறது. நல்லாட்சியை பேணுவதற்காக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங் களுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்.

நிறுவனத்தின் கடமைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக இங்குள்ள நபர் களுக்கு கூடிய பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் நிறுவனத்திற்குள் மாற்றத்தை ஏற்படுத்தல்.

விமர்சன ரீதியில் செயற்படும் ஊடகங்கள், பொது மக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இருக்கும் தொடர்புகள் மிகவும் முக்கியமான தாக அமைகிறது. இதனால் இதனை இந்த நிறுவனத்திலுள்ள நபர்களுக்கு துறைசார் பயிற்சிகளை தகுந்த முறையில் வழங்குதல்.

இந்த நிறுவனம் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் ஊடகம் தொடர்பான செயற்பாடு களில் ஈடுபடுவதோடு இதனை விஸ்தரிப்பு செய்வதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் எவ்வாறு மேற்கொள்ளுதல் என்பதை ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறிதல்.

## 11.5 எதிர்கால திட்டங்கள்

ஊடக மையத்தை குறிப்பிட்ட காலவரையறைக் குள் (2017 - 2019) விருத்தி செய்வதற்காக அறிவுறுத்தப்பட்ட செயற்பாடுகள் கீழ்வருமாறு:

- பொய்யானதும் தவறானதுமான செய்தி களை தோற்கடிப்பதற்காக தேசிய மட்டத்தில் பொதுமக்களை விழிப்பு ணர்த்துவதற்காக செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.
பிரச்சினைகளின் இயல்புத்தன்மை காரணமாக இலங்கை கடலோர பாதுகாப்பு படையினுள் இப் பிரச்சினைகள் பல மட்டங்களில் செயல்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் மட்டம் எழுக்கப்பட்டது. வெளிநாட்டு கடலோர பாதுகாப்பு படையினரால் தொழில்நுட்ப மற்றும் தொழில் நெறிகள் இலங்கை கடலோர பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்பட்டதன் மூலம் சிறந்த தரத்தில் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. ஆனால் செயல்பாட்டு தளங்கள் உபகரணங்கள் மற்றும் நிதி வழங்குதல் ஆகியவற்றின் அளவு வரையறுக்ப்பட்டதன் காரணமாக குறைந்த அளவிலான நடைமுறை பயன்பாடே காணப்பட்டது.

இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் மனித வளங்கள் அதே அளவில் காணப்பட்ட போதும் 2015 ஆம் ஆண்டில் பொறுப்புகள் , வகியாகம் மற்றும் பணிகளுக்கான பகுதிகள் பெருமளவிலான அதிகரித்திருந்தன. இந்நிலையானது துணை நிலையங்களில், நிலையங்கள் மற்றும் பிராந்திய மட்டங்களில கஷ்டங்களை இலங்கை கடலோர பாதுகாப்புப் படை அலகுகளுக்கு தோற்றுவித்தது.


மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் அவ்வாறே தொடருமானால் அவைகள் இலங்கை கடலோர பாதுகாப்பு படையினர் ஆற்றப்பட வேண்டிய இலக்குகளை அடைந்து கொள்வதை நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாக ஆக்கிவிடும். எனவே எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கான சாதகமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

## 14.6 எதிர்கால முன்மொழிவுகள்

- இலங்கை கடலோர பாதுகாப்பு படையினால் மத்திய காலத்தில் (2018-2016) தனது நிறுவனத்தின் திறனை அதிகரிக்க மேற்கொள்ளப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டவைகள் பின்வருமாறு :
- இலங்கை கடலோர பாதுகாப்பு படையின் எதிர்கால திட்டமிடலுக்கு ஏற்றவாறு தனது ஆளணியினை 1-500 வரை அதிகரிக்கப்படல் அவசியம்.
- இலங்கை கடற்படை இருந்து புதிய கரையோர ரோந்து படகுகளை கையகப்படுத்தல் (06)
- ஐலன்ட் வகுப்புக்குரிய கட்டர் படகுகள் ஐ 02 அமெரிக்க கடலோர பாதுகாப்பு படையிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல்.
- ரோந்துப் படகுகள் ஐ ஜப்பான் கடலோர 02 பாதுகாப்புப் படையிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்.
- ஐலன்ட் வகுப்புரிய கட்டர் படகுகள் ஐ 02 அடூமரிக்க கடலோர பாதுகாப்பு படையிடமமிருந்து பெற்றுக்கொள்ளல்
- பிரபல்யமான கடற்கரைகளில் இலங்கை கடலோர பாதுகாப்பு படையின் புதிய உயிர்காப்பு மையங்களை நிறுவுதல்.
- எஞ்சியுள்ள மீன்பிடித் துறைமுகங்களில் சட்டவிரோத ஒழுங்கமைக்கப்படாத மற்றும் தகவல் அறிவிக்கப்படாத மீன்பிடி நடவடிக்கைகள் கண்காணிப்பாகங்களை ஸ்தாபித்தல்
- மிரிஸ்ஸ மற்றும் பலப்பிட்டியவில் அமைந்துள்ள இலங்கை கடலோர பாதுகாப்பு படையின் பயிற்சி நிலையங்களில பயிற்சி வசதிகளை ஏற்படுத்தல்.
- இலங்கை கடலோர பாதுகாப்பு படையின் எண்ணெய் கசிவு தடுப்புக் குழு திறன்களை அதிகரித்தல்.
- இதர கடலோர பாதுகாப்பு படைகளுடனான ஒத்துழைப்புக்களை மேம்படுத்தல்.

ANNEX 'A'

## DEPLOYMENT OF SRI LANKA COAST GUARD CRAFT AS 31ST DECEMBER 2015



**SLCG CRAFT ATTACHED TO RDNR**

**FPC AT KANKASANTUREI**
CG 41
CG 42
CG 44
CG 45
CG 47
CG 48

**FPC AT TRINCOMALEE**
CG 40
CG 43
CG 46
CG 49

**IPC AT DELFT**
CG 15
CG 16
CG 17

**SLCG CRAFT ATTACHED TO RDWR**

**IPC AT DIKOWITA FISHERY HARBOUR**

CG 14

**SMALLE CRAFT COLOMBO HARBOUR**

CG 20

**SLCG CRAFT ATTACHED TO RDSR**

**IPC AT GALLE HARBOUR**
IPC - CG 12
IPC - CG 18

**MIRISSA**
IPC - CG 19
IPC - CG 22

**RDSR**- Regional Director Southern Region

**RDNR**- Regional Director Northern Region

**RDWR**- Regional Director Western Region

**FPC** – Fast Patrol Craft

## 15.
## சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

### 15.1 மேலோட்டமான பார்வை

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் பல்வேறு வழிகளில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கிறது. எனவே, எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைவதற்கு என திணைக்களத்தை முன்னோக்கிச் கொண்டு செல்கின்ற 22 கட்டளையிடல் துறைகளையும் 05 பயிற்சி முகாம்களையும் இது கொண்டுள்ளது. விவசாயச் செயற்றிட் டங்கள், விலங்குச் செயற்றிட்டங்கள், கல் உற்பத்தி செயற்றிட்டங்கள், கைப்பணிச் செயற்றிட்டங்கள், நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் புதுப்பிப்புச் செயற்றிட்டங்கள் போன்றவை இத்திணைக்களத்தினால் தொடங் கப்பட்ட செயற்றிட்டங்களில் சிலவாகும்.

### 15.2 2015 இன் சாதனைகள்

#### 15.2.1 பிரதான நடவடிக்கைகளும் அவற்றின் முன்னேற்றங்களும்

இந்தத் திணைக்களத்தின் கீழ் நடத் தப்பட்ட செயற்றிட்டங்களும் அவற்றின் வருமானங்களும்

| | செயற்றிட்டம் | வருமானம் (ரூ.) |
|---|---|---|
| 1 | விவசாயம் | 387,150,656.95 |
| 2 | விலங்கு வளர்ப்பு | 17,306,201.08 |
| 3 | செங்கல் உற்பத்திச் செயற்றிட்டம் | 48,796,186.50 |
| 4 | ஏனைய செயற்றிட்டங்கள் | 44,449,094.73 |

### 15.2 வேறு நடவடிக்கைகள்

| | நடவடிக்கை | முன்னேற்றம் (Rs.Mn.) |
|---|---|---|
| 1 | சுப சவிய நிதியம்<br>சுக சவிய நிதியத்தின் கீழ் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது (இறப்பு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருத்தல்சுகவீனம், போன்ற வற்றுக்காக) | 120.2 |
| 2 | இழப்பீட்டுப் பகுதி<br>இறந்த மற்றும் அங்கவீனமடைந்த சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கான இழப்பீடுகள் | 91.5 |
| 3 | யகசாதக பகுதி யகசாதக நிதியத்தின் கீழ் உறுப்பினர் களுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டது (இறப்பு, ஓய்வூதியங் கள், சுகவீனம் போன்றவை) | 147.0 |
| 4 | சேமலாப நிதியப் பகுதி<br>சேமலாப நிதியத்தின் கீழ் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டது (இறப்பு, இழப்பீடுகள் போன்றவை) | 65.6 |
| 5 | ஜனசக்தி காப்புறுதிப் பகுதி<br>இறந்த உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 5.5 |
| 6 | செனவிதாயக நிதியம்<br>கட்டளையிடல் துறைகள் மற்றும் பயிற்சி முகாம்களின் காகிதாதிகள் மற்றும் ஏனைய செலவுகளுக்கான கொடுப்பனவு | 5.2 |

#### 15.2.2 சேவா வனிதா பகுதி

- ரூ.242,400,000.00 செலவில் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்காக 202 வீடுகள் நிர்மாணம்
- சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களின் 32338 பாடசாலைச் சிறார்களுக்காக 10 மில்லியன் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் விநியோகம்
- ஆண்டு 05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா.த) பரீட்சை, ஆகிய வற்றில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற வர்கள், பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றவர்கள் என 120 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் வழங்கல்(ரூ. 5,993,500.00)

#### 15.2.3 இயல்திறன் அபிவிருத்தி

- 3157 சிவில் பாதுகாப்பு உறுப்பினர் களுக்காக 20 பயிற்சி நிகழ்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பகஹலலந்த / கல்பிட்டி / கல்கிறியாகம ஆகிய இடங்களிலுள்ள பயிற்சி முகாம்களில் நடத்தப்பட்டன.
- 18 சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக் கான சமையல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.
- 230 சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக் காக 15 கணினிப் பாடநெறிகள் நடத்தப்பட்டன.
- 338 சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக் காக முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய 05 வேலைப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

- அபிவிருத்தி நிர்வாகத்திற்கான இலங்கை நிறுவகத்தின் உதவியுடன் அலுவலக நிர்வாக நடைமுறைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றி 112 சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு 02 நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

## 15.3 வேலையை அடுத்த வருடத்திற்கு பிற்போடல்

- 15/0329/603/012 ஆம் இலக்கமும் 2015.04.23 ஆந் திகதியும் கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 12/0944/503/074 ஆம் இலக்கமும் 2012.08.16 ஆந் திகதியும் கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் ஆகியவற்றிற்கிணங்க, சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்து நிலை வழங்கப்படுகிறது. பின்னர திணைக்களம் சகல உறுப்பினர்களுக்கும் நியமனக் கடிதங்களை விநியோகிக்கும் கடப்பாட்டினைக் கொண்டிருந்தது.(40,000 அலுவலர்களுக்கான). 2015 இனுள் சகல உறுப்பினர்களுக்கும் நியமனக் கடிதங் களைத் தயாரித்தல் மற்றும் வழங்குதல் செயன்முறையை நிறைவு செய்வது கஷ்டமானதாக இருந்தது.
- அத்துடன், திணைக்களமானது, ஏறத்தாழ 40,000 சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்பு பட்ட தேவையான நடவடிக்கைகளை நடைமுறைப்படுததவும் கடப்பாடுடையது. 2015 இனுள் சகல உறுப்பினர்களுக் காகவும் ஓய்வூதியக் கோவைகள் மற்றும் W&OP தயாரிப்பது மிகவும் சிக்கலான ஒன்றாகவே இருந்தது. எனவே, திணைக்களம் அதனை அடுத்த வருட காலாண்டுப் பகுதியினுள் நிறைவு செய்வதற்குத் திட்டமிட்டிருந்தது.

## 15.4 2015 இல் நடத்தப்பட்ட நடவடிக்கைகளின் பொதுவான மதிப்பீடு

15.3 நிதிசார் முன்னேற்றம் : 2008 - 2015

| ஆண்டு | வருமானம் (ரூ.மில்.) | | மூலதனம் (ரூ.மில்.) | |
|---|---|---|---|---|
| | ஏற்பாடு | செலவு | ஏற்பாடு | செலவு |
| 2008 | 7,066 | 6,991 | 466 | 320 |
| 2009 | 8,558 | 8,341 | 336 | 335 |
| 2010 | 8,456 | 8,454 | 254 | 253 |
| 2011 | 8,871 | 8,813 | 110 | 110 |
| 2012 | 9,258 | 9,245 | 59 | 53 |
| 2013 | 10,757 | 10,683 | 67 | 67 |
| 2014 | 12,030 | 12,029 | 120 | 120 |
| 2015 | 17289 | 17114 | 188 | 187 |

### 15.4.1 திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் (விவசாயம், விலங்கு வளர்ப்பு, செங்கல் உற்பத்தி மற்றும் ஏனைய செயற்றிட்டங்கள்)














## 15.5 பிரச்சினைகளும் சவால்களும்

தற்போது, சிவில் பாதுகாப்பு உறுப்பினர் களுக்கு நிரந்தர ஓய்வூதிய நிலை வழங்கப் படுவதுடன் அவர்கள் அரசாங்க சேவையாளர் களாகவும் கருதப்படுகின்றனர். சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள், பாதுகாப்புப் படை ஒன்றைப் போல களப் பணிகளில் ஈடுபடு வதுடன் தற்பொழுது தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடு களுக்கு இணங்க அரசாங்க சேவையாளர் களாகவும் பணி புரிதல் வேண்டும். திணைக் களம் முகங்கொடுக்கின்ற பிரச்சினை என்னவெனில், அரசாங்க அலுவலகம் ஒன்றின் முறைமைசார் அலுவலகப் பணிச் சூழ்நிலையைப் பராமரிப்பதுடன் தொடர்புபட்ட அறிவு சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களிடம் குறைவாகக் காணப்படுகின்றமையே ஆகும்.

திணைக்களம் முகங்கொடுக்கின்ற முக்கிய சவால் காணி, கட்டடங்களின் பற்றாக் குறையும் திட்டமிடப்பட்ட செயற்றிட்டங்களை நடத்திச் செல்வதற்கு பொருத்தமான காணி, கட்டடங்களை கொள்வனவு செய்வதிலுள்ள இடர்பாடுமே ஆகும்.

ஏறத்தாழ 40,000 சிவில் பாதுகாப்பு உறுப்பினர் களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை நடத்துதல் என்பது திணைக் களம் கருத்திலெடுக்கக்கூடிய மற்றுமொரு சவாலாக உள்ளது. பொதுவாக அரசாங்க சேவையாளர்கள் 3 வருடங் களுக்குள் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ள துடன் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கும் அத்தகைய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான உரித்து காணப்படுவதால், தற்போதிருக்கின்ற பதவியுயர்வு திட்டத் தினைத் திருத்தி அடுத்த 2 வருடங்களுக்குள் சகல உறுப்பினர்களுக் குமான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினை ஒழுங்கமைப்பது என்பது திணைக்களம் என்ற ரீதியில் ஒரு சவாலான பணியாகவே காணப்படுகின்றது.

## 15.6 எதிர்கால வாய்ப்புகள் (2017- 2019)

- எதிர்காலத்தில் திணைக்களத்தினால் நடத்தப்படு கின்ற செயற்றிட்டங்கள் விரிவாக்குதல்
- ஏறத்தாழ 40,000 சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுவதுடன் எனAMP/15/0089/ 610/003 என்ற இலக்கமும் 2015.03.05 திகதியும் இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத் திற்கு இணங்க, இத்திணைக் களத்தின் மனித வளம் பல்வேறு பிரதேசங்களுக் காகவும் வழிநடத்தப் படல் வேண்டும். எனவே திணைக் களமானது பல்வேறு புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு திட்டமிட்டிருப்பதுடன் நாட்டின் திறைசேரிக்கு உயர்ந்த பணம்சார் ஆதரவினை வழங்குகின்ற ஒரு திணைக்களமாக இருப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.
- சகல படைகளாலும் நடத்தப்படுகின்ற நடன மற்றும் சங்கீதக் குழுக்கள், அந்தக் குழுக்களின் சகல உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்ற முறைமைசார் பயிற்சியின் ஊடாக விரிவாக்கம் செய்யப்படும். கலை சார்ந்தவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்ட பயிற்சிப் பாடசாலை வேறுஅரசாங்க நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப் பட்ட பல்வேறு கலாசார நிகழ்வுகளில் பங்கேற்று கலாசார குழுக்களின் திறமையை வளர்த்துக் கொள்வதுடன் அரசாங்கத்திற்கு வருமானத்தையும் ஈட்டுவதற்காக செறுபிட்ட என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.
- மேலும் உரிய சனாதிபதி செயலணி யின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை விரிவாக்கம் செய்தல்

## 16.
## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

### 16.1 சுருக்கவுரை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழகமானது (கொ. பா.ப.) 1981 ஆம் ஆண்டின்டி 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழகச் சட்டத்தினால் நிறுவப்பட்டதுடன் அதன் நிர்வாகம் பின்னர் செய்யப்பட்ட பல திருத்தச்சட்டங்களின் கீழ் மறுசீரமைக்கப்பட்டது. அதன் 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் இக் கழகமானது ஒரு பல்கலைக்கழக அந்தஸ்திற்குத் தரம் உயர்த்தப்பட்டதுடன், 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தின்படி ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைலக்கழகம் என மீளப் பெயரிடப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்கள் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுவதுடன் கொ.பா. ப. பொது நலவாய பல்கலைக்கழகங்கள் சங்கம் (ஐக்கிய இராச்சியம்) மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் (IAU) என்பவற்றில் அங்கத்துவத்தையும் கொண்டுள்ளது.

பல்கலைக்கழகமானது, பாதுகாப்பு அமைச்சின் முகாமைத்துவச் சபையின்கீழ் நிருவகிக்கப்படும் சுயாதீன நிறுவகம் ஒன்றாக தொழிற்படும் அரச பல்கலைக்கம் என்பதுடன், முப்படைகளின் பணியாளர்களுக்கும் நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் தனியார் மற்றும் அரச துறை உத்தியோகத்தர்களுக்கும் இளமாணி மற்றும் பட்டமேற்படிப்பு நிலைகளில் உயர் கல்வி வாய்ப்புக்களை சம்பந்தப்பட்ட பாடதுறைகளில் வழங்கி வருகின்றது. பல்கலைக்கழமானது, தற்போதையள சந்தர்ப்பத்துக்கு ஏற்ப எழுகின்ற சவால்களுக்கு முகஙற்கொடுக்கும் போது கீழே குறிப்பிடப்படும் தொலைநோக்கு செயற்பணி மற்றும் தொழிற்பாட்டு குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக செயலாற்றுகின்றது.


### 16.2 2015 சனவரி - திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட அடைவுகள்

எமது முன்மொழியப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், புதிய நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

கொ. பா. ப. இன் மூலதன மற்றும் மீண்டுவரும் தேவைப்பாடுகளுக்காக தேசிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பொதுத் திறைச்சேரியானது ஒதுக்கீடு செய்கிறது. அதனடிப்படையில், 2008 முதல் 2015 வரை பெற்றுக் கொண்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| வருடம் | அரசாங்க பங்களிப்பு இலங்கை ரூ. மில். | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதனம் | மொத்தம் |
| 2008 | 186 | 11 | 197 |
| 2009 | 208 | 33 | 241 |
| 2010 | 222 | 136 | 358 |
| 2011 | 310 | 387 | 697 |
| 2012 | 342 | 421 | 763 |
| 2013 | 377 | 451 | 828 |
| 2014 | 649 | 519 | 1,168 |
| 2015 | 681 | 537 | 1,518 |

மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் பற்றி பின்வரும் வரையில் காட்டப் பட்டுள்ளது.




அத்துடன், பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணிப்பு 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. வைத்தியசாலை கருத்திட்ட நிர்மாணித்தல் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றின் செலவுகளுக் கென தவணைக் கடன் வசதியாக தேசிய சேமிப்பு வங்கி மூலம் ஐ. அ.டொ. 201,629 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுக்களுக்கான வட்டித் தவணைகளைச் செலுத்துவதற்காக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது,

| ஆண்டு | அரசாங்கப் பங்களிப்பு இலங்கை ரூ. மில். |
|---|---|
| 2014 | 940 |
| 2015 | 1,541 |

கட்டியெழுக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் கணனிவியல் பீடம் என்பன உருவாக்கப்பட்டதன் மூலமாக 2014 இன்

ஆரம்பத்தில் தெற்கத்திய வளாகத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்திற்காக கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்திற்காக இலங்கை ரூ. 1,000 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், நிர்மாணிப்பு வேலைகளைத் தொடங்குவதற்காக இலங்கை ரூ, 600 மில்லியன் தொகையொன்று விசேட அபிவிருத்தியினை ஆரம்பிப்பதற்கான நிதியத்தினை ஆரம்பிப்பதற்கான நிதியத்தின் மூலம் 2014 இல் வழங்கப்பட்டது. அத்துடன் 2015 இல் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் மூலம் இலங்கை ரூ. 250 மில்லியன் வழங்கப்பட்டது. கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாணிப்புக்கள் இலங்கை கடற்படையினரால் துரிதமாக செயற்படுத்தப்பட்டதுடன் உள்ள வீதி வலையமைப்பு வேலைகளானது இலங்கை தரைப்படையினால் செயற்படுத்தப்பட்டது.

- பிரதான மூலதன கருத்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்

கொ.பா.ப. இன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நான்கு கருத்திட்டங்களை மிகப் பிரதானமான மூலதன கருத்திட்டங்களாக இனங்காணலாம். அவை பின்வருமாறு :

- மருத்துவ பீட கட்டட நிர்மாணம்
- பொறியியல் பீடக் கட்டட நிர்மாணம்
- பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணம்
- தெற்கத்திய வளாகத்தை சூரியவெவ பகுதியில் நிறுவுதல்.
- பட்ட மேற்படிப்புக் கற்கைகள் பீட கட்டட நிர்மாணம்.

### மருத்துவ பீட கட்டட நிர்மாணம்

இக் கருத்திட்டமானது 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு இலங்கை ரூ. 1,488 மில்லியனாகும். இக்கருத்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டடங்கள் முறையே 2012 மற்றும் 2013 ஆண்டுகளில பூர்த்திசெய்யப்பட்டன. மருத்துவ பீட கட்டடத்தொகுதியின் மூன்றாம் கட்டடமானது, சிறப்பு அம்சங்களுடனான நவீன கேட்போர் கூடமொன்றை பல்கலைக்கழகத்திற்காக நிர்மாணிப்பதாகும் மருத்துவ பீட கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை 2015 ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் வரையறுக்கப்படுவதால் கருத்திட்டத்தினை பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது. 2016 வரை நீடித்துச் செல்வதற்கு காரணமாகியுள்ளது.



நிர்மாணிப்பு வேலைகளுக்காக 2015.12.31 ஆம் திகதி வரை மொத்தமாக லங்கை ரூ. 948.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2015.12.31 ஆம் திகதியில் நிர்மாணித்தல் தொடர்பான பௌதிக முன்னேற்றத்தின் விகிதமானது 65% ஆகும்.

### பொறியியல் பீடக் கட்டட நிர்மாணம்

இலங்கை ரூ. 500 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படும் பொறியியல் பீட புதிய கட்டடமானது 2013 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், நிர்மாணித்தல் வேலைகளுக்காக வருடாந்தம் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இக் கட்டடத்தின் 1 ஆம் கட்டமானது 2015 மார்ச் மாதம் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 11 ஆம் கட்ட நிர்மாண வேலைகள் 2015 இலும் தொடர்வதுடன், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடகள் வரையறுக்கப்படுவதுடன் காரணமாக 2016 இற்கும் நீடித்துக் செல்கிறது. எதிகாலத்தில் மாணவர் கட்டடத்தின் மூலம் திறன்மிக்க கல்வி, பொருளாதாரம், வலு, சுற்றாடல் நிலைபேறான தன்மைம மற்றும் பொறியியல் பீடத்தினது ஆற்றலை உயர்த்துதல் என்பவற்றுக்கு பங்களிப்பு வழங்கவுள்ளது.

நிர்மாண வேலைகள் தொடர்பாக 2015.12.31 ஆம் திகதி வரை மொத்தமாக இலங்கை ரூ. 252 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2015.12.31 ஆம் திகதியில் நிர்மாணித்தல் தொடர்பான பௌதிக முன்னேற்றத்தின் விகிதமானது 55% ஆகும்.

### பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணம்



பல்கலைக்கழகமானது மருத்துவப் பீட சிகிச்சையக போதனை வசதிகளை வழங்குவதற்காக பிலியந்தலை வேறாஹேர பகுதியில் ஐ.அ.டொ 201.629 மில்லியன் செலவில் பல்கலைக்கழக வைத்தியசாலையை ஏற்கனவே நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளது. சகல வசதிகளையும் கொண்டமைந்த போதனா வைத்தியசாலையான இதில் 704 படுக்கைகளும், 50 விசேட அதிதி (VIP) அறைகளும் மற்றும் ஐந்து பேராசிரியர் சார் கற்கை அலகுகளும் உள்ளடங்கியுள்ளன. இது, 2016 ஆகஸ்ட் மாதமளவில் அதன் தொழிற்பாடுகளை ஆரம்பிககப்படவுள்ளது.

வைத்தியசாலையினை நிர்மைாணித்து முடிப்பதற்காகவும் வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ மற்றும் ஏனைய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஐ.அ.டொ 201.629 மில்லியன் தவணைக்கடன் வசதியானது தேசிய சேமிப்பு வங்கியால் (NSB) வழங்கப்பட்டுள்ளது. கடன் வசதி சம்பந்தப்பட்ட சேவைகளுக்காக அதாவது கடன் வட்டி மற்றும் கடன் முதல் தவணைகளை மீள்ச செலுத்துதல் போன்றன திறைசேரியினால் செலுத்தப்படுகிறது.

பல்கலைக்கழக வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளானது வெளிநாட்டு ஒப்பந்தக்காரரொருவரால் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான திரண்ட மொத்தச்செலவு ஐ.அ.டொ 162 மில்லியனாகும்.

2015 ஆம் ஆண்டு இறுதிவரை தேசிய சேமிப்பு வங்கியானது (NSB) நிர்மாண வேலைகளுக்காக மொத்தம் ஐ.அ.டொ 114.7 மில்லியனை மொத்தம ஐ.அ.டொ 95 மில்லியனை விடுவிப்புச் செய்துள்ளது.

2015 ஆம் ஆண்டு இறுதிவரை 58% இற்கும் அதிகமான நிர்மாணிப்பு பணிகள்பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2015 நவம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பயிலிளவல் அலுவலர் உணவகத்துடன்கூடிய பயிலிளவல் அலுவலர் வதிவிட புதிய கட்டடமானது 180 ஆண் பயிளிளவல் அலுவலர்க்கும் 120 பெண் பயிலிளவல் அலுவலர்களுக்கும் வதிவிட வசதியை வழங்கக்கூடியதாகும்.

### தெற்கத்திய வளாகத்தை சூரியவெவ பகுதியில் நிறுவுதல்

கொ.பா.ப. இனல் தெற்கத்திய வளாகம் சம்பந்தமான நிர்மாண வேலைகள் இலங்கை கடற்படையின் பங்களிப்புடனும் வீதி வலையமைப்பை அமைத்தல் இலங்கை தரைப்படையின் பங்களிப்புடனும் செயற்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு இறுதிவரை. 1 ஆம் கட்ட நிர்மாண வேலைகள் (90% இற்கும் அதிகமானவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை கட்டியெழுக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞாபனங்கள் பீடத்தினதும் கணிணியியல் பீடத்தினதும் கற்கைசார் செற்பாடுகள் 2015 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், வளாகம் 2015 மே மாதம் 5 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

### ஈட்டப்பட்ட சுய வருமானம் மூலம் நிதியளிப்பு செய்யப்பட்ட பிரதான மூலதன கருத்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்.

2012 ஆம் ஆண்டுக்கு முன்பு, மூலதனக் கருத்திட்டங்கள் யாவும் அரசாங்கத்தினாலே நிதியளிப்புச் செய்யப்பட்டன. மூலதனக் கருத்திட்டங்கள் யாவற்றுக்கும் வருடாந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் தற்போதைய முகாமைத்துவமானது கொ. பா.ப. இன் மூலமாக மாணவர்களது உயர் கல்விசார் தகைமைகளை வெளிநாட்டு மாணவர்கள் உட்பட நாள்முறை மாணவர்கள் ஆகியோரும் பெற்றுக்கொள்வதற்காக வாயிலைத் திறந்து விடுவதற்கு முடிவு செய்ததால், ஈட்டப்பட்ட சுய வருமானமும் படிப்படியாக உயர்வடைந்தது. அதனடிப்படையில் ஈட்டப்பட்ட சுய நிதியத்திலிருந்த 2012 இல் இருந்து நிதியானது பயன்படுத்தப்படுகிறது. ஈட்டப்பட்ட சுய வருமானத்தின் மூலம் பின்வரும் கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்யப்பட்டுள்ளன.

- இலங்கை ரூ. 85 மில்லியன் பெறுமதியான சாஜன்ட் மற்றும் சிறிய நிலை உத்தியோகத்தர்களின் உணவகம் மற்றும் ஆறு அடுக்குமாடி விடுதிக் கட்டடத் தொகுதி.
- இலங்கை ரூ. 28 மில்லியனுக்கம் அதிக தொகை வங்கிக் கிளை மற்றும் வதிவிட வசதிகளுக்கான மூன்று அடுக்குமாடிக் கட்டடத்திற்கு செலவிடப்பட்டுள்ளது.
- பட்ட மேற்படிப்புக் கற்கைகள் பீட கட்டடத்தொகுதி நிர்மாணம்

மேலும் ஈட்டப்பட்டசுய வருமானத்தின் மூலம் பின்வரும் மூலதநன கருத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

- மாணவர்களுக்கான விடுதி வசதிகள் மற்றும் பணியாட்களுக்கான 20 அடுக்குமாடி குடியிருப்புக்கள் அமைத்தல்.
- பட்ட மேற்படிப்புக் கற்கைகள் பீட கட்டட நிர்மாணம்

பல்கலைக்கழகமானது பட்ட மேற்படிப்புக் கற்கை பீடத்திற்கென தனியான கட்டடமொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அந் நோக்கத்திற்காக காணியும் ஏற்கனவே கையேற்கப்பட்டுள்ளது. உத்தேச கட்டடமானது கேட்போர் கூட மாடியொன்றுடன் ஆறு அடுக்குமாடிகள் கொண்டதாகும்.

வரையறுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு இணங்க இலங்கை வங்கியிடமிருந்து இலங்கை ரூ. 750 மில்லியன் தவணைக்கடன் வசதியானது பெற்றுக்கொள்ளப்பட்டது. ஈட்டப்பட்ட சுய நிதி மூலமாக

12 வருட காலப்பகுதி கொண்ட கடன் சேவையினை பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிர்மாணித்தல் வேலைகளானது 2015 யூலை மாத இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டதுடன் இக்கட்டடமானது அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2015 ஆகஸ்ட் மாதம்ட 4 ஆம் திகதி வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. கற்கைசார் செயற்பாடுகள் 2015 ஆகஸ்ட் மாத நடுப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டு இறுதி வரை இலங்கை வங்கியானது (BOC) இலங்கை ரூ. 505 மில்லியன் மொத்த தொகையொன்றை நிர்மாண வேலைகளுக்காகவும் இலங்கை ரூ. 505 மில்லியன் மொத்தத் தொகையொன்றை ஒப்பந்தக்காரரான மத்திய பொறியியல் ஆலோசனைகள் பணியகத்திற்கும் (CECB) விடுவிப்புச் செய்துள்ளது.

- மாணவர்களுக்கான விடுதி வசதிகள் மற்றும் பணியாட்களுக்கான 20 அடுக்குமாடி குடியிருப்புக்கள் அமைத்தல்.



தங்குமிட வசதி தேவையான கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு தங்குமிட வசதியினை வழங்குவதற்காக 20 அடுக்குமாடி குடியிருப்புக்களைக் கொண்ட ஆறு அடுக்குமாடிக் கட்டடம் மற்றும் மாணவர்களுக்கு ஆறு அடுக்குமாவிடுதிக் கட்டடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு கொ.பா.ப. நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இக்கருத்திட்டமானது, 2014-2016 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதற்காக இலங்கை ரூ. 460 மில்லியன் தவணைக் கடன் வசதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பத் வங்கி பீஎல்சீ லிமிட்டெட் இணக்கம் தெரிவித்துள்ளது. கடன் சம்பந்தப்பட்ட சேவைகளானது ஈட்டப்பட்ட சுய நிதி மூலமாக 15 வருடக் காலப்பகுதியில் செலுத்தப்படவுள்ளதுடன் ஈட்டப்பட்ட சுய நிதி மூலமாக திருப்பிச் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கருத்திட்டத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் உட்பட அனைத்து நடைமுறைகளும் கடன் வசதியும முடிவு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, நிர்மாணிப்பதற்கான மண் நிரப்புதல் செயற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மாணவர் விடுதிக்கான கட்டடத்தின் நிமாணப் பணிகள் புகழ்பெற்ற நிர்மாண ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுக்குமாடி குடியிருப்புக்களை நிர்மாணிப்பது தொடர்ரான கொள்வனவு சார் நடைமுறைகள் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- பணியாளர்களது ஆளுமை விருத்தி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.

2015.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான பணியாளர் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் செலுத்திய ஆய்வுக் கொடுப்பனவினதும் பாடநெறிக் கட்டணத்தினதும் பொழிப்பு முறையே இணைப்பு “A” மற்றும் “B” ஆகத் தரப்பட்டுள்ளன.

- பணியாளர்கள் நலன்புரி சம்பந்தமான குறுகிய விபரம்
- பணியாளர்களின் சேவைகளுக்கான பாராட்டுதல்
- 08 ஊழியர்களுக்கு சிறந்த சிவில் பணியாளர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- நீண்ட சேவைச் சான்றிதழ்.
    - 30 வருட சேவையினைப் பூர்த்தி செய்த 02 ஊழியர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் பண வவுச்சார்களும் வழங்கப்பட்டன.
    - 25 வருட சேவையினைப் பூர்த்திசெய்த 10 ஊழியர்களுக்கு சான்றிதழ்கள், பண வவுச்சர்கள் மற்றும் வெண்கலப் பதக்கங்கள் என்பன வழங்கப்பட்டதுடன், ஏனைய 03 ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
    - 20 சேவையினைப் பூர்த்தி செய்த 06 ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பண வவுச்சர்கள் வழங்கப்பட்டதுடன் ஒரு ஊழியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.
- கொ.பா.ப. பணியாளர்களுக்கு வழங்கப்படட கடன் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.
    - 102 ஊழியர்களுக்குஇடர் கடனாக ரூ. 9,493,683.53
    - 27 ஊழியர்களுக்கு சுய பண நிதியக் கடனாக ரூ. 1,700,000.00
    - 166 ஊழியர்களுக்கு நிரந்தர சிவில் பணியாளர்கள் நலன்புரி நிதியக் கடனாக ரூ. 2,808,000.00
- கொ.பா.ப. ஊழியர்களுக்காக ரூ. 5,000.00 பரிசு வசுச்சர்கள் வழங்கப்பட்டன.
    - கொ.பா.ப. இல் 06 மாதங்களுக்கு மேலாக சேவையாற்றும் ஊழியர்கள் தொடர்பாக 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டன.

2015 சனவரி முதல் 2015 திசம்பர் வரை நிரந்தர சிவில் பணியாளர்கள்நலன்புரிநிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டசெயற்பாடுகள்

- அ. 2015.02.27 - நிதி சேகரிப்பதற்காக மேடை நாடகமொன்று நடாத்தப்பட்டது.
- 2015.06.29 - "மெத்மல் பொசன் பதி கீ சரணீய" நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- 2015.09.21 - புதிய அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டது.
- 2015.11.05 - வருடாந்த கூட்டம் நடாத்தப்பட்டது.
- 2015.12.18 மற்றும் 19 - கிரிக்கெட் போட்டித் தொடாரான்று ஒழுங்குசெய்யப்பட்டது.
- அங்கத்தவர்கள் 126 பேர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
- கொ.பா.சப. ஊழியர்கள் மூவர் தொடர்பாக, ஐந்தாம் ஆண்டு புலமைப் பிரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்கைள் இருவருக்கு ரூ. 5,000.00 ஆன புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், க.பொ.த. சா./த பரீட்சையில் சித்தியடைந்த மாணவரொருவருக்கு ரூ. 7500.00 ஆன புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டது.
- ஓய்வுபெற்ற ஊழியர்கள் 5 பேருக்கு ரூ.. 220,000 ஆன பணப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### 16.3 அடுத்த ஆண்டு (2016) வரை ஒத்திபோடப் பட்ட வேலைகள்

பின்வரும் நிர்மாணக் கருத்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டுக்கு ஒத்திபோடப்பட்டுள்ளன அல்லது நீடித்துச் செல்கின்றன.

- o மருத்துவ பீட கட்டடத் தொகுதியின் மூன்றாவது கட்ட நிர்மாணிப்பு கருத்திட்டம் (கேட்போர்கூடம்)
- o கொ.பா.ப. வைத்தியசாலை நிர்மாணித்தல்.
- o பொறியியல் பீட 11 ஆம் கட்ட நிர்மாணிப்பு கருத்திட்டம்.
- o தெற்கத்திய வளாகத்தின் II மற்றும் III ஆவது கட்டடங்கள்.

மீளாய்வு காலப்பகுதியின் போதான நிறுவனத்தின் செயலாற்றல் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் என்பவற்றுடன், அமுல்படுத்துகையில் நிறுவனம் எதிர்நோக்கிய சிக்கல்கள் மற்றும் சவாலர்கள் பற்றிய பொதுவபான மதிப்பீடு.

### 16.4. அமுல்படுத்தும் போது நிறுவகத்தினால் எதிர்நோக்க வேண்டியுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள்

சிக்கல்களை தீர்ப்பதற்கான துறைசார் கருததுரைகள் வழங்குநர்களது பல அமாவுகளின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் மூலம் பல்கலைக்கழகத்தினது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக எதிர்நோக்க வேண்டியுள்ள சிக்கல்கள் இனங்காணப்பட்டன.

- ■ கந்தவல தோட்டத்தில் காணப்படும் காணியின் இடப் பரப்பானது தேவையான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்குப் போதுமானதாக இல்லாமை.
- ■ பல்கலைக்கழகம் இரத்மலானை விமான நிமலயைத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தால், கட்டிடத்தை நிலைக்குத்தாக விரிவாக்குவது ஆறு மாடிகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளமை.
- ■ எல்லா மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்க முடியாமை.
- ■ பயிலிளவல் அலுவலர் பிரிவைகச் சேர்ந்த சில விண்ணப்பதாரிகள், பல்கலைக்கழகத்துடன் அவர்கள் பிணை உத்தரவாதத்தில் கைச்சாத்திட வேண்டியுள்ளதால் கொ.பா.ப. இல் சேர்வதற்கு தயக்கம் காட்டுகின்றமை.
- ■ கொ.பா.ப. தொடர்பாக பொது மக்களிடையே போதிய தெளிவுபடுத்தல்கள் இன்மை.
- ■ விருப்பத்துடன் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கவதற்காக தேவைப் படும் செலவுகளுடன் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் ஒத்துச் செல்லாமை.

நிறுவனம் எதிர்நோக்கும் சவால்கள்

- ■ ஏனைய பல்கலைக்கழகங்களில் உத்தரவாதப் பிணை இல்லாததனால், அப் பல்கலைக்கழகங்களானது மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்ளல்.
- ■ பல்கலைக்கழகத்தினது இராணுவம் சார் தோற்றப்பாடு காரணமாக சிறந்த Z - புள்ளிகளை பெற்றுள்ள மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழககங்களில் இணந்து கொள்ளல்.
- ■ சிறந்த கல்வியாளர்களை உள்ளீர்ப்பது மற்றும் ஆட்சேர்ப்பது தொடர்பான போட்டி.
- ■ கொ.பா.ப தொட்பாக உயர் கல்விசார்போட்டி யாளர்கள் மற்றும் இராணுவ விரோத அமைப்புக்கள் என்பவற்றின் எதிர்மறையான மனப்பாங்கு மற்றும் பிரச்சாரம்.
- ■ சிவில் மாணவர்கள் ஒழுக்கமான சுற்றாடலில் கல்வி கற்பதற்கு தயக்கம் காட்டுதல்.

### 16.5 நிறுவகத்தின் மேம்பாட்டுக்காக மத்தியகால திட்டங்களாக முன்மொழியப்பட்டுள்ள எதிர்கால நலச் செயற்பாடுகள் (2017-2019)

பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டுக்காக மத்திய கால திட்டங்களாக பின்வரும் பிரதான செயற்பாடுகள் 2016-2018 காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

- ஹம்பாந்தோட்டையிலுள்ள சூரியவெவ பகுதியில் அமைந்துள்ள கொ.பா.ப. தெற்கத்திய வளாகத்தின் கட்டம் II மற்றும் III என்பவற்றை பூர்த்தி செய்தல்.
- பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைளுக்காக சிந்தனையாளர் மன்றமொன்றை அமைத்தல்.
- பொறியியல் ஆலோசனை சார் சேவைகளை வழங்கும் நிலையமொன்றை உருவாக்குதல்.
- பொறியியல் பீடத்தில் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் எனும் திணைக்களமொன்றை உருவாக்குதல்.
- சுகாதார அறிவியல்கள் சார் பட்டப் பின்படிப்பு நிறவுகத்தை உருவாக்குதல்.
- தெற்கத்திய வளாகத்தில் நீரக அளவை சார்ந்த அளவையியல் பிரிவொன்றை உருவாக்குதல்.
- வடிவமைப்பு மற்றும் உசாவுகை சேவைகள் நிலையமொன்றை உருவாக்குதல்.
- அளவையியல் விஞ்ஞானங்களுக்காக சூழலின் அளவை நிர்ணயித்தல் சார்ந்த தளமொன்றை அமைத்தல்.
- வடிவமைப்பு சார்ந்த சகலர வசதிகளுடனான கூடம் (ஸ்டுடியோ) மற்றும் கட்டட நிர்மாணக் கலை சார் வேலைத்தளம் என்பவற்றை நிர்மாணித்தல்.
- செவிப்புல கட்புல ஆய்கூடமொன்றை நிர்மாணித்தல்.
- திறந்தவெளி அரங்கமொன்றை நிர்மாணித்தல்.
- கணினி விஞ்ஞானத்தில் எம். எஸ்.சி. பட்டத்தை அறிமுகம் செய்தல்.
- சட்ட இளமாணி பகுதி நேர பாடநெறியை ஆரம்பித்தல்.
- மொழிகள் மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல் சார் கலை இளமாணி (பி.ஏ.) பட்டத்தை ஆரம்பித்தல்.
- குறுகிய கால தமிழ் மொழி பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- அனர்த்தம் மற்றும் இடர் என்பவற்றை குறைப்பதற்கும் அபிவிருத்தி செய்தலும் பற்றிய எம். எஸ். சி. பாட நிகழ்ச்சியை ஆரம்பித்தல்.
- மனோதத்துவவிவயலில் உளவள ஆலோசனை பட்டப் பின்படிப்பு திப்ளோமா பாடநெறியை ஆரம்பித்தல்.
- வருடாந்த உளவள ஆலோசனை செயலமர்வுகளை நடாத்துதல்.
- ஊடுகதிர்சிகிச்சை சார் பி. எஸ்.சி. (கௌரவ) பட்ட நிகழ்ச்சியை ஆரம்பித்தல்.
- பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைகள் சார்பி பி.எஸ்.சி பட்டத்தை அறிமுகம் செய்தல்.
- விளையாட்டு விஞ்ஞானம் சார் பி.எஸ்.சி. மற்றும் திப்ளோமா பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- மருந்தாக்கவியல் விஞ்ஞானங்கள் பற்றிய எம்.எஸ்.சி பாடநெறியை ஆரம்பித்தல்.
- மருந்து ஆய்வுகூட விஞ்ஞானம் ஊடுகதிர்ப் படமெடுப்பு, மருந்தகவியல், இயன்மருத்துவம்மற்றும் தாதிவியல் சார்ந்த இரட்டைப்பட்ட நிகழ்ச்சியை ஆரம்பித்தல்.
- பல்கலைக்கழக இணைய தள வரிசைப்படுத்தலை உயர்த்தத் தேவையான செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ளல்.
- கொ.பா. பல்கலைக்கழக பட்ட நிகழ்ச்சிகளுக்கு சர்வதேச அளவீட்டுப் புள்ளிகளை பிரயோகித்தல்.
- புகழ்பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் மாணவர் மற்றும் பணியாளர் பரிமாற்றத் திட்டங்களை தொடங்குதல்.
- எம்.பி.பி.எஸ். பட்ட நிகழ்ச்சிக்கான உலக சுகாதார அமைப்பின் (WHO) அங்கீகாரத்தைப் பெறுதல்.
- எம்.பி.ஏ./ பி.எஸ்.சி. தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமை பட்டத்திற்கு ஐக்கிய இராச்சியத்தின் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு மற்றும் போக்குவரத்து சார் பட்டய நிறுவனத்தின் (Charted Institute of Logistics and Transport–UK) (CILT) ஒத்திசைவு அங்கீகாரத்தைப் பெறுதல்.
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் இணை சுகாதார அறிவியல்கள் பட்டப் பின்படிப்பு பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- கட்டடப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடத்தினால் நடாத்தப்படும் பட்டப் பாட நெறிகள் தொடர்பாக பிரித்தானியாவின் கட்டடத் நிர்மாணக்கலைஞர்களது றோயல் நிறுவகம் (Royal Institute of British Architects) (RIBA) மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டயள அளவையியலாளர்களது றோயல் நிறுவனம் (Royal Institution of Chartered Surveyors ) (RICS) ஆகியவற்றின் ஒத்திசைவு அங்கீகாரத்தைப் பெறுதல்.
- கணனியியல் பீடத்தினது கணினியியல் சார்ந்த சகல பட்டங்கள் தொடர்பாகவும் கணினி பொறியமைப்பு சங்கம் (Association for Computer Machinery) (ACM)/ மின் மற்றும் இலத்திரனியல் பொறியியலாளர்களின் நிறுவகம் (Institute of Electrical and Electronics Engineers) (IEEE) என்பவற்றின் சர்வதேச தர அளவீட்டுப் புள்ளிகளை அடைதல்.
- வெளிநாட்டு நிபுணர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆய்வுகளை தொடங்குதல்.

- பீடங்கள் சார்பாக ISO அல்லது உரிய தர நியமங்களை அடைந்துகொள்ளல்.
- கணினியியல் பட்டங்கள் தொடர்பாக தொழில்வாண்மை அமைப்புக்களின் ஒத்திசைவு அங்கீகாரத்திற்காக திட்டமிடல்.
- ப.மா.ஆ. இனதுதர உறுதி மற்றும் சான்றுறுதிப்படுத்தல் குழுவின் மூலம் நிறுவனம் சார்ந்த மீளாய்வை மேற்கொள்ளுதல்.
- ப.மா.ஆ. இனதுதர உறுதி மற்றும் ஒத்திசைவு அங்கீகார குழுவின் (QAA) மூலம் எம்.பி.பி.எஸ். (MBBS) பட்ட நிகழ்ச்சி சார்பாக மீளாய்வுச் செற்பாடுகளை ஆரம்பித்தல்.
- பல்கலைக்கழக வைத்தியசாலைக்கான தர ஒத்திசைவு அங்கீகாரத்தைப் பெறுதல்.
- கொ.பா.ப.இன் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தினால் நடாத்தப்படும் பி.எஸ்.சி. கௌரவ பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக SLMC மற்றும் SLNC என்பவற்றின் அங்கீகாரத்தைப்பெறுதல்.
- வேறஹெர பல்கலைக்கழக மைவத்தயி சலைைத வளவில் KDU-CARE கட்டடமொன்றை அமைத்தல்.
- பொறியியல் பீடக்கட்டடத்தின் II ஆம் கட்டடத்தை பூர்த்தி செய்தல்.
- சட்ட பீடத்திற்காக புதிய கட்டடமொன்றை நிர்மாணித்தல்.
- மருத்துவ கற்கை ஆய்வு மற்றும்பகுத்தாராயும் அலகுகளை/ கருத்திட்டங்களை உருவாக்குதல்.
- மருத்துவ பீடத்திற்காக (FOM) பல்துறைகள் சார் நூதனசாலைகளுடன் இணைந்து அவசர கால மருத்துவம் மற்றும் தீவர பராமரிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை விருத்தி செய்வதற்கான திட்டம்.
- ஏனைய வைத்தியசாலைகளுடன் இணைந்து அவசர கால மருத்துவம் மற்றும் தீவிர பராமரிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை விருத்தி செய்வதற்கான திட்டம்.
- கடல்சார் பொறியியல் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணித்தல்.
- உலோக பட்டறை வேலைத்தளமொன்றை நிர்மாணித்தல்.
- இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் முழுமையான உபகரணங்கள் கொண்ட திறன் ஆய்வுக்கூடங்களை உருவாக்குதல்.
- இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் (FAHS) பயிற்சியளிப்பு மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக உடற்பயிற்சிக் கூடமொன்றை உருவாக்குதல்.
- நடத்தல் மற்றும் இயக்கம் பற்றிய பகுப்பாய்வு சம்பந்தமான ஆய்வுகூடமொன்றை அமைத்தல்.
- கணினியியல் பீடத்திற்காக கணினி வலையமைப்பு ஆய்வுகூடமொன்றை நிர்மாணித்தல்.
- கணினியியல் பீடத்தில் ஸ்மார்ட் கற்றல் வளம் சார் நிலையமொன்றை உருவாக்குதல்.
- தகவல் தொழில்நுட்ப (IT) உதவி மற்றும் அபிவிருத்தி சேவைகளை வழங்கும் நிலையமொன்றுக்கான இடத்தை கையேற்புச் செய்தல்.
- தெற்கத்திய வளாகத்தில் தொழில் வாண்மை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக CCNA ஆய்வுகூடமொன்றை நிர்மாணித்தல்.
- மாணவர் முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
- மாணவர்களை சேர்த்துக் கொள்ளல் பற்றிய முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
- கொள்வனவுகள் சார் முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
- கொ.பா.ப. ஆய்வு தகவல் தரவுத்தொகுதியொன்றை உருவாக்குதல்.
- சொத்துக்கள் சார் முகாமைத்துவ முறைமை யொன்றை உருவாக்குதல்.
- பொருள் விபரப்பட்டியல் பற்றிய முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
- நூலக வசதிகளை விரிவாக்குதல் மற்றும் முழுமையாக தானியங்கி நூலக முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
- கொ.பா. பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் கூடம் அமைத்தல் மற்றும் 400 மீற்றர் செயற்கை ஓடுபாதையை அபிவிருத்தி செய்தல்.
- பல்கலைக்கழக வளவினுள் நினைவு தூபியை அமைத்தல்.
- தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக பாடநெறியொன்றை (ndu) அறிமுகம் செய்து நடாத்திச் செல்லல்.
- தேசிய பாதுகாப்பு சம்பந்தமான திப்ளோமாக பாடநெறியொன்றை அறிமுகம் செய்து நடாத்திச் செல்லல்.

- தாய்நாட்டுப் பாதுகாப்புக்கான நிலையமொன்றை நிறுவுதல்.
- மருத்துவ பீடம், பொறியியல் பீடம், கட்டியெழுக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சகார்ந்த விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் என்பவபற்றின் ஆய்வுகூடங்களை மேம்படுத்துதல்.

கொ.பா.பல்கலைக்கழகத்தின் மேற்குறிப்பிடப்பட்ட பீடங்களிலுள்ள ஆய்வுகூடங்களை நவீன மயப்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதனை எதிர்வரும் இரண்டு வருடங்களினுள் முழுமையான அதிநவீன இயந்திர மின்னணு பொறியியல் ஆய்வுகூடம் மற்றும் ஆராய்ச்சி கூடம் என்பவற்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தினதும் கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடத்தினதும் ஆய்வுகூடங்களையும் நவீன கற்பித்தல் மற்றும் போதனைசார் திறன்கள் கொண்ட ஆய்வுகூடங்களாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. கொ.பா.ப. ஆனது எப்போதும் தரம் வாய்ந்த ஆய்வுகளுக்கு முக்கியத்துவமளிக்கிறது. இதனால் ஆய்வுக்கூடங்களை நவீனமயப்படுத்துதல் கொ.பா.ப. இன் செயற்பாடுத் திட்டத்தில் பிரதான செயற்பாட்டுத் திட்டத்தில் பிரதான செயற்பாடாக திகழ்கிறது. அத்துடன், கொ.பா.ப. ஆய்வுக்கூடங்களை மேம்படுத்துவதற்காக இலகு கடன்களாக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடுகிறது. வெளிநாட்டு நிதியளிப்பவர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய முன்மொழிவொன்றினானது திறைசேரியின் கவனத்திற்காக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- விமான/ கடல்சார் ஆய்வுகூட விரிவாக்கம்
- உபவேந்தரின் அலுவலகம் மற்றும் தலைமையக கட்டடம் நிர்மாணித்தல்.
- மருத்துவ பீட வசதிகளைப் பயன்படுத்தி மரபணுபகுப்பாய்வியல், புரதவியல், விலங்குகள் கூடம் மற்றும் அதிசிறப்பான கணினி அலகு.ஃ. கருத்திட்டங்களை அமைத்தல்.
- நூலக வசதிகளை விரிவுபடுத்துதல்.

# 17.
# அரச புலனாய்வுச் சேவை (SIS)

## 17.1 மேலோட்டமான பார்வை

பொலிஸ் திணைக்களத்தின் பழமையான புலனாய்வு ஆய்க்கருவியில் இருந்து இதன் பாரம்பரியம் பெறப்படுகிறது. CID யின் விசேட கிளையான அரச புலனாய்வுச் சேவையானது (SIS) இலங்கையில் உள்ள உயர் மதிப்புமிக்க புலனாய்வு நிறுவனம் ஆகும்.

இரு கிளர்ச்சிகள் மற்றும் ஒரு பயங்கரவாத மோதல் ஆகியவற்றால் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படும் நிலையான தீவிர சவால்களை பல்லாண்டுகள் எதிர்கொண்டமை யால் SIS ஆனது ஒரு சிறிய குழுவாக அமைந்து அரசாங்கத்தின் சகல புலனாய்வுத் தேவைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்வதற்கான இயலுமையுடையதான ஒரு தொழில்வாண்மைசார் புலனாய்வு நிறுவனம் என்ற நிலைக்கு படிப்படியாக பரிணாமம் அடைந்துள்ளது.

அரசாங்கத்தின் பாதுகாப்பை நோக்கிய அதன் பொறுப்புகளைப் பேணிக்கொண்டு,SIS ஆனது புலனாய்வு மண்டலத்தை மிகச் சிறப்பாகப் பராமரிக்கப் பாடுபடுகிறது. SIS அதன் இலக்குகளை இலகுவாக நிறைவேற்றுவதற்காக 10 பிரிவுகளாகவும் மாகாண அலகுகளாகவும் மாவட்ட புலனாய்வுப் பணியகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுகள்,அலகுகள் மற்றும் மாவட்டப் பணியகங்கள் ஆகியன நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார ஸ்திரத் தன்மை மீதான ஏதாவது அச்றுத்தல் களுடன் தொடர்புபட்ட புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுதல், செயன்முறைப் படுத்தல் மற்றும் பகிர்தல் ஆகியவற்றைச் செய்கின்றன.

SIS ஆனது உலகம் பூராகவும் உள்ள பிரதான வெளிநாட்டு புலனாய்வு முகவராண்மைகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பினைப் பேணுவதற்கு அப்பால் சில எண்ணிக்கையிலான வெளிநாட்டுத் தலைநகரங்களில் தாபிக்கப்பட்டுள்ள அலகுகளின் ஊடாக வெளிவாரியான அச்சுறுத்தல்களைக்கூட கண்காணிக்கிறது.

தற்போது,புதிய உயர்வான மற்றும் ஒழுக்காறு மிக்கதும் விசுவாசமானதுமான பணித்தொகுதி யினருக்கான நிறுவனமாக மாற்றுவதற்குப் பாடுபடுகின்ற அறிவார்ந்த வரிசையைக் கொண்டுள்ள SIS ஆனதுஅரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துமுகமாக தொழில் வாண்மைசார் மனப்பான்மையுடன் கூடிய அவர்களது பொறுப்புடமைகளை நிறைவேற்று வதற்கு ஆர்வமாக உள்ளது.

## 17.2 2015 இன் சாதனைகள்

2015 இல் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை களின் செயலாற்றுகைகள் பின்வருமாறு

Table 17.1 Progress of Annual Programmes as of 31.12.2015

| no. | name of the Programme | Allocation Rs. Mn | Expenditure Rs. Mn. | Physical Progress | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Unit of Mesurment | Targets | Achievement nos. % |
| 1 | Purchase of 07 Nos. Air Conditioner Units | 0.85 | 0.799 | 07 Nos. | 80% | 100% |
| | | | | | | |
| 2 | Purchase of 40 Nos. Computers, 40 Nos. UPS Units, 20 Nos. Dot Matrix Printers, 05 | 2 | 4.2 | 105 Nos. | 85% | 100% |
| 3 | Purchase of 50 Nos. Heavy Duty Sliding Door Cupboards | 2.25 | 0.98 | 50 Nos. | 80% | 100% |
| 4 | Purchase of Office Furniture at No.34 Office | 10 | 7.1 | 426 Nos. | 80% | 90% |
| 5 | Purchase of 01 No. Heavy Duty Paper Shredder | 0.6 | 0.44 | 01 No. | 100 % | 100% |
| 6 | Purchase of 15 Nos. Digital Still Cameras & 25 Nos. Digital Voice Recorders | 0.5 | 0.38 | 40 Nos. | 80% | 100% |
| 7 | Purchase of 10 Nos. Thelevisions | 0.4 | 0.25 | 10 Nos. | 80% | 100% |
| 8 | Purchase of 10 Nos. Dot Matrix Printers | 0.257 | 0.257 | 10 Nos. | 80% | 100% |
| 9 | Purchase of 05 Nos. Photocopier Machine | 0.625 | 0.54 | 05 Nos. | 80% | 100% |
| 10 | Purchase of 25 Nos. 125 Motor Cycle | 2.975 | 2.984 | 25 Nos. | 50% | 50% |
| 11 | Renewal of Maintenanace Agreement for 25 Nos. of Thin Client Computers | 0.33 | 0.33 | 25 Nos. | 80% | 80% |
| 12 | Renewal of Maintenance Agreement for IBM AS/400 System | 0.59 | 0.59 | - | 80% | 80% |
| 13 | Renewal of Maintenance Agreement for Fire wall & Spam filtering System | 0.099 | 0.099 | - | 80% | 80% |
| 14 | Renewal of Maintenance Agreement for Mitshubishi Elevator | 0.3 | 0.3 | - | 80% | 80% |
| 15 | Renewal of Maintenance Agreement of Main AC System | 3.09 | 3.09 | - | 80% | 80% |
| 16 | Maintenance of MD 110 Telephone Board at No. 10 | 0.55 | 0.55 | - | 80% | 80% |
| 17 | Maintenance of HIPATH Telephone Board at No. 34 | 0.11 | 0.11 | - | 80% | 80% |
| 18 | Renewal of Annual Licence Subscription of Virus Guard of the SIS | 0.099 | 0.099 | - | 80% | 80% |



14-CM 22794

# 18.
# ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையம்

## 18.1 ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தின் நோக்கு :-

சர்வதேச போட்டி முறைமை மற்றும் தீர்வுகளுடன் பாதுகாப்புப் படைகள் அதேபோன்று ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காக உலகத் தரம் வாய்ந்த விஞ்ஞானத் தொழினுட்பவியலின் அடிப்படை மற்றும் முன்றேப்பாடுகளைத் தாபிப்பதன் மூலம் பாதுகாப்புசார்ந்த பிரயோகங்களுக் கான சுதேசியத் தீர்வுகளின் உற்பத்தியை வடிவமைப்பதும், அபிவிருத்தி செய்வதும் முன்னிலை வகிப்பதும்.

### 18.1.1 நோக்கங்கள்

- முன்னரே சுட்டிக்காட்டப்பட்ட குறியிலக்கை இலகுபடுத்துவதற்காக பின்வரும் நோக்கங்கள் எய்தப்படும்.
- பாதுகாப்புத் துறையில் காணப்படும் சிறந்த நடைமுறைகள் மற்றும் கிடைக்கக்கூடியதாகவுள்ள வளங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வற்றைத் தன்னகப்படுத்திக் கொள்ளலும் சிறந்த முறைமைகளை வடிவமைத்தலும்
- பாதுகாப்புத் துறையில் செயற்பாட்டில் காணப்படுகின்ற தகவல் தொழினுட்ப வியல் சார்ந்த மற்றும் தகவல் தொழினுட்பவியல் சாராத முறைமை களைக் கூட்டிணைப்பதற்குத் தேவையான இடைமுகங்களை வடிவமைத்தல்
- ஆய்வு, அபிவிருத்தி நிறுவனத்தின் விளைதிறனையும் நீடித்திருக்கும் தன்மையினையும் மேம்படுத்தி மதிப்பீடு செய்யும் பொருட்டு பூரணமான ஒரு அபிவிருத்தியடைந்த ஆய்வு, அபிவிருத்தி நிறுவனத்தினை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கையில் பாதுகாப்புத் துறைக்காக ஒரு பூரணமான ஆய்வு, அபிவிருத்தி நிறுவனத்தை நடத்திச் செல்லல்.

## 18.2 2015 சனவரியிலிருந்து டிசெம்பர் வரையான காலப்பகுதியில் அடையப்பெற்ற சாதனைகளும் வெல்லப்பட்ட விருதுகளும்

- பனாகொடையில் உள்ள இராணுவ முகாமின் இலங்கை சமிக்ஞைப் படைப்பிரிவின் றெஜிமென்ட் தலைமை யகத்தில் ஆரம்பத்தில் அமைக்கப்பட் டிருந்த ஆய்வு, அபிவிருத்தி நிலையம், பின்னர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அதன் பிற்பாடு, ஆய்வு, அபிவிருத்தி நிலைய மானது 2015 இல் மொரகாஹேன வீதி, பிட்டிப்பனயில் உள்ள அதன் சொந்தக் கட்டடத் தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும் வரை கொழும்பு 7 டீஆஜஊர் இல் உள்ள வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலக இடத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தது.



- ஆய்வு, அபிவிருத்தி நிலையத்தின் வானொலி மற்றும் இலத்திரனியல் பகுதி, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 8 ஆவது சர்வதேச ஆய்வு மாநாட்டில் "இலங்கையர் பொருத்தப்பாட்டில் 'மெய்நிகர் உண்மையான வான் சாகசம் மற்றும் பரசூட்டில் குதிக்கும் பயிற்சிகளைப் போலச் செய்தலின் வானியக்கவியல் தாக்கங்கள்' மீதான ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது.
- ஆய்வு, அபிவிருத்தி நிலையத்தின் தகவல் தொழினுட்பவியல் பகுதி, கொழும்புப் பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "புவியியல் மற்றும் இடர் முகாமைத்துவ மாநாட்டில்" இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக தகவல் தொழினுட்பவியல் பகுதியினால் விருத்தி செய்யப்பட்ட மென்பொருள் தீர்வினை சமர்ப்பித்திருந்ததுடன் அது 2016 யூனில் ஐக்கிய அமெரிக்காவினால் நடத்தப்பட விருக்கும் "பயனர் மாநாடு 2016 ☐ நுளுசுஜ" இற்கு சமர்ப்பிக்கப்படுவதற்காகத் தேர்வு செய்யப் பட்டிருக்கிறது.
- 2015 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் தனது செயற்றிட்டங்களுக்காக ஆய்வு, அபிவிருத்தி நிலையம் பின்வரும் விருதுகளை வென்றுள்ளது :

  i. தேசிய சிறந்த தர ICT விருதுகள் - 2015
     - "வெள்ளி" – உலகளாவிய இடர் பகுப்பாய் வுத் தடுப்பு மற்றும் தணிப்புச் செயலிகள்

  ii. தேசிய சிறந்த தர ICT விருதுகள் - 2015
     - "வெண்கலம்" K-8 பறப்புப் போலி முறைமை

  iii. INFOTEL கண்காட்சி 2015
     - **"RUNNER UP"** – அதிகளவான தொழினுட்பவியல் கண்டுபிடிப்பு மாடம்

  iv. இலங்கையின் பயனர் மாநாடு 2015 - ESRI
     - "சிறந்த முன்வைப்பு" – பல தீங்கு இணையச் செயலி

| 18.1 | 2015 இல பூரணப்படுத்தப்பட்ட செயற்றிட்டஙகள | |
|---|---|---|
| தொ/ இல. | நடவடிக்கை / செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில.) |
| **i.** | ஆட்டிலறி வீச்சுப் போலி (கட்டம் **11** )<br><br>இறக்குமதி செய்வது மிகவும் செலவு மிக்கதாகையால் பயிற்சி நோக்கங்களுக்காக ஆட்டிலறி பாடசாலைக்கு செலவு விளைதிறன்மிக்க ஆட்டிலறி வீச்சுப் போலியினைத் தாபிப்பதற்கு. ஆய்வானது வெற்றிகரமாக அமைந்திருந்ததுடன் அதன் முதலாவது கட்டம்<br>நிறைவடைந்து ஆட்டிலறிப் பயிற்சிப் பாடசாலையின் பயிற்சி நோக்கங்களுக்காகத் தயார்<br>நி லை யி ல<br>உ ளளது. | 3.40 |
| **ii** | புகையிரதப் பாதை முறைமை<br><br>இந்த ஆய்வு, கட்டுப்பாட்டு அலகு அதேபோன்று பிரயாணிகள் ஆகியோருக்கு புகையிரதத்தின் வருகை தொடர்பில் வழிகாட்டலை வழங்குவதற்கு செல்வழி மற்றும் பாதைத் தொழினுட்பவியலின் அடிப்படையில் GPS இனைப் பயன்படுத்தி விருத்தி செய்யப்பட்டது. இச்செயற்றிட்டம் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. | 7.90 |
| **iii** | நிகழ்வு அறிக்கையிடல் முறைமை<br><br>புவிசார் (இடம் சார்ந்த) விபரங்கள் மற்றும் இடக்குறிச் சொல்லிட்ட புகைப்படங்கள் ஆகியவற்றுடன் நிகழ்வு இடங்களை அடையாளப்படுத்துகின்ற இயல்திறனுடன்கூடிய ஒரு முறைமையை விருத்தி செய்வதற்கான ஆய்வு. அறிக்கையிடப்பட்ட நிகழ்வினைச் சேகரித்தல்<br>மற்றும் பரப்புதல், கள இடங்கள் மூலமான தகவல்கள் என்பன குறுஞ் செய்தி அடிப்படையிலான GSM இனைப் பயன்படுத்தி சில செக்கன்களுக்குள்ளாகவே மத்தியில்<br>ஒருங்கிணைக்கப்பட்ட தலைமையகம் / அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். செயற்றிட்டத்திற்கான மேலும் சில அத்தியாவசியமான நவீனப்படுத்தல்கள் நடைபெற்றுக் கொணடிருககினறன. | 0.24 |
| **iv** | **STF** இற்கான நிகழ்வு அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு முறைமை<br>STF இற்காக நிகழ்வுகளை அறிக்கையிடுவதற்கும் தரவைக் களஞ்சியப்படுத்துவதற்குமென GIS மற்றும் GPS அடிப்படையிலான வலைத்தள தீர்வினை விருத்தி செய்வதற்கான ஆய்வு (STF இனால் நிதியிடப்பட்டது). களச் சோதனைகளும் தேவையான நவீனப்படுத்தல்களும் நடைபெறறுக கொணடிருககினறன. | 0.22 |
| **v** | **K 8** பறப்புப் பயிற்சிப் போலி<br><br>உண்மையான விமானங்களைப் பயிற்சிக்காகப் பயன்படுத்துகையில் உயர்ந்தளவிலான செலவுகள் ஏற்படுவதால் பயிற்சி பெறும் விமான ஓட்டிகளின் பயிற்சிக்காக வழங்குவதற்கென K8 பறப்புப் பயிற்சிப் போலி வடிவமைக்கப்பட்டது. பயிற்சிப் போலி யானது பயிற்சிச் செலவினைக் குறைந்த மட்டத்தில் பேணியது. இது உள்ளூர் பொறியியலாளர்களின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. தற்போது விமானத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.<br><br>இச்செயற்றிட்டம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது. | 3.30 |

| | | |
|---|---|---|
| **vi** | சிறிய துப்பாக்கிச் சுடுகல போலி<br><br>சிறிய துப்பாக்கிச் சுடுகல போலியானது துப்பாக்கி சுடுநர் பயிற்சி நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. போலியானது உண்மையான சுடுதலைப் போல பின்னுதைப்புப் செயற்பாடு மற்றும் உதறல் (அதிர்வு) போன்ற விளைவுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆய்வானது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 5 ஆயதங்களுடனான சுடுதல் போலி முறைமை 4 இலங்கை இராணுவத்திற்காக அவர்களது நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகிறது. | |
| **vii** | டெங்கு கண்காணிப்பு முறைமை<br><br>நாட்டில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துதல் கடினமானதாக மாறுகிறது, இதற்குப் பிரதான காரணமாக இருப்பது பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு இடையேயான செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பிலும் வினைத்திறனான தகவல் பரிமாற்றத்திலும் காணப் படுகின்ற குறைபாடே ஆகும். இம்முறைமையின் குறிக்கோள்களாக வலைத்தள அடிப்படையிலான முறைமை மறறும செலலிடபபேசிச செயலிகளுடன இப பிரசசினைககுத தரவு காணபதாகும. | 0.3 |

| | | |
|---|---|---|
| **viii** | உலகளாவிய இடர் நேர்வுப் பகுப்பாய்வு தடுப்பு மற்றும் தணிப்புச் செயலிகள்<br><br>நாட்டில் ஏற்பட்ட ஏதாவது இயற்கை அனர்த்தத்தின்போது கணிக்கப்பட்ட இடரார்ந்த நிலைமையைத் தணிக்கும் பொருட்டு சிவில் மற்றும் இராணுவ ஒருங்கிணைந்த (CIMIC) நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக மீட்புப் பணிகளைச் செய்வதற்கு இலங்கை இராணுவத்தை அனுமதிக்கின்ற இந்தச் செயலியானது வலைத்தள முறைமையை அடிபபடையாகக கொண்டுளளது. | 1.0 |
| **ix** | வாகன முகாமைத்துவ முறைமை<br><br>இது ஒரு வலைத்தள அடிப்படையிலான முறைமையாகும். இம்முறைமையானது வாகனச் செயற்பாடுகளின் பதிவுகளை திகதிவாரியாகப் பேணுகின்ற அதேவேளை பயனாளர்களின் வாகனத் தொகுதி தொடர்பான விபரங்களை வினைத்திறனான வகையில் முகாமை செய்து பராமரிபபதறகு அவரகளை அனுமதிககிறது. | 0.5 |

| 18.2 2015 இல மேறகொளளபபடட செயறறிடடஙகள | | |
|---|---|---|
| தொ. இல. | நடவடிக்கை / செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில.) |
| **i.** | வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கான பயிற்சிப் போலி<br><br>குறைந்தபட்ச பயிற்சிச் செலவுடன் வான் போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையங்களில் வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்களின் ஊடாடும் பயிற்சிகளுக்கான ஒரு போலியை விருத்தி செய்வதற்கான ஆய்வு<br><br>இநதச செயறறிடடம கொழுமபுப பலகலைககழகததின உதவியுடன் மேறகொளளபபடடது. | 1.80 |
| **ii.** | நிலத்தடி நீர் கண்காணிப்பு மற்றும் கண்டுபிடிப்பு முறைமை<br><br>கடலின் உட்பகுதியில் உள்ளகரீதியான நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம். இது கடற்படைக் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும். இந்த ஆய்வின் முதலாவது கடடம நிறைவு பெறறு தரவுச சேகரிப்பு நடைபெறறுக் கொண்டிருக்கிறது. | 5.50 |
| **iii.** | போலிக்கான நகர்வு மேடை **(3 DOF)**<br><br>இந்தப் போலியை முப்படையினரதும் பயிற்சிக்காகப் பயன்படுத்த முடியும். நகரும் வாகனச் சவாலாளர்கள் உண்மையான நிலைமைகளில் முகம் கொடுப்பவற்றை இந்தப் போலி பயிற்சியளிக்கிறது. ஆய்வு வெற்றிகரமாக நடத்தப்படுகிறது. | 3.60 |
| **iv.** | நாட்பட்ட சிறுநீரக நோய்களுக்கான பூகோள தகவல் முறைமை<br><br>இச்செயற்றிட்டம் பறப்பில் ஈடுபடும் சிறுநீரக நோயாளிகளின் சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரசபைகளால் பயன்படுத்தப்படக்கூடியதாக சிறுநீரக நோயாளிகளின் தரவுத்தளம் ஒன்றை விருததி செயவதறகாக வடிவமைககபபடடுளளது. | 0.3 |
| **v.** | ஒளியிழை வரிவடிவ அங்கீகார **(OCR)** அடிப்படையிலான சிங்கள பிரயில் மாற்றம்<br><br>கட்புல ஆற்றல் குறைந்த நபர்களின் படிப்பறிவானது லூயிஸ் பிரயில் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பிரயில் என அழைக்கப்படுகின்ற வாசிப்பு மற்றும் எழுத்து முறைமைத் துணையாதாரத்தின் மீது பெருமளவில் தங்கியிருக்கிறது. அத்தகைய நபர்களுக்கான கணினிகள் மற்றும் தகவல் தொழினுட்பவியல் வளர்ச்சி தருகின்ற வாய்ப்புகள் அதேபோன்று சவால்கள் ஆகியவற்றுடனான கூட்டிணைக்கப்பட்ட புதிய தொழினுட்பவியல்களின் வெளிப்பாடு காணப்பட்ட போதிலும், குறிப்பாக கல்வி மற்றும் கல்விசார் பெருமுயற்சிகளின் பொழிவில் கட்புலனற்றோர் பிரெயில் முறையில் எழுதும் எழுத்துகளை சாதாரண கையெழுத்திற்கு மொழிபெயர்க்கும் பொருட்டு வழங்கப்படுகின்ற சேவைகள் போதுமானதாக இல்லாததன் காரணமாக அவர்கள் கஷ்டமான நிலைமைகளுக்கு உள்ளாகின்றனர். இந்த முறைமை இத்தகைய பிரச்சினைகளை நிவரததிபபதை இலககாகக கொணடுளளது. | 0.4 |
| **v.** | அஞ்சல் முகாமைத்துவ முறைமை<br><br>இந்தச் செயற்றிட்டம் பாதுகாப்பு அமைச்சுக்கான வழமையான அஞ்சல் முகாமைத்துவ முறைமை ஒன்றை வடிவமைத்து அபிவிருத்தி செய்வதற்கானதாகும். | 0.3 |

| | | |
|---|---|---|
| **vi.** | பூகோளரீதியாக ஒருங்கிணைந்த சுடுகல ஆதரவு முறைமை (GIFS) – முதல் சுற்று எறி<br><br>பீரங்கி இயக்கும் திறனை மேம்படுத்தல் மற்றும் துல்லியமானதும் உத்தரவாதமானதுமான நேரடியற்ற சுடுதலுக்கான துப்பாக்கி நிலைகளின் வினைத்திறனை அதிகரித்தல் ஆகியவற்றிற்கான செயலி ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கான ஆய்வு. நேரடியற்ற சுடுதலின் மூலம் இலக்குகளை வேகமாகவும் துல்லியமாகவும் தாக்கும் நடவடிக்கைக்காக அதிநவீன கணினிப்படுத்தல் மற்றும் GIS தொழினுட்பவியலை முதல் சுற்று எறி (GIFS) வழங்குகிறது. புவித்தகவல் நுட்பத்துடன் ஒருங்கிணைந்த துப்பாக்கி கணினிப்படுத்தல் முறைமையானது வழக்கற்றுப்போனதும் நிரற்படுத்தப்படாது இருப்பதுமான கணிப்பான் களுக்குப் (*fx 880, 750*) பதிலாக மாற்றீடு செய்யப்படும்.<br><br>ஆய்வானது மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானத் துறையுடன் இணைந்து செயயபபடுகிறது. | 1.5 |

**18.3** 2016 இல மேறகொளளபபட்ட செயறறிடடஙகள

| தொ. இல. | நடவடிக்கை / செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில.) |
|---|---|---|
| **i.** | இடைநிலை வீச்சுள்ள ஆளில்லா விமானம் – (கட்டம் -11)<br>எதிரியின் நிலப்பகுதியிலிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்காக தூர இருந்து கட்டுப்படுத்தக்கூடிய ஆளில்லா விமானம் ஒன்றை விருத்தி செய்வதற்கான ஆய்வு. | 96.00 |
| **ii.** | **HF/VHF, UHF** வானொலி இருமைக் கருவியின் வடிவமைப்பும் விருத்தியாக்கமும் உள்ளூரில் தொடர்பாடுவதற்காக ஒரு பாதுகாப்பான வானொலித் தொகுதியை விருத்தி செய்வதற்கான ஆய்வு | 1.4 |
| **iii.** | மெய்நிகர் உண்மையான பரசூட்டிலிருந்து குதிப்பவர் மற்றும் வான்வெளி சாகசப் பயிற்சியாளர் போலி உண்மையான சுற்றாடலில் நிகழ்த்துவதற்கு முன் பரசூட்டிலிருந்து குதிப்பவருக்கான மெய்நிகர் உண்மையான சூழலை வழங்குவதற்காக மெய்நிகர் உண்மையான வான்வெளியில் சாகசம் செய்யும் மற்றும் பரசூடடிலிருநது குதிபபவர பயிறசிககான போலி வடிவமைககபபடுகிறது. | 1.4 |

## 18.3 2015 ஆம் ஆண்டில் அலுவலர்களின் இயல்திறனை அபிவிருத்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :

i. சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை தகவல் தொழினுட்பவியல் தொழிற்றுறைக் கூட்டமைப்பு (FITIS) ஆகியவற்றின் கூட்டமைவில் GIS செயலி மீதான முப்படையினர், பொலிஸ் மற்றும் STF ஆகியோருக்கான பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

ii. GPS தொழினுட்பவியல் மீதான சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பாடநெறி ஒன்றிற்காக தகவல் தொழினுட்பவியல் அலுவலர்களின் பங்குபற்றல்.

iii. ARDUINO அபிவிருத்திப் பாடநெறி ஒன்றிற்கான அலுவலர்களின் பங்குபற்றல்

iv. இந்தியாவில் நடத்தப்பட்ட “GEO புலனாய்வு ஆசியா -2015” இற்கான அலுவலர்களின் பங்குபற்றல்

**18.3** 2016 ஆம் ஆண்டில் தொடரப்படும் செயற்திட்டங்கள

| தொ. இல. | நடவடிக்கை / செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்.) | முன்னேற்றம் | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ.மில். | % | |
| i. | இடைநிலை வீச்சுள்ள ஆளில்லா விமானம் – **(கட்டம் -11)**<br><br>எதிரியின் நிலப்பகுதியிலிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்காக தூர இருந்து கட்டுப்படுத்தக்கூடிய ஆளில்லா விமானம் ஒன்றை விருத்தி செய்வதற்கான ஆய்வு. | 96.00 | நிதி | | 90 % | |
| | | | பௌதிக ரீதியான | | | |
| ii. | **HF/VHF, UHF** வானொலி இருமைக் கருவியின் வடிவமைப்பும் விருத்தியாக்கமும்<br><br>உள்ளூரில் தொடர்பாடுவதற்காக ஒரு பாதுகாப்பான வானொலித் தொகுதியை விருத்தி செய்வதற்கான ஆய்வு | 1.4 | நிதி | 0.04 | 50% | ஒலிபெருக்கி அலகு மற்றும் குறியாக்கல் தொகுதியின் அபிவிருத்தி ஆகியவற்றுக்கான மேம்படுத்தல்கள் நடைபெறுகின்றன இச்செயற்றிட் டத்தை 2016 இன் இறுதியினுள் நிறைவு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. |
| | | | பௌதிக ரீதியான | | | |
| iii. | மெய்நிகர் உண்மையான பரசூட்டிலிருந்து குதிப்பவர் மற்றும் வான்வெளி சாகசப் பயிற்சியாளர் போலி<br><br>உண்மையான சுற்றாடலில் நிகழ்த்துவதற்கு முன் பரசூட்டிலிருந்து குதிப்பவருக்கான மெய்நிகர் உண்மையான சூழலை வழங்குவதற்காக மெய்நிகர் உண்மையான வான்வெளியில் சாகசம் செய்யும் மற்றும் பரசூட்டிலிருந்து குதிப்பவர் பயிற்சிக்கான போலி வடிவமைக்கப்படுகிறது. | 1.4 | நிதி | 0.09 | 80% | தலைமைச் செல்வழி, உணரி அளவு திருத்தல் மற்றும் பார்வைப் பிளவுகள் ஆகிய வற்றின் மேம்படுத் தல்கள் நடைபெறு கின்றன. இந்தச் செயற்றிட்டத்தை 2016 இன் இறுதி க்குள் பூரணப் படுத்தி கையளிக் கத் திட்டமிடப் பட்டுள்ளது. |
| | | | பௌதிக ரீதியான | | | |

## 18.4. 2015 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைகள், பிரச்சினைகள் மற்றும் சவால்களின் முன்னேற்றம்

- வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஆய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பாதீடுகளுடன் இந்த ஆண்டின் காலப்பகுதியினுள் குறிப்பிடத் தக்களவு செயற்றிட்டங்களை CRD இனால் வெற்றிகரமாக நிறைவு செய்ய முடிந்திருந்தது.

- வேறு அரசாங்க நிறுவனங்களினால் செய்யப்பட்ட கோரிக்கைகளின் மீது ஊசுனு இனால் விருத்தி செய்யப்பட்ட தீர்வுகள் மற்றும் உபகரணங்கள் வெகுவாகப் பாராட்டப்பட்டன.

- MOD யில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து ஆய்வுச் செயற்றிட்டங்களுக்குத் தேவையான உருப்படிகள் மற்றும் உபகரணங்களைப் பெறுவதற்கான தேவைப்பாடுகளை உயர்ந்த விலை மனுக்கள் காரணமாக அத்தகைய உருப்படிகள் மற்றும் உபகரண வளங்களில் எதிர்நோக்கப் படும் கஷ்டங்கள், குறிப்பிட்ட உருப்படிகளுக்கான வழங்கல்கள் இன்மை மற்றும் கட்டளையிடப்பட்ட உருப்படிகள் மற்றும் உபகரண வழங்கலில் உள்ள தாமதங்கள் என்பவற்றை CRD கொண்டிருந்தது. எனவே அத்தகைய உருப்படிகளை திறந்த சந்தையிலுள்ள போட்டி வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக உள்ளீர்க்கப்படும் பொறி முறை ஒன்றின் தேவை வலியுறுத்தப் பட்டது.

- நேரடியாக இறக்குமதி செய்யத் தேவையான உள்ளூர் சந்தையில் கிடைக்காத உருப்படிகளும் அத்தகைய இறக்குமதிகளுக்கான கொடுப்பனவைச் செய்வதில் காணப்படும் கஷ்டங்களும்.

- பொருத்தமான வெளிவாரி ஆய்வு உத்தியோகத்தர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கான மற்றும் முப்படையி லுமிருந்து வரும் பொருத்தமான ஆய்வு உத்தியோகத்தர்களின் வரவின்மைக் காகவும் அவர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்கான பொறிமுறை காணப்படாமை.

- ஆரம்பித்த செயற்றிட்டங்கள் நிறுவனத் தின் சிரேஷ்ட அதிகாரிகளால் மாற்றப்பட்டதன் காரணமாக நிறுவனத் தினால் கோரிக்கையிடப்பட்ட சில செயற்றிட்டங்களை ஒப்படைக்கும்போது கஷ்டங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

- கனிஷ்ட நிலை அதிகாரிகளின் அக்கறை குறைவின் காரணமாக அரசாங்க நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிக ளினால் கோரிக்கையிடப்பட்ட சில செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது CRD கஷ்டங்களை எதிர்கொள்கிறது.

## 18.5 எதிர்கால வாய்ப்புகள்

இடைத் தவணையின் (2016-2018) மீது நிறுவனத்தை மேம்படுத்துவதற்கான முன்னெடுக் கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு :

- முழுமையடைந்த ஆராய்ச்சி நிறுவகம் ஒன்றைத் தாபிப்பதற்காக சகல பிரிவுகளினதும் முழுமையான தொழிற்பாட்டை இயலச்செய்வதற்கு நவீன ஆய்வுகூட வசதிகளுடன் 6 தளங்களைக் கொண்ட கட்டடத்தின் நிர்மாணத்தை ஆரம்பித்தல்.

- CRD இற்காக விசேட ஆளணியினரை நேரடியாகச் சேர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்தல்.

- CRD இற்காக விசேட ஆய்வு உத்தியோகத்தர்களுக்கு விசேட ஆய்வுப் படியினை வழங்குவதற்கான ஒழுங்கு களைச் செய்தல்.

- CRD செயற்றிட்டங்களில் பல்கலைக்கழகங் களின் உள்ளுறைவாளர்களுக்கும் இட மளிப்பதற்குத் தேவையான ஒழுங்குகளளகளைச் செய்தலும் படியொன்றினை வழங்குதலும்.

- லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னோலொஜி லிமிட்டெட் இன் ஊடாக உள்ளூர் மற்றும் சர்வதேசம் ஆகிய இரண்டிலும் முடிவுப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்குப் பொருத்த மான பொறிமுறை ஒன்றை விருத்தி செய்தல்.

# 19
# ஒன்றிணைந்த சேவை மொழிப் பயிற்சி நிலையத்தின் வேலைத் திட்ட அறிக்கை

## 19.1 அறிமுகம்.

1986 ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் ஆலோாசணையின் கீழ் இம் மொழிப் பயிற்சி பாடசாலை மொழிக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட தோடு, பாதுகாப்பு துறையில் சேவை செய்யும், வீரர்களின் தமிழ் மொழியால் எழுத, வாசிக்க, பேச, தேச்சியை வழங்குவதே இந் நிலையத்தின் பிரதான நோக்கமாகும். இது வரை 91 பாடநெறிகள் சிறப்பாக முடித்து முப்படை மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படை வீரர்களுக்கு தமிழ் மொழி அறிவு வழங்கப்பட்டுள்ளன. அதே போல் 106 அதிகாரிகளும், 7694 முப்படை மற்றும் பொலிஸ் அதிரடிப்படை வீரர்களும். தமிழ் மொழியை கற்று நாட்டில் பல இடங்களில் சேவை செய்கிறார்கள்.


## 19.2 வளர்ச்சி மீளாய்வு - 2015

- முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத் தர்களுக்காக 2015 ஆம் ஆண்டு இரண்டு தமிழ் மொழிப் பயிற்சி பாடநெறிகள் நடைபெற்றன.

- சமயலறையையும் சுற்றுப்புறத்தையும், செப்பனி டுதல் - செலவு 62340.00 ரூபாய்.





- காரியாலய மலசல கூடங்கள் பழுதுபார்த்தல் - செலவு 78985.00 ரூபாய்




- புதிதாக நிர்மாணித்த இரண்டு கட்டிடங்கள் மற்றும் அவற்றைக்கு வேண்டிய இரண்டு மலசல கூடங்களை நிர்மாணித்தல்.




- அரைகுறையாக இருந்த கணனிப் பிரிவு, தொலைபேசிப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு ஆகியவற்றை நிர்மாணித்தல். செலவு - 210731.00 ரூபாய்.




- கோப்பிரல் உணவு அறை நிர்மாணித்தல். செலவு - 366050.00 ரூபாய்




- மாணவ அதிகாரிகளின் தங்கும் விடுதியின் கூரையை பழுதுபார்த்தல். செலவு - 198445.00 ரூபாய்.




- புதிதாக தொலைபேசி பரிவர்தனை நிலையம் ஒன்றை அமைத்தல்.




- பாடநெறியின் வெளிக்கள செயற்பாடு களுக்காக ஒலிபரப்பு உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல். செலவு - 641883.00 ரூபாய்

## 19.3 நிறுவனத்தினால் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகள்.

- இப்போது இந்நிலையத்தின் நிரந்தர மாக கடமையாற்றும் வீரர்களுக்கும் பயிற்சி பயிலும் மாணவர்களுக்கும் போதிய தங்குமிட வசதிகள் இல்லாமை.
- நிறுவனத்தின் நிர்வாக வேலைக ளுக்காக சாதாரண வாகனமொன்று இல்லாமை.
- தரைப்படையால் புதிதாக முன் வைக்கப்பட்ட எரிபொருள் கொள்கை திட்டத்தின் காரணத்தி னால் நிர்வாக வேலைகளை செய்து கொள்ள போதிய எரிபொருள் போதாமை.
- பாதுகாப்பு அமைச்சினால் இணைக் கப்பட்டுள்ள சிற்றூழியர்களின் சேவை திருப்தியானதாக இல்லை.

## 19.4 எதிர் காலத்தில் செயற்படுத்த இருக்கும் பாடநெறிகளும் வேலைத் திட்டங்களும்.

- பிரான்ஸ் மொழி பாடநெறி ஆரம்பித்தல்.
- புதிய காரியாலய கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.
- அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் நிலையற்ற உத்தியோகத்தர்களுக் காக கட்டிடமொன்றை அமைத்தல்.
- பிரதான வாயில் அமைத்தல்.
- பாதுகாப்பு அணி மற்றும் சிவில் ஊழியர்களின் தங்குமிட விடுதிகளை பழுதுபார்த்தல்.
- புதிய நலனோம்பு வர்தக நிலையமொன்றை அமைத்தல்.

# 20
# ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிட்டெட் (RALL)

## 20.1 மேலோட்டமான பார்வை

ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிட்டெட் (RALL) என்பது பாதுகாப்பு அமைச்சின் ஆளுகையின் கீழ், முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனி ஆகும். இந்தக் கம்பனி பிரதானமாக ஓய்வுபெற்ற படையினர் மற்றும் சிவில் பொலிசாருக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது. RALL இன் முதன்மையான தொழிற்பாடு உயர் தேசிய அக்கறை கொண்ட பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகும். RALL காலி ஊடாக இந்து சமுத்திரத்திற்கு வணிகக் கப்பல்கள் செல்வதற்கும் துணிகரமான பாதுகாப்பினை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக, அவசர தீயணைப்பு சம்பந்தமான பயிற்சி பெறுபவர்களுக்கு மண்டாவெலயில் முழுமையாக உபகரணமிடப்பட்ட தீயணைப்பு மற்றும் அவசர பிரதிபலிப்பு பயிற்சி நிலையம் ஒன்றைத் தாபித்திருக்கிறது.

### 20.1.1 தரை நடவடிக்கைப் பிரிவு

RALL இன் தரை நடவடிக்கைப் பிரிவானது தொழில்வாண்மைசார் தன்மையில் மிகவுயர்ந்த தரத்திற்கு தம்மை அர்ப்பணித்துள்ளதுடன் தொழிற்றுறையின் ஒரு சந்தைப்படுத்தல் தலைமையாக மாறி வருகிறது. RALL தனது சேவைகளின் தரத்தினை ஒப்பீடு செய்வதன் மூலம் தொழிற்றுறையில் ஒரு நிலையினை அமைத்துள்ளது.

ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிட்டெட்டின் தரை நடவடிக்கைக் கிளை 2300 இற்கும் மேற்பட்ட ஆண், பெண்களைக் கொண்ட வலிமையான ஒரு படையுடன் அறுபத்து நான்கு (64) அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்றது.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா ரெலிகொம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக்கழகம், ஊவா வெல்லச பல்கலைக்கழகம் ஆகியவற்றுடனான ஒப்பந்தங் களின் முடிவுறுத்தல் காரணமாக ஏறத்தாழ 1000 வேலைவாய்ப்புகளை நாங்கள் இழந்துள் ளோம். பிராண்டிக்ஸ் மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி ஆகியவற்றுடன் புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. தற்போதிருக்கின்ற வெற்றிடங்களை நிரப்பு வதற்கும் அதேபோன்று புதிய பொறுப்புக் கூறலுக்கும் போதுமானளவு எண்ணிக்கை யிலான ஆட்களை சேர்த்துக் கொள்வதில் பாரிய பிரச்சினைகள் எதிர்நோக் கப்படுகின்றன. ஆட்சேர்ப்புக்கான

கனிஷ்ட பாதுகாப்பு அலுவலர்களின் அடிப்படைத் தகைமைகளைக் குறைக்க முன்மொழிவு செய்யப்பட்டிருக்கிறது.

### 20.1.2 கடல்வழிப் பிரிவு

இந்தப் பிரிவு சிறியளவு ஆளணியினர் பலத்துடன் RALL ற்கு “உயர் வருமானத்தை” பெற்றுக் கொடுத்துள்ளது. இந்து சமுத்திரத்தில் கடற் கொள்ளைக்கு எதிரான நடவடிக்கை களுக்காக ஏனைய துணைப் பொருட்களுடன் கூடிய அதிகாரமளிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் திறனுள்ள ஆளணியினரை ஏற்பாடு செய்வதே இதன் பிரதான பணியாகும்.

## 20.2 பிரச்சினைகளும் சவால்களும்

- 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடவடிக்கை களுடன் சம்பந்தப்பட்ட கடல்சார் பாதுகாப்புக் கான இலங்கை சீ மார்ஷல்களின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் பின்வரும் பிரதான காரணங்களால் பணிக் குறைப்புச் செய்யப் பட்டனர்.
    - 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சோமாலியா மற்றும் அரேபியக் கடலோரங்களில் கடற்கொள்ளையுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டிருந்தமை
    - 2015 இலிருந்து மேற்கு இந்து சமுத்திரம் மற்றும் அதான் குடாப் பகுதிகளில் உயர்தளவிலான இடர் மேலும் குறைக்கப்பட்டமை
    - ஒவ்வொரு கப்பலினதும் உள் பாதுகாப்பிற்காக அதிகளவான தனியார் கடல்வழிப் பாதுகாப்பு கம்பனிகள் (PMSC)மூலம் 04 முதல் 02 வரையிலான தனியார் ஒப்பந்த ஆயுதப் பாதுகாப்பு ஆளணியினரின் (PCASP)வேலை குறைக்கப்பட்டமை
    - காலி நகரிலிருந்து ஒப்பீட்டு ரீதியில் குறைந்த சம்பளத்தில் பணியில் ஈடுபடு வதற்கு வெளிநாட்டு சீ மார்ஷல்களின் வருகை
    - தற்போதைய சந்தை நிலைமையுடன் பொருந்தாதவாறு சீ மார்ஷல்களின் பணிக்காக சயுடுடு இனால் அறவிடப்படும் கட்டணம் உயர்வாக உள்ளமை
- RALL இடமிருந்து பெறப்பட்ட சேவைகளுக் காக சில PMSCs மற்றும் அவர்களது உள்ளூர் முகவராண்மைகளால் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படுகின்றமை
- கடல்வழிப் பாதுகாப்புக் கடமைகளுக்காக RALL இனால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் வழக்கற்றுப் போனவைகளாக அல்லது இன்றைய காலகட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலிருத்தல்

- கடல்வழி நடவடிக்கைகளில் கீழ்நோக்கிய போக்குகளை நிறுத்துவதற்கு பின்வரும் படிமுறைகளை RALL எடுத்திருக்கிறது.
    - மேற்கூறப்பட்ட காரணங்கள் காரணமாக சீ மார்ஷல்களின் ஈடுபடுத்தலுக்கான தேவையில் அவதானிக்கப்பட்ட ஒரு கீழ்நோக்கிய போக்கான கடல்வழி நடவடிக்கைக்காக முன்பிருந்த கட்டணங்கள் திருத்தியமைத்தல்
    - எந்தவொரு வெளிநாட்டு சீ மார்ல்களுடனும் ஒத்துப்போகக்கூடியவாறான RALL சீ மார்ஷல் பயிற்சி

**Table 20.1 FinAnciAl PROgREss DURing ThE PERiOD OF 2009 –DEcEMBER 2015**

| | 2008/2009 Rs Mn | 2009/2010 Rs Mn | 2010/2011 Rs Mn | 2011/2012 Rs Mn | 2012/2013 Rs Mn | 2013/2014 Rs Mn | 2014/2015 (Draft) Rs Mn | 2015/2016 (Apr 2015 to Dec 2015) (Draft) Rs Mn |
|---|---|---|---|---|---|---|---|---|
| **Revenue & related Performance** | | | | | | | | |
| Revenue | 340.64 | 572.36 | 666.63 | 1,114.77 | 1,947.08 | 2,139.35 | 2,035.31 | 1,208.97 |
| Gross Profit | 111.55 | 175.70 | 193.24 | 385.18 | 500.62 | 663.08 | 517.20 | 319.89 |
| Other Income | 0.33 | 0.17 | 2.48 | 34.13 | 510.55 | 822.35 | 715.17 | |
| Profit before Tax | 89.07 | 124.88 | 131.82 | 318.29 | 853.21 | 1,358.02 | 1,040.61 | 228.29 |
| Tax | 31.59 | 52.90 | 55.40 | 52.78 | 168.47 | 317.22 | 260.00 | |
| Profit after Tax | 57.48 | 72.98 | 76.42 | 265.51 | 684.74 | 1,040.80 | 780.61 | 228.29 |
| | | | | | | | | |
| **Assets & Liabilities position** | | | | | | | | |
| Non Current Assets | 4.19 | 5.76 | 12.67 | 31.61 | 93.30 | 89.78 | 113.04 | 94.22 |
| Current Assets | 136.03 | 241.01 | 303.81 | 803.89 | 2,081.28 | 3,555.68 | 4,193.93 | 4,328.79 |
| Total Assets | 140.22 | 246.77 | 316.48 | 835.50 | 2,174.58 | 3,645.46 | 4,306.97 | 4,423.01 |
| Total Equity | 75.47 | 147.43 | 223.84 | 489.36 | 1,122.79 | 2,180.76 | 2,851.14 | 3,061.15 |
| Non current liabilities | | | 4.01 | 3.08 | 27.15 | 42.34 | 2.59 | |
| Current liabilities | 64.75 | 99.34 | 92.64 | 343.06 | 1,024.64 | 1,422.36 | 1,453.24 | 1,361.86 |
| Net Assets | 75.47 | 147.43 | 223.84 | 489.36 | 1,122.79 | 2,180.76 | 2,851.14 | 3,061.15 |
| Dividends Declared | | | | 28.00 | 68.00 | 103.50 | | |
| **Ratio Analysis** | | | | | | | | |
| Earnings per share | 114.90 | 145.88 | 152.76 | 530.75 | 1,368.79 | 2,078.96 | 1,560.43 | 456.35 |
| Net Assets per share | 150.86 | 294.71 | 447.45 | 978.23 | 2,244.45 | 4,359.34 | 5,699.43 | 6,119.24 |
| Return on equity | 76.16 | 49.50 | 34.00 | 54.25 | 60.98 | 47.72 | 27.35 | 7.45 |
| Gross profit Margin | 32.74 | 30.69 | 28.98 | 34.55 | 25.71 | 30.99 | 25.41 | 26.45 |
| Current Assets Ratio | 2.1:1 | 2.4:1 | 3.1:1 | 2.3:1 | 2:1 | 2.4:1 | 2.8:1 | 3.1:1 |

Chart 20.1

**Revenue & related Performance**





**Chart 20.2:**

**Assets & Liabilities position**





Chart 20.3:

**Ratio Analysis**



# 21
# லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் டெக்னோலொஜீஸ்

## 21.1 அறிமுகம்

வடக்கு கிழக்கு மனிதாபிமான நடவடிக்கை நிலவிய சமயத்தில் பாதுகாப்பு படையினருக்கும் பொலிசுக்கும் மூலோபாயரீதியில் முக்கியத்துவம் வகிக்கின்ற இராணுவ உபகரணங்களையும் சேவைப் பெறுகைகளுக்கான வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் ல.லொ.ரெ.லிமிரெட் தாபிக்கப்பெற்றது. மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னர் யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் அவசியப்பாட்டினை ஈடேற்றும் பொருட்டு ல.லொ.ரெ.லிமிரெட்டின் சேவைகள் மிகவும் அகல்விரிவான பரப்பெல்லைக்குள் அவ்வாறே முன்னெடுத்துச் செல்லப்பட்டன. அதன்பின்னர் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பெனிகள் மற்றும் அரச நிறுவனங்களின் அவசியப்பாடுகளை ஈடேற்றக்கூடியவகையில் தயாரிக்கப்பட்ட மதியுரைச் சேவைகளை வழங்கும்பொருட்டு ல.லொ.ரெ.லிமிரெட் தனது தொழிற்பாடுகளை மேலும் விரிவாக்கியது. எவ்வாறாயினும் இன்றும்கூட பாதுகாப்பு படையினருக்கும் பொலிசுக்கும் பெறுகை வசதிகளை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் வலுவூட்டப்படுகின்ற ஒரேயொரு கம்பெனியாகத் திகழ்வதும் ல.லொ.ரெ.லிமிரெட் ஆகும்.

## 21.2 2015 இல் அடைந்த வெற்றிகள் பிரதான செயற்பாடுகள்


ல.லொ.ரெ.லிமிரெட்டின் பெறுகை வசதிகள் பிரிவு பாதுகாப்புப் படையினருக்கும் பொலிசுக்கும் அவசியமான இராணுவ உபகரணங்களையும் சேவைப் பெறுகைக்கான வசதிகளையும் வழங்குவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. பாதுகாப்பு அமைச்சுக்கு தனது சேவைகளை இடையறாமல் வழங்கிவருவதோடு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் பெறுகையிலான தனது தேர்ச்சியையும் நிபுணத்துவ அறிவினையும் பாவித்து அரசாங்கத்திற்குச் சொந்தமான பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு (கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற) இணையான சேவையினை வழங்குவதற்கான வாய்ப்பு வழிவகைகளை ல.லொ.ரெ.லிமிரெட் 2015 ஆம் ஆண்டில் ஆராய்ந்து பார்த்தது.

சுதேச பாதுகாப்புக் கைத்தொழில், ஏனைய அரச நிறுவனங்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் தகவல்களின் பாதுகாப்பும், பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகளைச் சார்ந்த கருத்திட்டங்களை அமுலாக்குதல் என்பவை ல.லொ.ரெ.லிமிரெட்டின் கருத்திட்டப் பிரிவின் பொறுப்பாக அமைகின்றன. அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பெனிகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் தொடர்பில் இப்பிரிவு தனது செயற்பாடுகளை விரிவாக்க கவனஞ் செலுத்தி உள்ளது.

அட்டவணை - 21.1


| விபரம் | 2010/11 | 2011/12 | 2012/13 | 2013/14 | 2014/15 | ஒன்பது மாதங்க ளின் பெறுபேறு (கணக்காய்வு செய்யப்படாதவை) |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் சார்ந்த செயலாற்றுகை வருமானம் | 46.09 | 69.97 | 130.62 | 95.17 | 92.74 | 170.60 |
| மொத்த இலாபம் | 33.67 | 69.46 | 99.68 | 81.50 | 84.67 | 170.57 |
| வட்டி மற்றும் வரிக்குமுந்திய தொழிற்பாட்டு இலாபம் | 11.00 | 4.28 | 13.81 | 8.46 | 7.85 | 125.14 |
| வரிக்கு முந்திய இலாபம் | 10.82 | 7.62 | 17.38 | 14.49 | 12.05 | 126.83 |
| வரி | 3.18 | 2.91 | 3.23 | 4.70 | 3.31 | - |
| வரிக்கு பிந்திய இலாபம் | 7.65 | 4.71 | 14.15 | 10.88 | 7.42 | - |
| சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் நிலைமை | | | | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 4.03 | 15.48 | 12.53 | 8.56 | 10.76 | 6.92 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 194.46 | 159.09 | 157.02 | 149.73 | 288.36 |
| மொத்த சொத்துக்கள் | | 209.94 | 171.62 | 165.75 | 160.49 | 295.28 |
| மொத்த உரிமைப்பங்குகள் | 100.95 | 106.97 | 119.39 | 109.22 | 110.39 | 236.03 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 1.87 | 19.30 | 4.08 | 4.04 | 7.32 | 3.67 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 33.83 | 83.67 | 48.14 | 52.50 | 42.77 | 55.58 |
| நிகர சொத்துக்கள் | 100.95 | 106.97 | 119.39 | 109.22 | 110.39 | 236.03 |
| வெளிப்படுத்திய பங்கிலாபம் | - | - | 1.05 | 1.20 | 1.20 | - |

21.1 வருமானம் சார்ந்த செயலாற்றுகை



21.2


கடந்த ஆண்டில் ல.லொ.ரெ.சே.லிமிரெட்டின் நிதிசார் முன்னேற்றம்




21.2. சொத்துகள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமை

| விபரம் | 2010/11 | 2011/12 | 2012/13 | 2013/14 | 2014/15 |
|---|---|---|---|---|---|
| வீதப் பகுப்பாய்வு | | | | | |
| பங்கொன்றுக்கான ஈட்டல் (ரூ.) | 37,312 | 22,974 | 69,003 | 1.36 | 0.93 |
| பங்கொன்றுக்கான நிகர சொத்து (ரூ.) | 492,425 | 521,818 | 582,400 | 14.00 | 13.8 |
| உரிமைப்பங்குகள் மீதான இலாபம் % | 7.58 | 4.40 | 11.85 | 9.97 | 6.72 |
| மொத்த சொத்துக்கள் மீதான இலாபம் % | 5.60 | 2.24 | 8.24 | 6.57 | 4.62 |
| மொத்த இலாப வீதம் % | 73.06 | 99.28 | 76.31 | 85.63 | 91.30 |
| தொழிற்பாட்டு இலாப வீதம் % | 23.87 | 6.12 | 13.31 | 16.36 | 11.57 |
| நிகர இலாப வீதம் % | 16.60 | 6.73 | 10.58 | 8.89 | 8.47 |
| நடைமுறைச் சொத்துக்கள் வீதம் (பருவ) | 3.92 | 2.32 | 3.30 | 2.99 | 3.50 |

21.3 பௌதீக முன்னேற்றம்






15-CM 22794

21.3.2 பௌதீக முன்னேற்றம்

21.3.2.1 பெறுகை வசதிகள் பிரிவு

2015 ஆம் ஆண்டில் நடுத்தர மற்றும் பாரிய அளவிலான பதினெட்டு (18) பெறுகை வசதிகள் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக (ஒப்பந்தங்கள்) வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.

21.3 கருத்திட்டப் பிரிவு

| கருத்திட்டம் | விபரம் | 2015 இல் நிறைவு செய்யப்பட்டது |
|---|---|---|
| தேசிய ஆட்பதிவக (தே.ஆ.ப.)கருத்திட்டம் | தேசிய ஆட்பதிவக (தே.ஆ.ப.) கருத்திட்டம் தே.ஆ.பதிவகத்தை தாபித்தல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகித்தல் கருத்திட்டத்திற்காக கேள்விமனுதாரர்கள் நால்வர் ஆவர்.<br><br>கேள்வி I: பிரசைகளின் அடையாளத் தரவுகளை இலத்திரனியல் வடிவத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் முகாமைசெய்வதற்கான தகவல் முறைமையும் இணைந்த சேவைகளின் பெறுகையும்.<br><br>கேள்வி II: பிரசைகளைப் பதிவு செய்வதற்கான மாதிரிப் படிவங்களை வருடலும் எண்முறையாக்கலும் அகப் படுத்திய தரவுகளை வழங்குதலும்<br><br>கேள்வி III: பிரசைகளுக்கான இலத்திரனியல் அடையாள அட்டை தனிப்பயனாக்கலுக்கான பண்டங்கள் மற்றும் சேவைகளின் பெறுகை<br><br>கேள்வி IV: ஆட்பதிவுத் திணைக் களத்தின் தொலைக்கூறுக்கான கணனி வன்பொருள் மற்றும் இணைந்த சேவை களின் பெறுகை | கேள்வி II 2014 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.<br><br>கேள்வி I இற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன.<br><br>கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஆட்பதிவுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>முன்னேற்றம்: கேள்வி I - 90%<br><br>கேள்வி III மற்றும் IV - 25% |
| அரச உளவுச் சேவையின் முறைமை தன்னியக்க கருத்திட்டத்திற்கான கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல். | அரச உளவுச் சேவையிடம் உள்ள ஆவண அடிப்படையிலான கூருணர்வுமிக்க தகவல்களை எண்முறையாக்கல் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றது. இக்கருத்திட்டத்தின் முகாமையாளராக விளங்குவது ல.லொ.ரெ.லிமிரெட் கம்பெனியாகும். | வன்பொருள் தீர்வு வழங்குனரொரு வராக தெரிவுசெய்யும்பொருட்டு கேள்வி மதிப்பீடுசெய்தல் நிறைவு செய்யப்பட்டது.<br><br>கருத்திட்ட முன்னேற்றம்: 50% |

| | | |
|---|---|---|
| மூலோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு (மூ.பா.தொ.வ.) கருத்திட்டத்திற்கான பெறுகை மதியுரை சேவைகளை வழங்குதல். | மூ.பா.தொ.வ. கருத்திட்டம் ஐந்து கேள்விகளை உள்ளடக்கியதாகும்.<br>கேள்வி ஐ: உத்தேச நான்கு பாதங்களைக் கொண்ட சுய உதவி தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக இனங்காணப்பட்ட பதினொரு இடங்களில் துளையிடுதல் மூலமாக மண் பரிசோதனை மேற்கொள்ளலும் மண் பரிசோதனை அறிக்கைகளை சமர்ப்பித்தலும்.<br><br>கேள்வி II: கூரையுடனான இருபத்தி இரண்டு (22) மின்பிறப்பாக்கி கூறுகளை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் இயக்குதல்.<br><br>கேள்வி III: உபகரணக் கூடங்களுடனான ஐந்து (05) சுயஉதவி தொடர்பாடல் கோபுரங்களை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் இயக்குதல்.<br><br>கேள்வி IV: உபகரணக் கூடங்களுடனான ஆறு (06) சுயஉதவி தொடர்பாடல் கோபுரங்களை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் இயக்குதல்.<br><br>கேள்வி V: நுண்அலைவரிசை வானொலி தொடர்பாடல் முறைமையை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் இயக்குதல். | கேள்வி I சார்ந்த அனைத்துச் செயற்பாடுகளும் 2015 இல் நிறைவு செய்யப்பட்டது.<br>கேள்வி II நிறைவு செய்யப்பட்டது.<br><br>கேள்விகள் III, IV, V இற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக ஒப்படைக்கப்பட்டது.<br><br>கருத்திட்ட முன்னேற்றம் : கேள்விகள் III, IV, V இற்காக 60%. |
| பொலிசுத் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமை (பொ. த. தொ. மு.) | பொ. த. தொ. மு. தனிக் கேள்வியைக் கொண்டதாகும். | கூறுவிலை ஆவணம் தயாரிக்கப்பட்டு நிறைவுசெய்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு அதற்கான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது.<br>கருத்திட்ட முன்னேற்றம்: கருத்திட்டத்தின் 70% ஆகும். |
| நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கான (ந.அ.அ.) தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடல் (தொ.வ.தி.) தீர்வுகள் | ந.அ.அ. சபைக்கான தொ.வ.தி. தீர்வுகள் 3 கட்டங்களை உள்ளடக்கியது.<br>கட்டம் I: தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கமொன்றினை தயாரித்தல்.<br>கட்டம் II: விற்பனையாளரை மதிப்பீடுசெய்தலும் ஒப்பந்தம் பற்றி கலந்துரையாடுதலும்<br><br>கட்டம் III: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் வசதிகளை வழங்குதல் | கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் 2014 இல் நிறைவு செய்யப்பட்டது.<br><br>கட்டம் II நடைமுறையில் உள்ளது.<br><br>கருத்திட்ட முன்னேற்றம்: கருத்திட்டத்தின் 55% ஆகும் |

| | | |
|---|---|---|
| சிறிய ஆயுத உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல் | 7.65 x 39 மிமீ உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல் | கருத்திட்டத்தை மதிப்பீடு செய்தலும் அவசியப்பாடுகளை சேகரித்தலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| பீரங்கி தோட்டாக்களின் பித்தளை உறைகளை விற்பனை செய்தல் | இலங்கை இராணுவத்தின் வெற்றுப் பீரங்கி பித்தளை உறைகளை கையகற்றல். | கருத்திட்டத்தை மதிப்பீடு செய்தலும் அவசியப்பாடுகளை சேகரித்தலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| மிகையான இராணுவம்சார் உபகரணங்களை விற்பனை செய்தல். | மிகையான இராணுவம்சார் உபகரணங்களையும் ஆயுதங்களையும் கையகற்றல். | கருத்திட்டத்தை மதிப்பீடு செய்தலும் வழிமுறைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அங்கீகாரத்தின் பொருட்டு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| சமுத்திரஞ்சார் கண்காணிப்பு முறைமை | அகல்விரிவான ஒருங்கிணைந்த சமுத்திரஞ்சார் கண்காணிப்பு முறைமையொன்றை தாபித்தல். | ஆரம்பத் தகவல்களைத் திரட்டுதல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. வழங்கலாளர்களுடன் ஆரம்பத் தொடர்புகள் தொடங்கப்பட்டது. |
| சமுத்திரஞ்சார் விபத்துப் பாதுகாப்பு இணைப்பாக்க நிலையம் | சமுத்திரஞ்சார் விபத்து மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டு முறைமையொன்றினை தாபித்தல். | ஆரம்ப மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டது. நிதியைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| இராணுவத் தரத்திலான பாதணி உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல். | பாதுகாப்பு படையினருக்கான இராணுவத் தரத்திலான பாதணி உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல். | கருத்திட்ட சாத்தியவள அறிக்கை நிறைவுசெய்யப்பட்டது. |

### 21.3.3 கொள்திறன் அபிவிருத்தி

தொழிலுக்கு அவசியமான அத்தியாவசிய திறமைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில் புதிய விருத்திகள் பற்றிய விழிப்புணர்வுனைப் பெறும் பொருட்டு ஊழியர்களின் தொழில்சார் அபிவிருத்தியின்போது பதவியணிப் பயிற்சி முக்கிய அம்சமாக விளங்குகின்றது. கம்பெனி ஒட்டுமொத்த செயலாற்றுகையை மேம்படுத்த பயிற்சி மற்றும் அபிவிருத்தியை முக்கியமான உபாயமார்க்கமாக கருதுகின்றது. எனவே பதவியணி அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் அவசியமான பயிற்சி போதியளவில் வழங்கப்பட்டது.

அதற்கிணங்க சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் (2015 சனவரி 01 தொடக்கம் 2015 திசெம்பர் 31 வரை) பதவியணி அங்கத்தவர் 09 பேருக்கு 04 பிரதான துறைகளில் ல.லொ.ரெ.லிமிரெட்டினால் பயிற்சி வழங்கப்பட்டது.

### 21.4 2016 ஆம் ஆண்டில் முன்னெடுத்துச் செல்லப்பட உள்ள பணிகள்

#### பெறுகை உதவிகள் பிரிவு

2016 ஆம் அண்டிலும் அதற்குப் பின்னரும் நிறைவுசெய்வதற்கான நடுத்தர மற்றும் பாரிய அளவிலான இருபத்தெட்டு (28) பெறுகை வசதிகள் நிகழ்ச்சித்திட்டங்கள் கம்பெனி வசம் உள்ளன.

#### கருத்திட்டப் பிரிவு - 2016 வரை எடுத்துவந்த கருத்திட்டங்கள்

- தே.ஆ. ப. கருத்திட்டம்
- அ.உ.சே. கருத்திட்டம்
- %பா.தொ.வ கருத்திட்டம்
- பொ.த. தொ.மு. கருத்திட்டம்
- ந.அ.அ. மற்றும் தொ.வ.தி. கருத்திட்டம்
- சிறிய ஆயுத உற்பத்தி தொழிற்சாலை யொன்றை நிறுவுதல்
- பீரங்கி தோட்டா பித்தளை உறை விற்பனை
- மிகையான இராணுவஞ்சார் உபகரணங் களை விற்பனைசெய்தல்
- சமுத்திரஞ்சார் கண்காணிப்பு முறை மைக் கருத்திட்டம்
- சமுத்திரஞ்சார் விபத்துப் பாதுகாப்பு இணைப்பாக்க நிலையக் கருத்திட்டம்

- இராணுவத் தரத்திலான பாதணி உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல்.

## 21.5 சிக்கல்களும் சவால்களும்

### 21.5.1 சிக்கல்கள்

- பாதுகாப்பு படையினருக்கு வழங்கப் படுகின்ற சேவைகளுக்காக கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ளும் சவாலை ல.லொ. ரெ.லிமிரெட் தொடர்ந்தும் எதிர்நோக்கியது.
- பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்பின் கீழுள்ள பல்வேறு கருத்திட்டங்களை ஆரம்பிக்கையில் வழங்கிய சேவைகளுக் காக உறப்பட்ட செலவுகளுக்கான செலவுமீளப்புகளிலான அனாவசியமான தாமதங்கள்
- மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பண்டங் களுக்கான வெளிநாட்டு வழங்கலா ளர்களின் உள்நாட்டு முகவர்கள் தோன்றுதல்
- மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட இராணு வஞ்சார் பண்டங்களை வழங்குகையில் அரசாங்கத்தின் ஒருசில மட்டுப்பாடு களும் சர்வதேச பிரமாணங்களும்.

### 21.5.2 சவால்கள்

- துரிதமாக விருத்தியடைகின்ற தொழில் நுட்பம் காரணமாக பதவியணியின் திறன்களை இடையறாமல் தரமுயர்த்த வேண்டி ஏற்படுதல்.
- பாதுகாப்பு தொடர்பான சுதேச கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுதலும் அபிவிருத்தி செய்யப்படுத லும்.
- அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங் களுக்கான பெறுகை வசதிச் செயற்பாடுகளின் விரிவாக்கம்
- அரசாங்க நிறுவனங்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை அறிமுகஞ்செய்தல்.

## 21.6 எதிர்காலப் பயணப்பாதை

மத்தியகால ரீதியாக (2017 – 2019) நிறுவனத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளுக்கு ல.லொ.ரெ. கம்பெனி பாதுகாப்பு சார்ந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதை இலக்காகக் கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் போன்றே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டங்களை நிறைவேற்றுதலில் ஈடுபடு தலும் அடங்குகின்றது. அவை மத்தியில் தனித்துவமான கருத்திட்டங்களாவன:

- தேசிய சமுத்திரஞ்சார் கொள்திறன் விருத்தி முறைமைகளை அறிமுகஞ் செய்தல்
- பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப் புக்கான தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்
- தேசிய தகவல் முறைமைகளை முன்னேற்றுதல்
- செயற்பாடுகளை மீளத்திட்டமிடல் சார்ந்த கருத்திட்டங்களை ஆரம்பித்தலும் உள்ளக பாதுகாப்பு அவசியப்பாடு களுக்கான செலவினங்களில் புதுமுறை காணலும்
- பாதுகாப்புடன் தொடர்புடைய சிதேச கைத்தொழில்களை ஆரம்பித்தலும் அபிவிருத்தி செய்தலும்.
- தோட்டா தொழிற்சாலையொன்றை நிறுவுதல், உயர் பாதணி உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல் மற்றும் விமான சீர்காப்பு நிலையங்களை அமைத்தல் போன்ற அரச தனியார்துறை பங்காண்மைகளில் முதலீடுசெய்தல் எதிர்காலத்தில் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

# 22
# மாணவருக்கான படையணி

## 22.1 சாராம்சம்

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணி எந்நேரமும் மாணவச் சிப்பாய் அல்லது அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதையே பிரதான நோக்காக கொண்டு இயங்குகின்ற நிறுவன மாகும். மாணவச் சிப்பாய்கள் 14 - 20 வயதுக்குட் பட்ட அரச பாடசாலை மாணவர் களாகவும் அதிகாரிகள் அரச பாடசாலை ஆசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த பயிற்சியானது எதிர்கால தலைவர்களை உருவாக்குவதற்காகவே வழங்கப்படுகிறது. தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் ஊடாக முகாம்கள், பாடநெறிகள், மற்றும் பலவகையான செயற்பாடுகள் என்பன வருடந்தோறும் இடம்பெறுகிறத மாணவச்சிப்பாய் குழுக்கள் தரைப்படை, கடற்படை, வான்படை, பொலிஸ் மற்றும் இசை வாத்திய குழு என்பன ஆண், பெண் குழுக்களாக நாடு பூராகவும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது.

## 22.2 2015 ஆம் ஆண்டின் அடைவுகள்

### 22.2.1 மாணவச்சிப்பாய் பயிற்சிகள்

பாடசாலையில் மாணவச் சிப்பாய்களுக்கு அடிப்படை பயிற்சி

அடிப்படை பயிற்சிகள் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலையில் அளிக்கப்பட்டு மாணவச்சிப்பாய்களாக உருவாக்கப்படுகின்றனர். இது தொடர்ச்சியான கண்காணிப்புடனும் கரிசனையுடனும் தரத்துடனும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இது தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நிகழ்த்தப்படுகின்றது. தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் அதிகாரிகள் ஆசிரியர்களாகவும் அதிகாரிகளா கவும் கடமையை மேற்கொள்கின்றனர். பாடசாலை மட்ட பயிற்சியானது பகுதிநேர பயிற்றுவிப்பாளர்களினால் மேலும் மெருகூட்டப்படுகின்றது.

### படைப்பிரிவு கணிப்பீட்டு முகாம்

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் 38 படைப்பிரிவுகளை நாட்டிலுள்ள லெப்டினன்ட் கர்ணல் மற்றும் சிரேஷ்ட மேஜர் ஆகியோர் நிர்வகிக்கின்றனர். மாணவச்சிப்பாய்கள் 09 நாட்களை கொண்ட கணிப்பீட்டு முகாம்களில் பங்குகொள்கின்றனர். இறுதியாக கடற்படை கணிப்பீட்டு முகாம் திருகோணமலை கடற்படை சமுத்திரவியல் கல்லூரியிலும் வான்படை கணிப்பீட்டு முகாம் தியதலாவ பயிற்சி முகாமிலும் இடம்பெற்றது. 2016ஆம் ஆண்டு தொடக்கம் சகல கணிப்பீட்டு முகாம்களும் ரன்டெம்பே பயிற்சி முகாமில் இடம்பெற இருக்கின்றது.

பொலிஸ் கணிப்பீட்டு முகாம் - ஆண், பெண் – பயிற்சி முகாம்- ரன்டெம்பே





இசைவாத்திய கணிப்பீட்டு முகாம் - ஆண் பெண் – பயிற்சி முகாம்- ரன்டெம்பே





## Island wide Cadet Training was done in Under mentioned Platoons of Battalions

| S/N | Battalion | | Army | Navy | Air | Police | Band | | Total Platoons | Total Cadets |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | EASTERN | WESTERN | | |
| 1 | 1 NCC | Galle | 50 | 8 | 6 | 2 | 1 | 5 | 72 | 1800 |
| 2 | 2 NCC | Kandy | 30 | 5 | 5 | 4 | 9 | 3 | 56 | 1400 |
| 3 | 3 NCC | Colombo | 40 | 3 | 3 | 1 | 5 | 8 | 60 | 1500 |
| 4 | 4 NCC | Kurunagala | 63 | 5 | 7 | 5 | 8 | 3 | 91 | 2275 |
| 5 | 5 NCC | Anuradhapura | 48 | 3 | 3 | 2 | 1 | 3 | 60 | 1500 |
| 6 | 6 NCC | Badulla | 65 | 7 | 7 | 3 | 3 | 5 | 90 | 2250 |
| 7 | 7 NCC | Gampaha | 46 | 8 | 8 | 9 | 5 | 5 | 81 | 2025 |
| 8 | 8 NCC | Ratnapura | 29 | 2 | 3 | | 1 | 1 | 36 | 900 |
| 9 | 9 NCC | Kegalle | 43 | 7 | 7 | 1 | 3 | 3 | 64 | 1600 |
| 10 | 10 NCC | Tangalle | 32 | 5 | 3 | 2 | | 2 | 44 | 1100 |
| 11 | 11 NCC | Pollonnaruwa | 29 | 2 | 5 | 2 | 2 | | 40 | 1000 |
| 12 | 12 NCC | Kalutara | 34 | 6 | 4 | 1 | 4 | | 49 | 1225 |
| 13 | 13 NCC | Mathale | 30 | 5 | 2 | 2 | 8 | | 47 | 1175 |
| 14 | 14 NCC | Kuliyapitiya | 51 | 3 | 4 | | 2 | | 60 | 1500 |
| 15 | 15 NCC | Monaragala | 40 | 11 | 4 | 2 | | 3 | 60 | 1500 |
| 16 | 16 NCC | Matara | 41 | 4 | 2 | 3 | | 3 | 53 | 1325 |
| 17 | 17 NCC | Ampara | 60 | 12 | 4 | 1 | 1 | 3 | 81 | 2025 |
| 18 | 18 NCC | Nuwara Eliya | 46 | 6 | 4 | 3 | 1 | 1 | 61 | 1525 |
| 19 | 19 NCC | Pannipitiya | 30 | 4 | 2 | | 6 | 3 | 45 | 1125 |
| 20 | 20 NCC | Jaffna | 43 | 2 | 3 | 1 | | | 49 | 1225 |
| 21 | 21 NCC | Trincomalee | 35 | 2 | 2 | 2 | | | 41 | 1025 |
| 22 | 22 NCC | Vauniya | 18 | 8 | 4 | | | | 30 | 750 |
| 23 | 23 NCC | Kunadasale | 24 | 5 | 4 | | 3 | 3 | 39 | 975 |
| 24 | 24 NCC | Hambanthota | 20 | 5 | 3 | 1 | | | 29 | 725 |
| 25 | 25 NCC (G) | North Western | 9 | 4 | 2 | 4 | 2 | | 21 | 525 |
| 26 | 26 NCC (G) | Western | 30 | 12 | 10 | 5 | 2 | | 59 | 1475 |
| 27 | 27 NCC (G) | Sourthern | 35 | 15 | 12 | 12 | 1 | 3 | 78 | 1950 |
| 28 | 28 NCC (G) | Central | 49 | 25 | 15 | 6 | 5 | 5 | 105 | 2625 |
| 29 | 29 NCC (G) | Sabaragamuwa | 40 | 15 | 15 | 10 | 2 | 8 | 90 | 2250 |
| 30 | 30 NCC (G) | North | | | | | | | 0 | 0 |
| 31 | 31 NCC (G) | Estern | 10 | 2 | 2 | 2 | | | 16 | 400 |
| 32 | 32 NCC (G) | North Central | 13 | 8 | 9 | 4 | | | 34 | 850 |
| 33 | 33 NCC (G) | Uva | 36 | 18 | 15 | 13 | 4 | 3 | 89 | 2225 |
| 34 | 34 NCC | Mullatiev | 4 | | | | | | 4 | 100 |
| 35 | 35 NCC | Puttalama | | | | | | | 0 | 0 |
| 36 | 36 NCC | Mannar | | | | | | | 0 | 0 |
| 37 | 37 NCC | Kilinochchi | | | | | | | 0 | 0 |
| 38 | 38 NCC | Batticlo | | | | | | | 0 | 0 |
| **Total** | | | | | | | | | **1834** | **45850** |

### NUMBER OF TOTAL CADETS


| S/N | | Army | Navy | Air | Police | Band | | Total Platoons | Total Cadets |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | EASTERN | WESTERN | | |
| 1 | Boys Cadets | 23775 | 3200 | 2475 | 1175 | 1475 | 1450 | 1342 | 33550 |
| 2 | Girls Cadets | 5550 | 2475 | 2000 | 1400 | 400 | 475 | 492 | 12300 |
| Total Cadets | | **29325** | **5675** | **4475** | **2575** | **1875** | **1925** | **1834** | **45850** |

பயிற்சி முகாமில் பங்குபற்றிய மாணவச்சிப்பாய்

வருடாந்த ஆண் மாணவச்சிப்பாய் பங்குபற்றல் - 2015

| வகை | ஆண்கள் | |
|---|---|---|
| | குழுக் கள் | மாணவச் சிப்பாய்கள் |
| தரைப்படை | 883 | 22,075 |
| கடற்படை | 95 | 2,375 |
| வான்படை | 98 | 2,450 |
| பொலிஸ் | 48 | 1,200 |
| இசைவாத்தியக் குழு | 79 | 1,975 |
| மொத்தம் | 1,203 | 30,075 |


மொத்த மாணவச்சிப்பாய் குழுக்கள் □ ஆண்கள் (குழு அடிப்படையில்)




வருடாந்த பெண் மாணவச்சிப்பாய் பங்குபற்றல் -- 2015

| வகை | ஆண்கள் | |
|---|---|---|
| | குழுக் கள் | மாணவச் சிப்பாய்கள் |
| தரைப்படை | 47 | 2022 |
| கடற்படை | 55 | 1404 |
| வான்படை | 37 | 942 |
| பொலிஸ் | 17 | 435 |
| இசைவாத்தியக் குழு | 36 | 900 |
| மொத்தம் | 192 | 5703 |

மொத்த மாணவச்சிப்பாய் குழுக்கள் - பெண்கள் (குழு அடிப்படையில்)




கணிப்பீடு முகாம்களில் தெரிவு செய்யப்பட்ட உப குழுக்கள் ஹர்மன் லூஸ் மற்றும் டீ சொய்சா வெற்றிக் கிண்ண முகாமிற்குத் தெரிவு செய்யப்படுவர்.

ஹர்மன் லூஸ் வெற்றிக்கிண்ண முகாம்

ஹர்மன் லூஸ் வெற்றிக்கிண்ணம் ரன்டெம்பே பயிற்சி முகாமில் இடம்பெற்றது. ஹர்மன் லூஸ் வெற்றிக்கிண்ணம் ஆண் மாணவச் சிப்பாய்களு க்காகவும் டீ சொய்சா வெற்றிக்கிண்ணம் பெண் மாணவச்சிப்பாய்களுக்காகவும் சிறந்த இசை வாத்திய குழுவுக்காக நந்தசேன லபுதலே ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்படுகிறது. இம்மூன்றிலும் வெற்றியீட்டிய உபகுழுக்கள் ஜனாதிபதி பட்ட உபகுழுவாக பெயர்சூட்டப்படுவர்.

ஹர்மன் லூஸ்





டீ செய்சா





நந்தசேன லபுதலே ஞபாகார்த வெற்றிக்கிண்ணம் (சிறந்த இசைவாத்திய குழு)





### 22.2.2 வெளிநாட்டு பிரதிநிதிகள் குழு

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் தலைமையகமும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சினதும் அழைப்பின் பேரில் சார்க் நாடுகளின் தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் மாணவச்சிப்பாய்களும் அதிகாரிகளும் எமது ஹர்மன் லூஸ், டீ சொய்சா வெற்றிக்கிண்ண போட்டிகளை கண்டுகளிக்க வருடந்தோறும் வருகை தருகின்றனர்.

பிரதிநிதிகள் குழு பங்குபற்றல்கள் - 2015

| நாடு | பணிப்பாளர் | | | அதிகாரிகள் | | மாணவச் சிப்பாய்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பணிப்பாளர் | ஞூழு வழ னுபு | | | | | | |
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| பங்களாதேஷ் | 1 | 1 | - | 1 | 1 | 5 | 5 | 14 |
| இந்தியா | - | - | - | 1 | 1 | 6 | 6 | 14 |
| மாலைத்தீவு | - | - | - | 1 | 1 | 5 | 5 | 12 |
| நேபாளம் | 1 | 1 | - | 1 | 1 | 4 | 4 | 13 |
| பாகிஸ்தான் | 1 | 1 | - | 2 | - | 15 | - | 19 |
| சிங்கப்பூர் | - | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | 3 | 3 | - | 6 | 4 | 35 | 20 | 71 |
| | 3 | 3 | | 10 | | 55 | | |
| | 71 | | | | | | | |



### 22.2.3 மாணவச்சிப்பாய்களுக்கு வழங்கப்படுகின்ற பாடநெறிகள்

#### இசைவாத்திய NCO's பாடநெறி

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் இசைவாத்திய குழுக்களின் தரத்தினை உயர்த்துவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட பியுகள் வாத்திய ட்ரம் மேஜர் பாடநெறியாகும். முழுமையாக 611 வாத்திய பயிலுனர்கள் பங்குகொண்டனர்.

#### மாணவச் சிப்பாய்களுக்கான கனிஷ்ட தலைமைத்துவ பாடநெறி

ஒவ்வொரு இளைஞர் யுவதியினதும் ஆராயும் திறனே வாழ்வின் உயிர் நாடியாகும். இப்பயிற்சிநெறியானது மாணவச்சிப்பாய்கள் படையணியின் கோப்ரல், லான்ஸ் கோப்ரல் என இருவர் பங்குகொள்வர். 2 ஒ மாணவச்சிப்பாய்கள் எனும் வீதம் ஒரு உபகுழுவிலிருந்து தெரிவுசெய்யப்படுவர். இது 09 நாட்களை கொண்ட தலைமைத்துவமும் நேர்ச்சிந்தனையையும் வளர்க்கும் பாடநேறியாகும். இதில் 764 மாணவச்சிப்பாய்கள் பங்குகொண்டனர். அடுத்து வரும் உபகுழு சார்ஜன்ட் இப்பாடநெறியிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

#### மாணவச்சிப்பாய்களுக்கான உயர்தர பாடநெறி

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் நோக்கின் அடிப்படையில் வளவாளர்களையும், திறன் வாய்ந்த தலைவர்களையும், ஒன்றிணைந்து செயற்படக்கூடியவர்களையும் தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி விரிந்த, பரந்தளவிலான ஆராய்வு திறன் கொண்ட நிகழ்ச்சிகளையும் செயற்பாடுகளையும் சிரேஷ்ட ஊேழு வழங்குகின்றது. இங்கு சிரேஷ்ட ஊேழுகளுக்கான பதவிஉயர்வுகள் வழங்கப்படுகிறது. வெளிநாட்டு பிரயாணத்திற்கான தெரிவுகளும் இங்கு இடம்பெறுகின்றது.

உயர்தர பாடநெறியானது, மாணவச்சிப்பாய் களுக்கு தலைமைத்துவ பண்புகளை விருத்திசெய்வதனூடும் தன்னம்பிக்கை விருத்தி அனுபவங்களின் ஊடாகவும் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 331 மாணவச்சிப்பாய்கள் பங்குகொண்டனர்.



பாடநெறிகளில் பங்குபற்றிய மாணவச் சிப்பாய்கள் - 2015

| பாநெறி | பங்குபற்றிய மாணவச் சிப்பாய்களின் எண்ணிக்கை |
|---|---|
| இசைவாத்திய NCO பாடநெறி | 611 |
| மாணவச் சிப்பாய்களுக்கான கனிஷ்ட பாடநெறி | 764 |
| உயர் பாடநெறி | 331 |
| மொத்தம் | 1,803 |

வெளிநாட்டு பயணம்

வெளிநாட்டு பார்வையினையையும், புரிந்துனர்வு களையும் விழிப்புணர்வுகளையும் அதிகரிக்கும் வண்ணம், தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சிகள் இடம்பெறுகிறது. இலங்கை தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் பிரதிநிதிகள் குழுக்கள் கீழ் வரும் 7 நாடுகளுக்கு விஜயம் செய்கின்றனர்.

22.6 வெளிநாட்டு பயணத்தில் பங்குபற்றிய இலங்கை மாணவச்சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகள் - 2015

| நாடு | நிகழ்வு | | | | |
|---|---|---|---|---|---|
| இந்தியா | சிவாஜி ட்ரைல் ட்ரக் முகாம் | - | 1 | 6 | 7 |
| இந்தியா | குடியரசுத் தினம் | 1 | 2 | 12 | 15 |
| பங்களா தேஷ் | வெற்றி தின அணிவகுப்பு | 1 | 2 | 10 | 13 |
| நேபாளம் | இராணுவ தின அணிவகுப்பு | 1 | 1 | 4 | 6 |
| மாலைத் தீவு | MNCC முகாம் | - | 1 | 6 | 7 |
| பாகிஸ் தான் | உத்தியோகபூர்வ விஜயம் | 1 | 3 | 12 | 16 |
| மொத்தம் | | 4 | 10 | 50 | 64 |

## 22.3 அதிகாரிகள் பயிற்சி

### பயிலுனர் அதிகாரி பயிற்சி நெறி

பயிலுனர் அதிகாரி பயிற்சிநெறி அரச ஆசிரியர்களில் தெரிவுசெய்யப்படுவர். 45 நாட்களை கொண்ட இந்த பயிற்சி நெறி 29 பயிலுனர்களுடன் கடந்த 05.08.2015 தொடக்கம் 19.09.2015 வரை ரன்டெம்பே பயிற்சி முகாமில் இடம்பெற்றது.

### அதிகாரிகளுக்கான பயிற்சி நெறி

இது அதிகாரிகளை மெருகூட்டுவதற்காகவும் பதவி உயர்வுகளுக்காகவும் நடாத்தப்படுகிறது. குறுகிய கால பதவி உயர்வு பயிற்சி நெறியும் அதிகாரிகளுக்கான பயிற்சிநெறிக்கு சமூகமளிக்காதவர்களுக்காக இம்முறை நடாத்தப்பட்டது. முதன்மை பயிற்சிநெறியில் 215 அதிகாரிகளும் குறுங்கால பயிற்சிநெறியில் 82 அதிகாரிகளும் பங்குகொண்டனர்.

### இசைவாத்திய அதிகாரிகளுக்கான பாடநெறி

இவ்விசேட பாடநெறியானது இசைவாத்திய உபகுழுக்களுக்கு கட்டளை இடும் அதிகாரிகளுக்கான பாடநெறியாகும். இப்பயிற்சிநெறியானது அவ்வதிகாரிகளின் துறைசார் அறிவு விருத்தியினை ஏற்படுத்தவும் நிர்வாக, பயிற்சி இயலுமைகளையும், இசை அறிவையும் விருத்திசெய்கின்றது.

பாடநெறிகளில் பங்குபற்றிய அதிகாரிகள் – 2015

| பாடநெறி | பங்குபற்றிய அதிகாரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பயிலுநர் அதிகாரி பயிற்சிநெறி | 29 |
| அதிகாரிகளுக்கான பயிற்சிநெறி | 297 |
| இசைவாத்திய அதிகாரிகளுக்கான பாடநெறி | 07 |
| மொத்தம் | 333 |






## 22.4 2015 ஆண்டுக்கான செயற்பாடுகளின் பகுப்பாய்வும், மதிப்பீடும்

### 22.4.1 இலக்குகளின் அடைவு / நிர்வாகம் மற்றும் பொருட்கள் பற்றிய விபரங்கள்


#### படைப்பிரிவுகளை ஸ்தாபித்தல்

படைப்பிரிவுகளை விரிவுபடுத்தும் முகமாக ஆண்கள் மாணவச்சிப்பாய்கள் படைப்பிரிவுகளாக புத்தளம் கிளிநொச்சி மன்னார் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 2015 ஆம் ஆண்டிலிருந்த 34 படைப்பிரிவுக்கு மேலதிகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

படைப்பிரிவுகளின் விரிவாக்கம்




**படைப்பிரிவு விஸ்தரிப்பு (ஆண்கள்)**




1 NCC - காலி
2 NCC - கண்டி
3 NCC - கொழும்பு
4 NCC - குருநாகல்
5 NCC - அநுராதபுரம்
6 NCC - பதுளை
7 NCC - கம்பஹா
8 NCC - இரத்தினபுரி
9 NCC - கேகாலை
10 NCC - தங்காலை
11 NCC - பொலனறுவை
12 NCC - களுத்துறை
13 NCC - மாத்தளை
14 NCC - குளியாபிட்டி
15 NCC - மொனராகலை
16 NCC - மாத்தறை
17NCC - அம்பாறை
18 NCC - நுவரெலியா
19 NCC - பன்னிப்பிட்டி
20 NCC - யாழ்ப்பாணம்
21 NCC - திருகோணமலை
22 NCC - வவுனியா
23 NCC - குண்டசாலை
24 NCC - ஹம்பாந்தோட்டை
34 NCC - முல்லைத்தீவு
35 NCC - புத்தளம்
36 NCC - மன்னார்
37 NCC - கிளிநொச்சி
38 NCC - மட்டக்களப்பு


**படைப்பிரிவு விஸ்தரிப்பு (பெண்கள்)**




25 NCC - வடமேல் மாகாணம்
26 NCC - மேல் மாகாணம்
27 NCC - கிழக்கு மாகாணம்
28 NCC - மத்திய மாகாணம்
29 NCC - சபரகமுவ மாகாணம்
30 NCC - வட மாகாணம்
31 NCC - மேல் மாகாணம்
32 NCC - வடமேல் மாகாணம்
33 NCC - ஊவா மாகாணம்

ஒழுங்கமைப்பிற்கான நிதி ஒதுக்கீடு

| வருடம் | Recurrent | Capital |
|---|---|---|
| **2008** | 260,069,000.00 | 56,823,000.00 |
| **2009** | 197,315,000.00 | 22,500,000.00 |
| **2010** | 225,100,000.00 | 22,500,000.00 |
| **2011** | 260,330,000.00 | 10,954,000.00 |
| **2012** | 229,935,000.00 | 11,600,000.00 |
| **2013** | 367,030,000.00 | 14,150,000.00 |
| **2014** | 381,000,000.00 | 15,100,000.00 |
| **2015** | 289,380,000.00 | 28,300,000.00 |




## 22.5 2015 ஆம் ஆண்டின் நிர்மாணப்பணிகள்

பல்வேறு கட்டுமானங்களும் புனர் நிர்மாணப்பணிகளும் புதிய செயற்திட்டங்களும் பயிற்சி நிகழ்வுகளை மேலும் இலகுபடுத்துவதற்காக செயற்படுத்தப்பட்டது.

.

- பயிற்சி முகாமில் நினைவுச்சின்னம் அமைக்கப் பட்டது. - ரன்டெம்பே
- பயிற்சி முகாமில் சார்ஜன்ட் உணவகம் அமைக் கப்பட்டது. - ரன்டெம்பே
- பயிற்சி முகாமில் கோப்ரல் கழகம் அமைக் கப்பட்டது. - ரன்டெம்பே

# 23
# ரணவிரு சேவா அதிகாரசபை


## 23.1 குறிக்கோள்

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களின் நலன்பேணல் மற்றும் அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல் தொடர்பாக ஏற்பாடுகளைத் திட்டமிடல்.
- செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு வீடு வழங்கல் மற்றும் அவை தொடர்பாக உதவி புரிதல்
- செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு மருத்துவ வசதிளை வழங்கல் மற்றும் அவை தொடர்பாக உதவி புரிதல்
- செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு புலமைப் பரிசில் மற்றும் பிற உதவிகளையும் நல்கி, கல்வி தொடர்பாக வசதிகளை வழங்கல் மற்றும் அவை தொடர்பாக உதவி புரிதல்
- செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு பயனுறுதி வாய்ந்த சேமலாப பாதுகாப்புடன் கூடிய உதவிகளை வழங்குதல்
- செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கு சேமலாப உதவிகளை வழங்கும் பொருட்டு தொழிநுட்ப மற்றும் விவசாய அல்லது வர்த்தக முயற்சியாண்மை தாபிப்பு மற்றும் அதிகார சபையின் தொழிற்கூறுகளை நிறைவேற்றும் பொருட்டு போதிய நலன்பயக்கும் அனைத்துவித நடவடிக்கைகளையும் செயற்படுத்தல்

## 23.2 உடல், உள வலுவூட்டல் பிரிவு


முப்படைகளிலும் பொலிஸ் சேவையிலும் பணிபுரிகின்ற அலுவலர்கள், தாய் நாட்டின் பாதுகாப்பிற்காக அங்கவீனமுற்றவர்களாக மன அழுத்தங்களுக்குட்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் தமது அன்புக்குரியவர்களை இழந்து நிர்க்கதியான நெருங்கிய உறவினர்கள் ஆகியோரை அணுகி அவர்களுக்கு ஆறுதலளித்து,பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தி தன்னம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றக்கூடியவர்களாக அவர்களை மாற்றிய மைப்பதற்காக இப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

| செயற்திட்டம் | 2013 மேம் பாடு | 2014 மேம் பாடு | 2013 மேம் பாடு |
|---|---|---|---|
| ரணவிரு மருத்துவ சிகிச்சை | 07 | 03 | 03 |
| கண் சிகிச்சை | 16 | 09 | - |
| மருத்துவ உதவி வழங்கல் | 91 | 93 | 72 |
| மருத்துவ சலுகை கடன் வழங்கல் | 04 | 14 | 09 |
| உளவியல் செயமலமர்வுகள் (குழும உளவளத்துணை) | 07 | 04 | 05 |
| அங்கவீனமுற்ற வீரர்களுக்கு பயிற்சி செயலமர்வுகள் | | 02 | 0 |
| சுகாதார விருத்தி செயலமர்வுகள் | - | - | 03 |



அங்கவீனமுற்றோர்களுக்கான நலன்புரிச் செயற்திட்டங்கள்

| செயற்றிட்டம் | 2014 மேம் பாடு | 2015 மேம் பாடு |
|---|---|---|
| முச்சக்கர வண்டி வழங்குதல் | 52 | 38 |
| குளியலறை உதவி வழங்கல் - முதலாவது தவணை | 175 | 170 |
| குளியலறை உதவி வழங்கல் - இரண்டாவது தவணை | 166 | 110 |
| அங்கவீனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்கல் - செயற்கைக் கால் | 109 | 465 |
| சக்கர நாட்காலி - சாதாரணம் | 50 | 220 |
| சக்கர நாட்காலி - கொமட் | 50 | 10 |
| டைசிகல் | | 3 |
| கைப்பிடி | 1000 | 800 |
| ஊன்றுகோல் | - | 20 |
| சிறுநீர்ப் பை | 03 | 3 |
| அவசர நிலைமைகளின் போது நிதியுதவி வழங்குதல் | 50 | 72 |







23.2.2 சமூக மற்றும் கலாசார பிரிவு

நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் மற்றும் செயற்பாட்டு அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் ஆகியோரை மாதாந்தம் ஒன்றிணைத்து அவர்களிடையே அன்னியோன்ய உறவுகளையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துமுகமாக ரணவிரு அமைப்புக்களின் சுயேட்சை சங்கங்களின் மூலம் அந்தந்த பிரதேசங்களிலுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்களை ஒன்றிணைத்து அதனை தொடர்ந்து பேணும் பொருட்டு இப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.


| செயற்திட்டம் | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|
| மாவட்ட ரீதியான விழிப்பூட்டல் | 32 | 26 |
| அமைப்புக்களின் கோர்வை நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 | 33 |
| அங்கத்துவத்தை பேணல் மற்றும் அமைப்புக்களின் பணிகளை செவ்வனே நிறைவேற்றுதல் | 06 | 06 |
| கள ஆய்வு மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு | 15 | - |




கிராமிய செயற்திட்டங்கள்

"மாதிரி ரணவிரு கிராமம்" இதனூடாக நிர்மாணிக்கப்படும். ரணவிரு கிராமங்களில் வசிக்கின்ற இராணுவ வீரர்களினதும், சமுகத்தினதும் உளநல மற்றும் பௌதீக அபிவிருத்திகளை தோற்றுவித்தல் மற்றும் சமாதானம், ஐக்கியம் என்பனவற்றை விருத்தி செய்வதற்கான பணிகளும் இதனூடாக முன்னெடுக்கப்படும்.


| செயற்திட்டம் | 2013 மேம் பாடு | 2014 மேம் பாடு | 2015 மேம் பாடு |
|---|---|---|---|
| உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | 08 | 07 | 03 |
| ரணவிரு கிராம தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 01 | 03 | 09 |




### 23.2.3 இராணுவத்தினருக்கான அபிமானம் மற்றும் கௌரவப்படுத்தல் பிரிவு

சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்து, அதனைப் பாதுகாத்து நிறுகின்ற இராணுவ வீரர்களின் திருநாமம் எமது சமுகத்தில் வேரூன்றிப் பதியும் வண்ணம் மற்றும் அவர்களை கௌரவப்படுத்தும் பொருட்டு தயாரிக்கப்பட்டதே இச் செயற்திட்டமாகும்.


| செயற்திட்டம் | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|
| தேசிய ரணவிரு தின விழா | 01 | 01 |
| மாகாண ரணிரு மாநாடு | 09 | 08 |
| பொது நலன்புரி (பாடசாலை, காப்புறுதி, ஆசிரிய இடமாற்றம், நீர் மின்சாரம், பாதை தொழில் முன்னுரிமையில் வழங்குதல் | 234 | 811 |
| மைலப்பிட்டி பூங்காவின் பேணல் பணி | ஆண்டுக் கான பேணல் பணிகள் | ஆண்டுக் கான பேணல் பணிகள் |




### காணி செயற்திட்டம்

ரணவிரு சேவா அதிகார சபையினால், இராணுவ வீரர்கள் மற்றும் அக் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து, வசிப்பதற்குத் தகுந்த காணிகளை வழங்குதல் போன்ற தொழிற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


| செயற்றிட்டம் | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|
| காணிக் கச்சேரி நடாத்தல் | 02 | 02 |
| காணி கண்காணிப்புப் பணிகள் | 01 | - |
| காணி அனுமதிப் பத்திரங்கள் | 03 | 83 |




### 23.2.4 கல்விசார் திறன்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரிவு

எமது தேசத்தின், மக்களின் பாதுகாப்பிற்காக உயிர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் தற்போது கடமையாற்றும் இராணுவத்தினரின் குடுபத்தவர்களின் திறமைகள், திறன்கள் மற்றும் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப பல்வேறுபட்ட துறைகளில் நடைமுறைக் கோட்பாட்டு அறிவினைப் பெற்றுக்கொடுத்து, இயலுமைகளை விருத்தி செய்து அவர்களிடம் உழைக்கும் ஆற்றலினை கட்டியெழுப்புவது இப்பிரிவின் மேற்கொள்ளப்படுகின்றது.


| செயற்திட்டம் | 2013 மேம் பாடு | 2014 மேம் பாடு | 2015 மேம் பாடு |
|---|---|---|---|
| கல்வி மற்றும் தொழில்சார் பாடநெறிகளுக்கு அரைவாசி புலமைப்பரிசில் வழங்குதல் | | 17 | 34 |
| கல்விசார் வெளிநாட்டுப் பிரயாணங் களுக்கான கடன் வழங்கல் | 02 | 05 | 03 |
| சுயதொழில் உதவி வழங்கல் | 40 | 65 | 65 |
| சுயதொழில் கடன் வழங்கல் | 28 | 22 | 26 |




23.2.5 வீடமைப்புக் கடன் திட்டம்

அமைப்புக்களின் அங்கத்துவம் பெறுகின்ற ரணவிரு சேவா அதிகார சபையின் இலக்குக் குழு அங்கத்தவர்களுக்கு வீடமைப்புத் தேவை காரணமாக சலுகை அடிப்படையில் ரூபா 300,000 உச்சளவு கடன் இதன் கீழ் வழங்கப்படுகின்றது.


| செயற்றிட்டம் | 2013 மேம்பாடு | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|---|
| அமைப்புக்களுக்கான வீடமைப்புக் கடன் | 250 | 160 | 203 |
| கிராமிய வீடமைப்புக் கடன் | 29 | 23 | 15 |




23.2.6 கல்விசார் புலமைப் பரிசில் திட்டம

தேசத்தினதும் மக்களினதும் பாதுகாப்பிற்காக செயற்பாட்டுச் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் உயிர்நீத்த, காணாமற்போன, அங்கவீனமுற்று ஓய்வு பெறநேர்ந்த மற்றும் தற்போது சேவையாற்றும் இராணுவத்தினரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையினை உயர் கல்வி வரை சிறப்பாக முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் ரணவிரு சேவா அதிகார சபையினால் கல்விசார் புலமைப் பரிசில் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

| செயற்திட்டம் | 2013 மேம் பாடு | 2014 மேம் பாடு | 2015 மேம் பாடு |
|---|---|---|---|
| ரணவிரு தூ தரு சேமிப்பு முதலீட்டுப் புலமைப்பரிசில் முறைமை | 426 | 443 | 520 |
| கா. பொ. த (சா.்.த) மற்றும் க.பொ.த. (உ/த) | 118 | 313 | 353 |
| உயர் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டம் | | 53 | 46 |
| புலமைப்பரிசில் மற்றும் அதனுடன் தொடர்புடைய விழா | 05 | 06 | 10 |









### 23.2.7 மாபிய கெப்பகரு - செயற்திட்டம்

தேசத்தின் ஒற்றுமையினைப் பாதுகாக்கும் வகையில் முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் கடமையாற்றும் போது உயிர்நீத்த, காணாமற்போன, அங்கவீனமுற்றவர்களாக இருக்கும் இராணுவத்தினர்கள் மற்றும் அக்குடும்ப அங்கத்தவர்களை உளரீதியாகவும், சமூக ரீதியாக வலுவூட்டிஅபிமானத்துடனான தொலைநோக்கினைக் கொண்ட சமூகமாக கட்டியெழுப்பும் நோக்குடன்பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் இராணுவத்தினரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைளுக்கான நன்கொடைகள் தேசிய மற்றும் சர்வதேச நன்கொடையாளர்களின் அனுசரணையின் கீழ் வழங்கப்படுகின்றது.


| செயற்றிட்டம் | 2013 மேம்பாடு | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|---|
| அதிகார சபையினால் வழங்கப்படும் புலமைப் பரிசில் | 2525 | 654 | 8546 |
| அதிகார சபையினால் புதிதாக வழங்கப்படும் புல. பரிசில் | 47 | 50 | 44 |
| நன்கொடையாளர்களினால் வழங்கப்படும் புல. பரிசில் | 1107 | 107 | 1813 |
| நன்கொடையாளர்களினால் புதிதாக வழங்கப்படும் பு. ப. | 08 | 104 | 102 |




### 23.2. 8 வீடமைப்பு நிதியுதவி கருத்திட்டம்

இலங்கையின் இறையாண்மையினைக் காக்கும் வகையில் செயற்பாடுகளில் தங்களது உன்னத உயிர்களைத் துறந்த அத்தோடு காணாமற் சென்ற இராணுவத்தினரின் குடும்பங்கள் மற்றும் செயற்பாடுகளில் அர்ப்பணத்தோடு கடமையாற்றி அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் அங்கவீனமுற்று சேவையில் கடமையாற்றும் மற்றும் தற்போது சேவையில் கடமையாற்றும் முப்படைகள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக வீட்டுத் தேவையினை நிவர்த்தி செய்து அவ்விராணுவத்தினர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சமூக ரீதியாக மற்றும் மனப்பாங்கு ரீதியாகவும் பலப்படுத்துவது இதன் மூலம் இடம்பெறுகின்றது.


| செயற்றிட்டம் | 2013 மேம்பாடு | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|---|
| வீடமைப்பு உதவியளிப்புச் செயற்திட்ட புதிய வீடமைப்பு உதவி | 53 | 100 | 96 |
| 2 ஆவது தவணைக் கொடுப்பனவு | | - | 72 |




### 23.2.9 "மாபிய சுரெக்கும்" நிகழ்ச்சித்திட்டம்

தேசத்தின் பாதுகாப்பினை காப்பாற்றும் வகையில் தன்னுயிர்களை தியாகம் செய்த மற்றும செயற்பாடுகளின் போது காணாமற் சென்ற வீரோதார இராணுவத்தினரின் சில பெற்றோர்கள் பொருளாதார மற்றும் மனோநிலை ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் மத்திய வயதில் பொருளாதார மற்றும் மனோநிலை ரீதியாக திருப்தியோடு வாழ்க்கையினை கழிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித் திட்டமாகும்.

| செயற்றிட்டம் | 2013 மேம்பாடு | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|---|
| மா பிய ரெக்கவரன கணக்குப் புத்தகங்களை வழங்குதல் | 1355 | 1425 | 1428 |




## 23.1.10 தரவு முறைமை பிரிவு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த,காணாமற்போன மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த முப்படையிலும், பொலிஸ்சேவையிலும் பணியாற்றிய இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் கீழ் தங்கி வாழ்கின்றவர்கள் உள்ளடங்கிய தரவு முறைமையொன்று தயாரிக்கப்படுகின்றது

| அங்கவீனமுற்ற, ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுக்கு நிதி வழங்கும் செயற்திட்டம் | 2013 மேம்பாடு | 2014 மேம்பாடு | 2015 மேம்பாடு |
|---|---|---|---|
| தரவு முறைமை தயாரித்தல் | | 80% | 100% |
| மா பிய ரெக்கவரன கணக்குப் புத்தகங்களை வழங்குதல் | | 2614 | 28394 |





## 23.3 தற்காலிக மதிப்பீடு

2015 ஆண்டு தொடர்பாக ரணவிரு சேவா அதிகார சபையினால் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்களை இனங்கண்ட போதிலும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது ஆண்டின் ஆரம்பத்தில் தெரியவந்ததுடன், அதற்கமைய 2015 ஆண்டில் பணிப்பாளர் சபை நியமனம் 2015 ஏப்ரல் மாதம் இடம்பெறும் வரையில், பணித்திட்டமிடல் தொடர்பாக வேனும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அதற்கமைய மொத்தமாக நோக்கும் போது, முதலாவது காலாண்டுத் திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன், அதற்கான தீர்வாக துரித செயன்முறை ஒன்றின் கீழ் சகல செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக அலுவலர் ஆகிய பல அத்தியாவசிய பதவி வெற்றிடங்கள் தொடர்பாக 2013 ஆண்டில் அங்கீகாரமளிக்கப்பட்ட புதிய ஆளணியினருக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறாமை காரணமாக பணிப்பாளர் பதவியின் கடமைகளையும், கணக்காளர் பதவியின் கடமைகளையும் பாதுகாப்பு அமைச்சின் கணக்காளரினால் பதில் கடமையாற்றுவதற்கும், நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்கும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கும்.

இதற்கு மேலதிகமாக, சகல செயற்திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும் அரசாங்கத்தின் புதிய தொலைநோக்கிற்கு அமைய தயாரித்துக் கொள்வது அத்தியாவசிய விடயமாக இருந்தமையினால், அதனை ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்வதற்கும், அது வரை நவீனமயப்படுத்த வேண்டியிருந்த செயற்திட்டங்கள், நலன்புரிப் பணிகள் தொடர்பாக கிடைத்த விண்ணப்பங்களை மாத்திரம் கவனத்திற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற் கும் தீர்மானித்து வருடாந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், ஒட்டு மொத்த மாகவும், ஒப்பீட்டு ரீதியாகவும் அதியுயர் மட்ட மேம்பாட்டினை அதிகார சபைக்கு அடைந் திருந்தது.

## 23.4 கற்றுக்கொண்ட பாடங்கள்

- வீடமைப்பு, காணி வழங்கல், அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் ஆகியனவற்றை முதன்மையாக கொண்ட ஸ்திரத் தன்மையுடன் கூடிய இலக்குகளுடன் 3 ஆண்டுகளுள் அத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வது காலோசிதமானது என்பது கண்டறியப்பட்டது.

- 60% இற்கு மேற்பட்ட இலக்குக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் “காந்தாவ” (மகளிர்) பொருளாதார, சமூக, கலாசார மற்றும் ஆன்மீக ரீதியாக முதன்மைப் பணியாக வலுவூட்டப்பட வேண்டும் என இனங்காணப்பட்டது.

- ரணவிரு சேவா அதிகார சபை சிக்கனமாகவும், அதிகார சபையின் வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு அதிக அவதானம் செலுத்தும்படி முடியுமானளவில் அதாவது, வெளியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் ஆட்களின் பங்களிப்பினை அதிகார சபைக்கு பெற்றுக் கொள்வதற்கும் வலுயுறுத்தப்பட்டது.



16-CM 22794

- ரணவிரு அதிகார சபை இது வரை காலமும் ஈடுபடாதிருந்த போதிலும் செயற்படுத்த வேண்டுமெனும் நோக்கில் ரணவிரு முயற்சியாண்மை தாபித்தல் மற்றும் இராணுவ வீரர்களிடையே முதலீடு செய்வதற்கான விருப்பத்தினை ஏற்படுத்துவதற்கு இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- இராணு வீரர்கள் மற்றும் ரணவிரு சமூகத்திற்கு, சமூக ரீதியான அவதானம், ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக கௌரவ பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் எண்ணக்கருவுக்கு அமைய இராணுவ வீரர்கள் மற்றும் கிட்டிய உறவினர்களுக்கு "விருசர" வரப்பிரசாத அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது காலோசிதமானது.

## 23.5 பிரச்சினைகளும் சவால்களும்

- ஆளணியினர் மறுசீரமைக்கப்படாமை மற்றும் ஒட்டுமொத்த நிர்வாக மற்றும் தாபன திட்டமிடல் வலுவிழந்துள்ளமை என்பன பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளதுடன், அதனை ஒழுங்குறச் செய்தல்

- ஸ்திரத்தன்மை வாய்ந்த இணைந்த திட்டம் இன்மை பிரச்சினையாக இனங்காணப்பட்டு உள்ளதுடன், குறித்த ஆண்டில் அச் சவாலை முறியடிக்குமாக நிறுவனம் அதனை வெற்றி கொண்டு எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான ஒட்டுமொத்த இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அது 2017 இல் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளது.

- செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கடந்த 6 ஆண்டு களாக முறையான கண்காணிப்புப் பணியோ, தொடர் நடவடிக்கைகளோ இடம்பெறவில்லை. ஆதலால், பல்வேறு சவால்களினூடாக ஓராண்டினுள் அந்நிலைமை இற்றைவரையாக்கப்பட்டது.

05 2017 - 2019 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட உள்ள பணிகள் மற்றும் அது தொடர்பான மொத்த கிரய மதிப்பீடு

| இல. | அலகு/செயற்திட்டம் | வருடாந்த மதிப்பீடு ரூபா |
|---|---|---|
| I. | ரணவிரு அமைப்புக்களின் அலகு | 16,370,000.00 |
| II. | ரணவிரு மகளிர் அலகு | 38,695,000.00 |
| III. | தரவு, தகவல் மற்றும் ரணவிரு வியாபார மேம்பாட்டு அலகு | 38800,000.00 |
| IV. | 'சுவ சக்தி' அலகு | 25,780,000,00 |
| V. | ரஉடல் உள விருத்தி அலகு | 149,220,000.00 |
| VI. | கல்வி மற்றும் திறன் விருத்தி மேம்பாட்டு அலகு | 57,615,000.00 |
| VII. | முகாமைத்துவ மற்றும் முயற்சியாண்மை அலகு | 338,852,750.00 |
| VIII. | ஆதன மற்றும் நிதிசார் விருத்தி அலகு | 76,470,000.00 |
| IX. | 'விரு பிரதிபா அலகு | 17,614,500.00 |
| X. | ரணவிரு கிராமிய அலகு | 7,040,000.00 |
| XI. | விசேட செயற்திட்ட அலகு | |
| XII. | ஊடக அலகு | 13,429,000.00 |
| XIII. | நிர்வாகச் செலவினம் | 71,315,000.00 |
| XIV. | முலதனச் செலவினம் | 37,172,000.00 |
| XV. | நலன்புரிச் செலவினம் | |
| | மொத்தம் | 1,194,370,250.00 |

# 24
# பாதுகாப்பு சேவை ஆணை மற்றும் பணியாட்கள் கல்லூரி

## 24.1 நிலைமை பற்றிய பொதுவான கண்ணோட்டம்

முப்படைகளின் நடுத்தர வகுப்பிலுள்ள அதிகாரிகளுக்கு இராணுவக் கல்வியை வழங்கும் நிறுவனம் பாதுகாப்பு சேவை ஆணை மற்றும் பணியாட்கள் கல்லூரி (DSCSC) ஆகும். கூட்டுச் சூழலில் கூட்டு நடவடிக்கை சம்பந்தமான முதலாவது கற்கை அனுபவத்தை னுளுஊளுஊ வழங்குகிறது. DSCSC ஐப் பொறுத்த வரையில் 2015ம் ஆண்டானது கல்வி மற்றும் நிருவாக செயற்பாடுகளுக்கு ஒரு வெற்றிகரமான ஆண்டாகும். தென் ஆசியாவில் இராணுவ கற்கைக்கான முன்னணி நிறுவனங்களில் ஒன்று என்னும் அங்கீகாரத்தை இது தொடர்ந்தும் நிலைநிறுத்துகிறது.

முகாமைத்துவ சபையால் DSCSC நிர்வகிக்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சால் நியமிக்கப்பட்ட சிவிலியன் ஊழியர்கள் மற்றும் முப்படைகளில் சேவையிலுள்ள பணியாளர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த ஊநுழு ஆல் DSCSCஇன் பிரதான நிறைவேற்று அதிகாரி கமாண்டர் ஆகும்.

2015ம் ஆண்டு பாடநெறி இல.09 நடத்தப்பட்டது. இப் பாடநெறி 5 ஜனவரி 2015ல் ஆரம்பித்து 18 டிசெம்பர் 2015ல் முடிவடைந்தது.

10 அடிப்படை பெறுமானங்களையும் அத்தகைய பெறுமானங்கள் சம்பந்தமான அபிப்பிராயங்களையும் கல்லூரி 2015ம் ஆண்டில் மேற்கொண்டது. கல்லூரியின் அனைத்து செயற்துறைகளிலும் இப் பெறுமானம் வலியுறுத்தப்பட்டது. இவ் அடிப்படை பெறுமானத்தை நிலைநிறுத்துவதுவதன் நோக்கம் ஒரு நபரின் ஒட்டுமொத்த பண்புகளை மேம்படுத்துவதுவதும் அவரது சேவையின் பங்களிப்பால் நிறுவனத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்வது மாகும் அடிப்படை பெறுமானங்களாவன: கற்றல், கௌரவம், மரியாதை, நல்லொழுக்கம், உயர்வு, புதுமை, பொறுப்பு, தொழில்தேர்ச்சி, குறிப்பணி ஆணை, பண்புகெடாத சூழல், உந்து கொள்கை, பொது அறிவு

## 24.2 ஜனவரியிலிருந்து டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் நிறைவேற்றியவை

24.2.1 2015ம் ஆண்டிற்கான செயற் திட்டத்தில் முக்கிய விடயங்கள்: 2013-2017ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட செயற் திட்டத்தில் 7 பிரதான முதலீட்டுத் திட்டங்கள் அடையாளம் காணப் பட்டன.

- மாணவ அலுவலகர்களின் திருமணம் செய்தோருக்கான தங்குமிடம்
- DSCSC இனது பிரதான அலுவலகக் கட்டிடம்
- விளையாட்டு மைதானம் மற்றும் பார்வையாளர் அரங்கு
- பாதுகாப்பு சுவர்
- உள்ளக வீதி வலைப்பின்னல்
- திருமணம் செய்தோருக்கான வதிவிடத் திற்கு இணைய மற்றும் வலைப்பின்னல் வசதி
- நீச்சல் தடாகம்

மேற்குறிப்பிட்ட திட்டத்தில் ஆறு வீடுகளைக் கொண்ட திருமணம் செய்தோருக்கான ஒரு கட்டிடத்தொகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொன்றும் ஆறு வீடுகளைக் கொண்ட இரண்டு கட்டிடத் தொகுதிக்கான நிருமாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ் வருடத்திற்கான நிருமாணச் செலவு ரூபா 65.4 மில்லியன் ஆகும். இவ் வருடத்தில் இணைய மற்றும் வலைப்பின்னல் வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டது. உள்ளக வீதிகளும் பூர்த்தி செய்யப்பட்டது

DSCSC இனது நோக்கம் மற்றும் குறிக்கோளை யும் அடையும் பொருட்டு கல்வித்திட்டங்கள் நடத்தப்பட்டன. முன் ஆண்டுகளைப் போன்றே கல்வித் திட்டங்களும் ஒரே மாதிரியாக இருந்தது. எனினும் கற்பித்தல் முறை புதுப்பிக்கப்பட்டது.

### 24.2.2 நிதிசார் முன்னேற்றம்

நிதித்துறை முன்னேற்றம் (மேம்பாடு) 2014ம் ஆண்டிலிருந்து முற்கொண்டு வரப்பட்ட ஏறத்தாழ ரூபா 30.2 மில்லியன் செலுத்தப்பட வேண்டிய தொகை 2015ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகையிலிருந்து செலுத் தப்பட்டது. 2015ம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவு கீழே தரப்பட்டுள்ளது

| தொடரிலக்கம் | பண வழஙகல் தலைப்பு | உப தலைப்பு | தொகை (ஏறத்தாள ரூபா மில்லியனில் | மொத்த ரூபா (ஏறத்தாள) மில்லியனில் |
|---|---|---|---|---|
| 1 | முதல் | சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் மேம் படுத்தல் | 52.9 | 189.6 |
| | | நிலையான சொத்துக் களைப் பெற்றுக் கொள்ளுதல் | 60.7 | |
| | | வேறு முதலீட்டுச் செலவினங்கள் | 76.0 | |
| 2. | மீண் டெழும் | சம்பளம் | 42.2 | 131.5 |
| | | வழங்கல் | 34.6 | |
| | | பராமரிப்பு | 13.2 | |
| | | ஒப்பந்த சேவை | 41.5 | |
| 3 | மொத்தம் | | | 321.1 |

### 24.2.3 பௌதீக முன்னேற்றம்

கல்வி: 2015ம் ஆண்டு நடத்தப்பட்ட அலுவலர்களுக்கான பாடநெறியில் 114 மாணவ அலுவலகர்கள் பங்குபற்றினர். இதில் இராணுவத்திலிருந்து 60 பேர், கடற்படையி லிருந்து 19 பேர், வான்படையிலிருந்து 19 பேர் நிதி அமைச்சிலிருந்து 1 நிருவாக உத்தி யோகத்தர் 10 நாடுகளை பிரதிநிதிப்படுத்தும் 15 வெளிநாட்டு மாணவர்கள் உள்ளடங்குவர். பாடநெறியில் பங்குகொண்ட 93% மாணவ அலுவலகர்கள் 'சித்தியடைந்த அலுவலகர்கள் கல்லூரி' (psc) என்னும் சிறப்பு பட்டத்தையும் 62மூ அலுவலகர்கள் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத் தால் வழங்கப்படும் முதுமானிப்பட்ட பாடநெறிக் கும் தெரிவு செய்யப்பட்டனர். பாடநெறி 10 க்கான பட்டமளிப்பு நிகழ்வு 2015ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17ம் திகதி நடைபெற்றது.

உட்கட்டமைப்பு : மீளாய்வுக்கான காலத்தில் கல்லூரிக்கு பொருத்தமான முறையான தரத்தில் கட்டிடங்களை வைத்திருக்கும் பொருட்டு அவற்றை மறுசீரமைப்பதற்கு ரூபா 52.9 மில்லியன் செலவு செய்யப்பட்டது. ரூபா 65.6 மில்லியன் செலவில் மாணவ அலுவலகர்களில் திருமணமானவர்களுக்கான 2 கட்டிடத் தொகுதிகள், ஆசிரியர்களின் திருமணமாகாதவர்களுக்கான 1 கட்டிடம் போன்றவற்றை உள்ளடக்கிய 3 புதிய கட்டிடத் தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டன. கல்லூரியின் பிரசுரப்பிரிவு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவைகளை அபிவிருத்தி செய்ய ரூபா 29.1 மில்லியன் ' பொறி மற்றும் இயந்திரம்' என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட்டது. இணைய வசதிகள் மற்றும் கணிணி வலைப்பின்னல் போன்றவற்றை அபிவிருத்தி செய்ய ரூபா 10.7 மில்லியனை கல்லூரி செலவு செய்தது.

அலுவலகர்களின் கொள்திறனை அபிவிருத்தி செய்தல்: கற்றல் நிறுவனம் என்னும் எண்ணக்கருவின் கீழ் அலுவலகர்களின் கொள்திறன் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இங்கு ஒவ்வொரு ஊழியரும் (கற்பித்தல் மற்றும் நிருவாகம்) கற்றலÆகற்பித்தல் திட்டங்களுக்கு உட்படுத்தப்படுவர். வருடம் தோறும் ஒவ்வொரு பாடநெறிக்கும் நடத்தப்படும் வெளிநாட்டு கற்றல் சுற்றுலாவிற்கு மாணவ அலுவலகர்களுடன் கற்பித்தல் ஆசிரியர்கள் அனைவரும் உள்ளடக்கப்படுவர். 2015ம் ஆண்டில் மொத்தம் 8 நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளப்பட்டது. கற்பிக்கும் பணியாட்களுக்கு சிறந்த வெளிப்பாட்டை வழங்கும் பொருட்டு பங்களாதேச பாதுகாப்பு சேவை ஆணை மற்றும் பணியாட்கள் கல்லூரியுடன் சேர்ந்து பரிமாற்ற பட்டறை நடத்தப்பட்டது. ஒவ்வொரு கல்லூ ரியிலிருந்தும் கற்பிக்கும் பணியாட்கள் வருகை தந்து அவர்களது மற்ற கல்லூரி கற்பிக்கும் பணியாட்களுடன் கலந்து பட்டறை நடத்தினர். இத்தகைய திசையில் இன்னுமொரு படிமுறை என்னவெனில் வெளிநாட்டு பணியாட்கள் கல்லூரிக்கு இக் கல்லூரியின் பாடவிதானத்தின் உள்ளறிவைப் பெற்றுக் கொளளும் பொருட்டு அவர்களின் கற்பித்தல் பணியாட்கள் குழுவை அனுப்பும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய பாகிஸ்தான் பாதுகாப்பு சேவை ஆணை மற்றும் பணியாட்கள் கல்லூரியின் அறிவுறுத்தல் வழங்கும் பணியாட்கள் மற்றும் மலேசிய ஆயுதப்படை பணியாட்கள் கல்லூரி உறுப்பினர்கள் வருகை தந்தனர். இம் முயற்சியை மேலும் மேம்படுத்தும் பொருட்டு வருடத்தின் பிற்பகுதியில் இந்திய ஆயுதப்படைக் குழுவினரும் இராணுவ தொழில்நுட்ப கற்பித்தல் பாடநெறியை போதிக்க வருகை தந்தனர். தங்களது தொழில்சார் அறிவை மேம்படுத்தம் பொருட்டு கல்வித்துறை பணியாட்கள் மற்றும் நிருவாகத்துறை பணியாட்களுக்கு உள்ளக பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சி மற்றும் விரிவுரை போன்ற வடிவங்களில் ஆகக் குறைந்தது வாரத்திற்கு ஒரு தடவை ஒவ்வொரு பணியாட்கள் பிரிவினருக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் வெளிவாரி வளவாளர்களால் விரிவுரைÆ பட்டறை நடத்தப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் சிறந்த வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ளும் பொருட்டு பணியாட்கள் வெளி நிறுவனங்களுக்கு சென்றனர். பயிற்சியில் சிவிலியன் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்பட்டனர்.

### 24.3 கற்றறிந்த பாடங்கள் :

கண்டிப்பான நிதிக்கட்டுப்பாடுடன் வெளிப்படைத் தன்மையான கொள்வனவு திட்டத்தை கல்லூ ரி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக

இருந்தது. திட்டங்களுக்கு பொறுப்பான அனைத்து நிறைவேற்று தர அலுவலகர் களிடமிருந்து அவர்களின் தொலைநோக்கு கருத்துகள் வேண்டப்பட்டன. அவர்கள் ஒதுக்கப்பட்ட, செலவழிக்கப்பட்ட மற்றும் மீதமுள்ள நிதி சம்பந்தமாக விழிப்புடன் தொடர்ந்திருக்கும்படி வேண்டப்பட்டனர். இத்தகைய கண்டிப்பான நிதிக் கட்டுப்பாடு நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்தி வினைத்திற னையும் கல்லூரியின் சுழுஜ ஐயும் அதிகரிக்க உதவியது.

24.4 பிரச்சினைகளும் சவால்களும்

2014ம் ஆண்டிலிருந்து செலுத்தவேண்டி நிலுவையி லுள்ள மீதி ஏறத்தாள ரூபா 30.2 மில்லியன் முன் கொண்டுவரப்பட்டது ஒரு பிரச்சினையாகும். எனினும் 2015ம் ஆண்டிலிருந்து 2016ம் ஆண்டிற்கு முன்கொண்டு சென்ற மீதி சைபராகும். மற்றுமொரு பிரச்சினைக்குரிய விடயம் 2014ம் ஆண்டிலிருந்து கடமை தவறும் கட்டிட ஒப்பந்தக்காரர். இவ் விடயத்தை கல்லூரி மிகக் கடுமையாக முன்னெடுத்துச் சென்றதுடன் திட்டத்தை பூர்த்தி செய்ய முடிந்தது.

குறிப்பிடத்தக்க சவால் யாதெனில் கல்வி மற்றும் நிருவாக செயற்பாட்டில் உயர் தரத்தை உறுதிப்படுத்தவதாகும். பணியாட்களின் வழங்கப்பட்ட வேலையைப்பற்றிய விழிப்புணர்வு, போதிய ஆற்றல்,பல தரப்பட்ட விடயங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் என்பன இத்தகைய உயர் தரத்தை உறுதிப்படுத்த தேவையான முக்கிய பருப்பொருட்களாகும். பணியாட்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவது மற்றுமொரு முக்கிய விடயமாகும். பாடநெறிகளில் பங்குபற்றும் வெளிநாட்டு மற்றும் அரசதுறை ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கல்லூரி உத்தேசித்துள்ளது.

24.5 எதிர்காலத் திட்டங்கள்

கல்வித்துறை: நவீன யுத்த பயிற்சி நிலையமொன்றை நிருமாணிக்க கல்லூரி உத்தேசித்துள்ளது. கற்பித்தலுக்கு இது உயர்தர கருவியாக அமையும். கல்லூரி விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சு இதற்கு தேவைப்படும் மென்பொருட்களை உருவாக்கும்படி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தை வேண்டி யுள்ளது. இந்நிலையம் தாபிக்கப்பட்டதும் யுத்தக்கள நிலையை தோற்றுவிக்கவும் சோதனை செய்யவும் உபயோகப்படுத்தப் படுவதோடு மாணவ ஆணை அலுவலகர்கள் மற்றும் பணியாட்களுக்கு தேவையான விடயங்களை கற்பிக்க கூடியதாக இருக்கும். இதற்கு செலவிட உத்தேசித்துள்ள தொகை ரூபா 43.4 மில்லியன். இதன் விளைவாக இராணுவக்கல்வியில் நவீன செயல் வல்ல மையை DSCSC பெற்றுக்கொள்ளும்..

அமைப்பு : மாணவர்கள் தாங்கள் நடத்தும் ஆராய்ச்சிக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு கல்லூ ரியானது ஒரு தாபனத்தை அமைக்க வேண்டியுள்ளது. ஒருங்கிணைக்கும் பிரிவின் கீழ் கல்விக் கிளையொன்றை திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக் கிளை ஆய்வு சம்பந்தமான செயற்பாடுகளை எடுத்துக்கொள்ளும். பணியாட்களின் வெற்றிடம் முக்கியமாக சீருடை தரித்த ஊழியர்களின் வெற்றிடம் நிரப்பப்படல் வேண்டும். தாபனத்துடன் கூட்டிணைக்க அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ‘பயிற்சி ஆதரவு’ படைவீரர்கள் தேவைப்படுகிறது. இவ்விரு திட்டங்களுக்கும் ஆரம்ப நிதி முதலீடு எதிர்பார்க்கப்படவில்லை.

முதல் : DSCSC இன் நடுத்தரகால அபிவிருத்தி திட்டத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முக்கிய பங்கை வகிக்கிறது. பணியாட்களுக்கான கற்கை நெறி தங்கியிருந்து பயிலும் பாடநெறியாதலால் பாடநெறி காலத்தில் அவர்களுக்கு திருமணமானவர்கள் வதியும் வாசஸ்தலமும் அதனுடன் மின்சாரம், நீர் தொலைபேசி வசதிகளும் வழங்கப்படல் வேண்டும். அடுத்த மூன்றாண்டு காலப்பகுதிகு இதற்கான மூலதனம் ரூபா 120 மில்லியன் ஆகும். இன்னும் சில ஆண்டுக்குள் ஆகக் குறைந்தது 40மூ மாணவ அலுவலகர்களுக்கு திருமணமானவர்களுக்கான வாசஸ்தலத்தை வழங்குவது நோக்கமாகும். புதிய வாசிக சாலைக் கட்டிடமும் பரீட்சை மண்டபமும் திட்டத்திலுண்டு. இதற்கான செலவு ரூபா 127 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த நடுத்தர காலச் செயற்பாடு யாதெனில் கல்லூ ரியின் வாகனத்தொகுதியை பலப்படுத்து வதாகும். சில வாகனங்கள் பழமையடைந் துள்ளதால் அவைகளுக்குப் பதிலாக புதிய வாகனங்களை தருவிக்க வேண்டியுள்ளது.

## 25
## பாதுகாப்பு சேவைகள் கல்லூரி

### 25.1 அறிமுகம்

### நிறுவனத்தைப் பற்றிய பொதுவான மேல்நோக்கு

பாதுகாப்பு சேவைகள் கல்லூரி 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பு 02 மலே வீதியில் ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் ஒரு தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. பிரபல பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை சேர்ப்பது தொடர்பில் ஆயுதப் படையினரும் பொலீசாரும் தற்போது முகங்கொடுக்கும் சவால்களை இலகுபடுத்துவதற்காக பா.சே.க. பிரதானமாக ஸ்தாபிக்கப்பட்டது. ஒழுக்கச் சூழலின் கீழ் உயர் தரத்திலான சமனான கல்வியை வழங்குவதற்கான அரசின் முயற்சிக்கு துணை புரியும் வகையிலான நிர்வாக முறைமை ஒன்றை வடிவமைத்து, விருத்தி செய்து, பரிசோதிப்பதற்கும் இது துணையாயமையும். பா.சே.க., கல்வி அமைச்சின் நேரடி வழிகாட்டலின் கீழ் இயங்குவதோடு, அதன் நிர்வாகக் கட்டுப்பாடு பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பின்னர், ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்பு சேவைகள் கல்லூரிகளை நிறுவுவதற்கும், கொழும்பு பா.சே.க. யை இந்த முறைமையின் மத்திய நிலையமாக அமைப்பதற்கும் ஒரு விசேட கல்வித் திட்டமாக பா.சே.க. கருத்திட்டத்தை விருத்தி செய்வதற்கான அங்கீகாரம் அமைச்சரவையினால் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இரண்டு பாடசாலைகள் இயங்குகின்றன (கொழும்பு பா.சே.க., குருனாகலை பா.சே.க.)


#### 25.1.1 குறிக்கோள்கள்

பிரபல பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை சேர்ப்பது தொடர்பாக ஆயுதப் படையினரும் பொலீசாரும் தற்போது முகங்கொடுக்கும் சவால்களை இலகுபடுத்துவது.
ஒழுக்கச் சூழலின் கீழ் உயர் தரத்திலான சமனான கல்வியை வழங்குவதற்கான அரசின் முயற்சிக்கு உதவி செய்யும் வகையிலான நிர்வாக முறைமை ஒன்றை வடிவமைத்து, விருத்தி செய்து, பரிசோதிப்பது.

முப்படைகளினதும் பொலீசினதும் உள்ளீடுகளை யும், முகாமைத்துவ ஆற்றல்களையும் பெற்று, கணணி எழுத்தாற்றல், செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வி, மொழித் திறன், நுண்கலைக் கல்வி, வாசித்தல் பழக்கம், விளையாட்டு செயற்பாடுகள் மற்றும் வசதிகள் போன்ற தற்கால கல்விப் போக்குகளை ஊக்குவித்தல்.
கல்வி அமைச்சிலிருந்து உள்வாங்கப்பட்ட துறை சார்ந்தவர்களினதும் கல்வி ஊழியர் குலாமினதும் உதவியோடு உயர் தரமான கல்வியை வழங்குதல்.
துரிதமாக வளர்ந்து வரும் உலகின் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆங்கில மொழியில் உயர் தரத்தை எய்துமுகமாக மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்துதல்.

### பாதுகாப்பு சேவைகள் கல்லூரி - கொழும்பு

கொழும்பு பா.சே.க. ஒரு கலவன் பாடசாலையாக இயங்குவதோடு, அதன் தற்போதைய மாணவர் தொகை 2,500 ஆகும். ஆண்டு 13 வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்போது அத்தொகை 3,600 ஐ எட்டும். சகல கல்விசார் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் காத்திரமானதும் பரிபூரணமானதுமான அணுகுமுறையொன்றை கல்லூரி கைக்கொள்கின்றது. கொழும்பு பாதுகாப்பு சேவைகள் கல்லூரியானது, கல்வி அமைசினதும் பாதுகாப்பு அமைசினதும் வழிகாட்டலின்படி, அறிவைபயன்படுத்தத்தக்க உயர் வளமாக கருதுகின்றது.





### பாதுகாப்பு சேவைகள் கல்லூரி – குருனாகலை

குருனாகலை பாதுகாப்பு சேவைகள் கல்லூரி, 2009, ஜனவரி 29 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு, கலவன் பாடசாலையொன்றாகச் செயல்படுகின்றது. அதன் மாணவர் தொகை 846 ம், ஆசிரியர் எண்ணிக்கை 28 ம் ஆகும்.

## 25.1 கல்வி அமைச்சினதும், பாதுகாப்பு அமைச்சினதும் பொறுப்புக்கள்

| கல்வி அமைச்சு | பாதுகாப்பு அமைச்சு |
|---|---|
| 1. கல்விசார் ஊழியர்களை வழங்குதல். | 1. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும் விருத்தி செய்தலும். |
| 2. அரச பாடசாலைக்குரிய வசதிகளை வழங்குதல். | 2. கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் அனுமதிக்கான பிரமாணங்களையும் கொள்கையையும் பரிபாலித்தல். |
| 3. பா.சே.க.யின் சுமுகமான நிர்வாகத்துக்கு வழி செய்யும் விதத்தில் அதற்குத் தேவையான பாடசாலை பாட விதானம், ஆசிரிய பயிற்சி, பரீட்சை செயற்பாடு, தர உறுதிப்பாடு, தர நிர்ணயம் தொடர்பான ஆலோசனையும் துறைசார் துணையும் வழங்குதல். | 3. கல்வித் தரத்தை கண்காணித்தல். |
| 4. கல்வித் தரத்தை கண்காணித்தல். | 4. பரிபாலன சபையினூடாக நிறுவனத்தின் பாதுகாப்பு அம்சங்களை நடைமுறைத்தலும் கண்காணித்தலும். |
| | 5. கல்வியுடன் தொடர்பான விடயங்களில் தொடர்பை ஏற்படுத்தி, பேணுதல். |

## 25.2 2015 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் சாதனைகள்

25.2.1 விடுதித் தொகுதி நிர்மாணம் - விடுதித் தொகுதியொன்றை நிர்மாணிப்பதன் பிரதான நோக்கம், தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிட மற்றும் உணவு விடுதி வசதிகளை செய்து கொடுப்பதாகும். மேலும் குறிப்பாக, அவர்கள் தமது படிப்பில் திறமை காட்டுவதற்கும், நல்லாரோக்கியத்தையும், பாதுகாப்பான வாழ்வையும் பேணுவதற்கும், அதே வேளை, நவீன வசதிகளை அனுபவிப்பதற்கும், ஆளுமை விருத்திக்கு அவசியமான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் வழியமைப்பதாகும்.

விடுதி வசதிகளை வழங்குவதற்காக, பா.சே.க. கூட்டுத் திட்டத்தின்படி, 2015 - 2017 காலவிடையில் இடைக்கால அபிவிருத்தி திட்டமாக நான்கு மாடி விடுதித் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக (ஆற்கூலியும் வரிகளும் நீங்கலாக) கீழ் வரும் விபரப்படி 448.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுடன் அமைச்சரவை அங்கீகாரம் (2014-07-28 ஆம் திகதிய



FRONT ELEVATIONS

14/1078/503/098) வழங்கப்பட்டுள்ளது

2015 ஆம் ஆண்டுக்கான 100 மில்லியன் ரூபா, எதிர்பார்க்கப்பட்ட நிர்ணய திகதிக்கு 10 மாதங்கள் தாமதித்து

2015 நவம்பர் மாதம் கிடைக்கப்பெற்றது. ஆனபடியினால், 2015 செயல் திட்டத்திற்கமைவாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைந்து கொள்வது சிரமமாயிருந்தது. 2015 டிசம்பர் 31 வரையான முன்னேற்ற விபரம் பின்வருமாறு,

| தொடர் இல. | செயல் திட்டம் | செயற்பாடு | வருடாந்த இலக்கு | பௌதீக கட்டமைப்பு | | 2015 ஒதுக்கீடு | நிதியியல் | | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | டிசம்பர் 31க்கான இலக்கு (%) | 2015.12.31 சாதனை (%) | | 2015.12.31 இலக்கு | 2015.12.31 சாதனை | |
| 01 | | குருநாகலை பா. சே. க. நிர்மாணம் | 100 % | 100 % | 60 % | 14.2 மில்லியன் ரூபா | 100 % | 85 % | பொ. சே. ஒப்பந்த எதி |

| விபரம் | ஒப்பந்தக்காரர் | பௌதீக கட்டமைப்பு நிதியியல் | | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | பௌதீக கட்டமைப்பு | நிதியியல் | |
| விடுதித் தொகுதியின் முதல் மாடி வரையான நிர்மாணம் | இலங்கை இராணுவத்தின் 6 வது பொறியியற் சேவை பட்டாளம் | 30 % | 18.1 % (100 மில்லியனில்) | நிதித் தாமதத்தின் காரணமாக பணிகள் தாமதமுற்றன |

குருனாகலை பாதுகாப்பு சேவைகள் கல்லூரியின் கட்டட நிர்மாணம் - மேற்குறிப்பிடப்பட்டதற்கு மேலாக மற்றுமொரு கட்டட நிர்மாணத் திட்டம் குருனாகலை பாதுகாப்பு சேவைகள் கல்லூரியில் கடற்படை யினால் மேற்கொள்ளப்படுவதோடு, அது 20





25.5 பின்வரும் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன

| செயற்பாடு | நடாத்தப்பட்டது | இலக்கு |
|---|---|---|
| 1. உற்பத்தித் திறன் அபிவிருத்தி மற்றும் 5 �ளு திட்டம் பற்றிய விழிப்புணர்வு செயற்றிட்டம் | இலங்கை தேசிய உற்பத்தித் திறன் செயலகம் | நிர்வாக பணிக் குலாம் |
| 2. வீதி ஒழுங்கு முறை பற்றிய விழிப்புணர்வு செயற்றிட்டம் | இலங்கை பொலிஸ் போக்குவரத்து பிரிவு | சாரதிகளும் போக்குவரத்து பிரிவு பணிக் குலாமும் |
| 3. வாராந்த பயிற்சி செயற்றிட்டம் | வருகைதரு விரிவுரையாளர்கள் / நிறுவன பணிக் குலாம் | நிர்வாக பணிக் குலாம் |

25.3 அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட பணிகள்

2015 ஆம் ஆண்டுக்கு கோரப்பட்ட ஒதுக்கீடுகள் கிடைக்காமையினால் பூர்த்தி செய்யப்படாமல் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள்.

| விபரம் | ஒப்பந்தக்காரர் | குறிப்புரைகள் |
|---|---|---|
| 1 எஞ்சிய விடுதிக் கட்டட நிர்மாணப் பணிகள் | இலங்கை இராணுவத்தின் 6 வது பொறியியற் சேவை பட்டாளம் | ரூபா மில். 200 |
| 2. கட்டடங்களுக்கு நீர்த் தடைப்பானிடுவதில் எஞ்சிய பணிகள் | இலங்கை இராணுவத்தின் 6 வது பொறியியற் சேவை பட்டாளம் | |
| 3. நிர்வாகத் தொகுதிக்கு அலுமீனிய யன்னல்கள் பொருத்தும் பணிகளை பூர்த்தி செய்தல் | லங்கா அலுமீனியம் (தனி) வ-ட நிறுவனம் | |
| 4. பாலர் பிரிவில் தீ தடுப்பு முறைமை பொருத்துதல் | பில்டிங் சேர்விசஸ் (தனி) வ-ட நிறுவனம். | |
| 5. குருனாகலை பாதுகாப்பு சேவைகள் கல்லூரயில் தரை வடிவமைப்பு மற்றும் எஞ்சியுள்ள நிர்மாணப் பணிகள் | இலங்கை கடற்படை | |

25.4 மீளாய்வுக்குரிய காலப் பகுதியின் முன்னேற்றம் பற்றிய பொது மதிப்பீடும், கற்றுக் கொண்ட பாடங்களும், நடைமுறைப்படுத்துவதில் நிறுவனம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் சவால்களும்.
பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பின் கீழ், இராணுவத்தின் பொறியியற் சேவை பட்டாளத்தினால் நிர்மாணப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டமையினால், வெளி ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு செய்வதை விட அதிக திறமையாக இருந்தன. நேர காலத்தில் ஒதுக்கீடுகள் கிடைக்காமல் தாமதப்படுவதே திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரதான சிக்கலாகும். உரிய வருடத்திற்கு திட்டமிட்டவாறு திட்டங்களை திருப்திகரமாக நிறைவேற்றுவதற்கு இந்த பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதாயுள்ளது.

நிர்வாகப் பிரிவின் கீழ் பாடசாலையினால் செயற்படுத்தப்படும் வசதிகளை பராமரிப்பதற்கான ஒதுக்கீடு வழங்கப்படாமையினால், நிதி செலவினங்களுக்குரிய ஒரே நிதி வளமாக இருப்பது பாசே.க. நிதியாகும். உத்தேச வருடாந்த வரவு-செலவு திட்டத்தின்படி, உத்தேச செலவினம் பாசே.க. உத்தேச வருமானத்துடன் இசைவானதாக இருப்பதில்லை. எனவே, நிதி பெற்றுக்கொள்வதற்கான போதுமான வழிமுறையொன்று அவசியமாயுள்ளது.

25.5

இடைக் காலப் பகுதியில் (2017 - 2019) நிறுவனத்தின் விருத்திக்கு முன்வைக்கப்படும் செயற்பாடுகள்

| செயற்பாடு | அண்ணளவான செலவு | நன்மைகள் |
|---|---|---|
| 1. சூரிய வலை மாணி முறைமை | ரூ.33 மில். | • மின்சார பட்டியல் செலவினத்தை ஆகவும் குறைத்தல்.<br>• சூழல் மாசடைவதை ஆகவும் குறைப்பதும், பசுமைக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்தலும். |
| 2. விளையாட்டு மைதானம் ஒன்றை நிர்மாணித்தல் | | • இணைப்பாடவிதான மற்றும் விளையாட்டு செயற்பாடுகளை மேம்படுத்தல். |

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்கு புறம்பாக, 3 ஆம் பந்தியில் (அட்டவணை 3.1) குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2016 ஆம் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள எஞ்சியிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், எழுத்தாதிகளற்ற கற்றல் கலாசாரத்தை விருத்தி செய்யு முகமாக, முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும்.